M. L. A. Debates

Official Report

1967 - July

Vol. 5, No. 5

DIGITIZED

D
V211,31'N67
N67.5.5
65026

RRMO 210/88 ... K50

வெளியீடு—23—5—1968]
Issued—23—5—1968]

MADRAS STATE ARCHIVES
4963/L
22 JUL 1968
MADRAS
770

தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு
OFFICIAL REPORT

திங்கட்கிழமை, 1967 ஜூலை 17

Monday, 17th July 1967

தொகுதி V—எண். 5

Volume V—No. 5

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

Legislative Assembly Department
Fort St. George, Madras-9

V.XII. 31. N67
N67.5.5

V211, 31 N67
N67. 5. 5
MADRAS ... ARCHIVES
22 JUL 1968
65026

உள்ளடக்கம்

	பக்கங்கள்
1 வினாக்கள்—விடைகள்	489–518 561–566
2. ஒற்றிவைப்புத் தீர்மானம்—	
கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விகிதாச்சாரப்ப[illegible] கிடைக்காமை	518
3. கவன ஈர்ப்பு—	
மருத்துவக் கல்லூரிகளில் சே[illegible] மாணவர்களிடமிருந்து உறுதிமொழி பெறு[illegible]	519–520
4. அறிக்கை அளித்தல்—	
உரிமைக் குழுவின் அறிக்கை—தி[illegible] சிதம்பரநாத நாடார் பேரவைத் தலைமைமீது ஒருதலைக் குற்றம் சாட்டியது குறித்து ..	520–521
5. அரசினர் மசோதாக்கள்—	
(அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967)	521–522
(இ) சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 11/1967) ..	523–525
(உ) நிலவுடைமைகள் (நடவடிக்கைகளின் நிறைவேற்றத்தை நிறுத்திவைத்தல்) குறித்த (தமிழ்நாடு திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 9/1967).	525–527
(எ) தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதனின்று பாதுகாப்பு அளித்தல்) திருத்த மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 10/1967)	527–530
(ஐ) தமிழ்நாடு (மாற்றலாகியுள்ள பகுதி), ஜென்மீகரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண். 12/1967)	530–534
(ஒ) தமிழ்நாடு நிலவரி தண்ணீர்த் தீர்வை (மேல்வரி) (ரத்து) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 8/1967).	534–536
(ஔ) தமிழ்நாடு பொது விற்பனைவரி (இரண்டாம், திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 15/1967)	536–537
(அஅ) தமிழ்நாடு இனம்கள் (துணை) திருத்த மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 16/1967).	537–541
(இஇ) சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 17/1967)	541–542
(உஉ) தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967)	542–553

பக்கங்கள்.

(எ) இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 13/1967) 554-559

(ஐஐ) இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா, 1967 560

6. அரசினர் தீர்மானம்—

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம். 523

7. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள் 560

தமிழக சட்டப் பேரவை

திங்கட்கிழமை, 1967 ஜூலை 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல், வினாக்கள்—விடைகள். உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

Price of rice and dhall

*353 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) the prevailing prices in Government ration shops for rice of first sort, second sort and ordinary variety during the month of March 1967 ; and

(*b*) the prevailing prices for the different sorts of rice in open market in the City of Madras ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1967-ம் ஆண்டு மே மாதம் 5-ம் தேதியன்று இருந்த-நிலவரப்படி.

	கிலோ ஒன்றுக்கு ரூ.	பை.
புழுங்கலரிசி (சிறந்த ரகம்) ..	0	90
புழுங்கலரிசி (நடுத்தரம்) ..	0	77
பச்சரிசி (சிறந்த ரகம்)	0	92
பச்சரிசி (நடுத்தரம்)	0	79

(ஆ) சென்னையில், வெளிச் சந்தையிலே தெருக்களில் விற்பனை செய்பவர்களால் விற்கப்படும் அரிசி விலைகள் இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன. பெரம்பூர், வண்ணாரப்பேட்டை பகுதிகளில் நிலவிய பின்வரும் விலை வீதங்கள் எடுத்துக்காட்டாகத் தரப்படுகின்றன.

	கிலோ ஒன்றுக்கு ரூ.	பை.
புழுங்கலரிசி 1-ம் தரம்	1	10
புழுங்கலரிசி 2-ம் தரம்	1	00
பச்சரிசி 1-ம் தரம்	1	20
பச்சரிசி 2-ம் தரம்	1	10

திரு. கே. விநாயகம் : ஐயா, நான் கேட்ட கேள்வி மார்ச் மாதத்திலே என்ன விலை என்பது. ஆனால் அமைச்சர் அவர்கள், மே மாதத்தில் என்ன விலை இருந்தது என்பதை எடுத்துச் சொன்னார்கள் மார்ச் மாத விலை என்ன என்று சொன்னால் அதிலிருந்து இப்போது விலை. உயர்ந்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டு மாதமும் ஒரே விலை இருந்ததால் தான் பதில் அளிக்கிற நேரத்திலே இருந்த விலையைத் தெரிவித்திருக்கிறேன்.

DR. H. V. HANDE : Is the HON. Minister aware of the fact that in most of the shops, second sort rice is sold as first sort rice. It is going on for some years. There is no hard and fast rule by which one can distinguish between first sort and second sort. Because of this, most of the public, especially, the poor people are cheated by the shop-keepers. Is the Hon. Minister aware of this and if so, may I know the concrete definite steps that he proposes to take to prevent such kind of cheating of the public by the shop-keepers ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அங்கத்தினருடைய புகார் முற்றிலும் சரியானது அல்ல. உண்மைக்கு நேர்மாறானதாகும். இரண்டாவது ரக அரிசியை முதல் ரகத்தைச் சேர்ந்தது என்று சொல்வது பற்றி பொறுப்போடு புகார் சொல்கிறார்கள் என்று கூடச் சொல்லமாட்டேன். ஒரு வாரம் முதலாவது ரகத்தைச் கொடுக்கிறார்கள். இன்னொரு வாரம் இரண்டாவது ரகத்தைக் கொடுக்கிறார்கள். இரண்டாவது ரகம் என்று சொன்னால், அதற்குரிய விலையில் தான் விற்கப்படுகிறது. அவர்கள் இரண்டாவது ரகத்தை முதல் ரகம் என்று சொல்லி ஏமாற்றியது போல் சொன்னார்கள். அப்படியென்றால் அதற்கான பில் முதலியவற்றைக் கொண்டுவந்தால் பரிசீலனை செய்வதற்குத் தயாராய் இருக்கிறேன். கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறானது என்று மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

THIRU K. VINAYAKAM : Sir, when there is statutory rationing introduced in the city of Madras, can the Government have any justification to have open market ? How else are the Government right in coming to the Assembly with the prices of rice sold in the open market ? Are the Government indirectly encouraging black-marketing also ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is not correct to say so. In areas where there is statutory rationing it excludes private trading in foodgrains. However, the Government have permitted the transport of about 10 Madras measures for personal consumption. If any street vendors sold rice under that concession, we do not take a serious view of it. The policy is to check black-marketing at the base and not cause harassment to the poor people.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், நெல் கொள்முதல் செய்யும் போது, ஒரு மாவட்டத்திலே நெல் கொள்முதல் செய்து அதை வேறொரு மாவட்டத்திற்குக் கொண்டு போகக்கூடிய நேரத்திலே அதனால் ஏற்படக் கூடிய செலவும் விலைவாசி உயர்வதற்குக் காரணமாக இருக்கிறது என்பது உண்மையா ? நெல்லை வாங்கிய பிறகு சரியான முறையில் உலர்த்தாமல் அப்படியே அரிசியாக வைக்கிற காரணத்தினால் அது மக்கிப் போகக்கூடிய, கெட்டுப்போகக்கூடிய நிலையில் இருக்கிறது என்ற தகவல் உண்மையா ? அப்படியென்றால் நெல்லை உலர்த்தி வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கண்டிப்பாக அப்படிப்பட்ட ஏற்பாடுகள் தான் செய்யப்பட்டு வருகின்றன என்று ஏற்கெனவே இந்த மன்றத்தில் சொன்னேன். க்வாலிடி கண்ட்ரோலுக்கு விசேஷ அதிகாரிகள் இப்போது நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : இப்போது அரிசியை மூன்று ரகங்களாகப் பிரித்திருக்கிறோம். அப்படியில்லாமல் சிவப்பு, வெள்ளை என்று இரண்டு ரகமாகப் பிரித்து விட்டால் தவறான பேச்சுகளுக்கு இடம் இல்லாமல் இருக்கும். முன்பு 8 ரகம், 10 ரகம் என்று வைத்திருந்தோம். இப்பொழுது மூன்று ரகங்களாக வைக்கப்பட்டிருக்கிறது. அப்படியில்லாமல் சிவப்பு, வெள்ளை என்று இரண்டு ரகமாகப் பிரித்து விட்டால் நல்லது என்பதால் சர்க்கார் அவ்வாறு செய்வதற்கு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தற்போது இருக்கும் நிலைமை தான் உசிதம் என்று அரசாங்கம் கருதுகிறது. கொள்முதல் திட்டத்திலே முதலாவது ரகம், இரண்டாவது ரகம், மூன்றாவது ரகம் என்று வைத்திருக்கிறோம். இது விற்பனைக்கு வருகிற நேரத்திலே இரண்டு ரகமாகத் தான் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : வெளி மார்க்கெட்டிலே விற்பனை செய்கின்ற உணவுப் பொருள்களை—நெல்லுக்கு அரசாங்கம் விலை நிர்ணயம் செய்கிற காரணத்தினாலே—தடை செய்வதற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வெளி மார்க்கெட்டில் நடக்கும் சிறிய சம்பவங்களைப் பற்றி பொதுவாகச் சொன்னேன். அது மாதிரி நடக்கிறது என்பது குறிப்பிடத்தக்க அளவிலே இல்லை.

திரு. கே. விநாயகம் : ஐயா, சர்க்காருடைய கொள்கை ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடவேண்டும் என்பது தான். மூன்று தரமான புழுங்கல் அரிசியை இந்த அளவிற்குக் கொடுப்பதற்கு நிர்ணயம் செய்திருந்தும்கூட, கிலோ கணக்கில் வாங்கி படிக் கணக்கில் மாற்றுவதிலே ஒரு படி அரிசி ஒரு ரூபாய் ஏழு பைசா வருகிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? ஆகவே அந்த ஏழு பைசாவைக் குறைத்துப் போடுவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதுபற்றி ஒரு அறிக்கை சிவில் சப்ளை கமிஷனர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அரிசியை "வே" பண்ணி தான் போட வேண்டியிருக்கிறது. இப்பொழுதெல்லாம் பழைய கணக்கிலே விற்பனை செய்வதில்லை. எடை போட்டுத் தான் விற்பனை செய்யவேண்டும். கடைக்காரர்கள் யாரோ சொல்லுகிற தவறான கணக்கை வைத்துக்கொண்டு கனம் உறுப்பினர் சொல்லவேண்டாம். இதை அரசாங்கம் வெளிப்படுத்தியிருக்கிறது.

DR. H. V. HANDE rose

MR. SPEAKER : There are 25 questions to be answered to-day. So I request the Hon. Memeber Dr. Hande to restrict the number of supplementaries to one in respect of the other questions. He may now put a supplementary on this Question.

டாக்டர் எச். வி. ஹாண்டே : குறிப்பிட்ட என்னுடைய தொகுதியிலே பழைய காலத்து சம்பிரதாயமாக சிலர் விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற புகார்கள் பற்றி நான் சொன்னேன். நான் இதைப் பற்றி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்களிடமும் சொன்னேன். 15-ம் தேதிக்குப் பிறகு பழைய ரேட்டுப் பிரகாரமே விற்கப்படுகிறது. அது அப்போது கொடுத்த அரிசி ஆகையால் பழைய மாதிரியே விற்கப்படுகிறது. ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி இல்லை என்று சொல்லி மக்களை பலாத்காரமாக வாங்கச் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்தக் குற்றச்சாட்டைத்தான் சொன்னேனே தவிர, நான் பொறுப்பு இல்லாது பேசியதாகச் சொன்னால் நானும் திருப்பி அதுமாதிரி சொல்ல முடியும். ஆனால் அமைச்சராக இருக்கிறார்கள், நான் அம்மாதிரி சொல்ல விரும்பவில்லை. சாதாரணமாக இருந்தால்தான் நான் சொல்லக்கூடும். நான் அந்தப் பிரகாரம் பொறுப்பில்லாது இந்த மன்றத்திலோ அல்லது அந்த மன்றத்திலோ பேசியது கிடையாது.

உண்மையான புகார்களைத் தான் இந்த மன்றத்திலே பல தடவை சொல்லியிருக்கிறேன். சதித்திட்டம் போட்டு அரசாங்கத்தின் மீது பழி சுமத்தவேண்டுமென்ற காரணத்தாலும், அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்தாலும் சில கடைக்காரர்கள் அப்படிச் செய்கிருர்கள். கனம் அமைச்சர் அவர்கள் இந்த விவரங்களையெல்லாம் பார்த்து சீர்திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்கள் இரண்டாவது ரகத்தை முதல் ரகம் என்று சொல்லி மோசடி செய்வதாகச் சொன்ஞர்கள். சட்டமன்றத்திலே பேசுகின்ற நேரத்திலே அப்படிச் சொன்ஞல் கடைக்காரர்கள் பொறுப்பாக இருந்தாலும், கடைசியான பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிற காரணத்தால் குறிப்பிட்டேன். பொறுப்பு இருக்கிறது என்று சொல்வதிஞலே பொறுப்பு கழிந்தது என்று அர்த்தம் அல்ல. ஆஞல் இப்போது வேறு வகையிலே சொல்கிருர்கள். அப்படிப் பட்ட புகார்கள் உண்மையிலே இருக்குமாஞல் சொல்லலாம். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி என்று போடாமல் பழைய விகிதத்திலே போடுகிருர்கள் என்று கேட்கிற கேள்விக்கும் இரண்டாவது ரகத்தை முதல் ரகம் என்று போடுகிருர்கள் என்று சொல்வதற்கும் மெத்த வேறுபாடு இருக்கிறது. அப்படிச் சொல்வதஞல் அரசாங்கத்திற்கு ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இந்த அரசாங்கத்திற்கு ஒளிவு மறைவு எதுவும் இல்லை. எந்த நிலைமையையும் சமாளிக்கத் தயாராய் இருக்கிறது. அவர்கள் ஆதாரத்தோடு ஏதேனும் சொல்லியிருந்தால் அதைப் பரிசீலிப்பதற்கு வசதியாக இருக்கும். அரசாங்கத்தைப் பற்றி தவருகக் கருதுவதற்கு ஒரு வழி வகை அமைப்பாக இருந்ததால்தான் நான் அந்த விடை அளித்தேன் என்று சொல்லிக்கொள்ளுகிறேன்.

* 354 விஞ.—**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய உணவு வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65, 1965–66, 1966–67-ம் வருடங்களில் பஞ்சாப் கடலையை சர்க்கார் வாங்கிய விலை என்ன ?

(இ) அதை என்ன விலைக்குச் சர்க்கார் விற்றது ?

(உ) கடலைப் .பருப்பு இதே காலத்தில் இதர மாநிலங்களிலிருந்து சர்க்கார் வாங்கிய விலை என்ன ?

(எ) அதை என்ன விலைக்குச் சர்க்கார் விற்றது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1965-ம் ஆண்டிலிருந்துதான் அரசுக் கணக்கில் கடலை இறக்குமதி செய்யப்பட்டது. மாநில அரசின் பெயரால் Representative மூலம் 1965-ல் குவின்டால் ஒன்று ரூ. 70 வீதம் வாங்கப்பட்டது. 1966 எப்ரல் முதற்கொண்டு, குவிண்டால் ஒன்று ரூ. 94 வீதம் இந்திய உணவுக் கார்பொரேஷன் மூலமாகக் கடலை வாங்கப்பட்டது. (1967 பிப்ரவரி இறுதி வரையில்).

(இ) 1965-ல் பெறப்பட்ட கடலை இருப்புகள், கிலோகிராம் ஒன்று ரூ. 1 வீதம் அதாவது, குவிண்டால் ஒன்று ரூ. 100 ஆக, மக்களுக்கு விற்கப்பட்டது. இந்திய உணவுக் கார்பபொரேஷன் மூலம் 1966-ல் இறக்குமதி செய்யப்பட்ட இருப்பு, கிலோகிராம் ஒன்று ரூ. 1–40 வீதத்தில், அதாவது, குவிண்டால் ஒன்று ரூ. 140 வீதம் விற்கப்படுகிறது.

(உ) கடலையைப் போலவே கடலைப் பருப்பும் 1965 முதற்கொண்டு அரசுக் கணக்கில் இறக்குமதி செய்யப்பட்டது. 1966 எப்ரல் வரையில் மாநில அரசின் பெயரின் மூலம் குவின்டால் ஒன்று ரூ. 80 வீதம் கடலைப் பருப்புவாங்கப்பட்டது. 1966-ம்ஆண்டு எப்ரல் மாதத்திலிருந்து இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் மூலம் வாங்கப்பட்டது. பஞ்சாப், உத்திரப்

பிரதேசம் ஆகிய மாநிலங்களிலிருந்து வரும் இருப்புகளுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 100 ஆகவும் இராஜஸ்தானிலிருந்து வரும் கடலைப் பருப்புக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 81·55 ஆகவும் இந்திய உணவுக் கார்பொ ரேஷன் வசூலித்தது.

(எ) 1965-ல் பெறப்பட்ட கடலைப் பருப்பு கிலோகிராம் ஒன்று ரூ. 1·10 வீதம்—அதாவது குவின்டால் ஒன்று ரூ. 110 ஆக—மக்களுக்கு விற்கப் பட்டது. இந்திய உணவுக் கார்ப்பொரேஷன் மூலம் 1966-ல் இறக்குமதி செய்த கடலைப் பருப்பு, கிலோகிராம் ஒன்று ரூ. 1·50 வீதம்—அதாவது குவிண்டால ஒன்று ரூ. 150 ஆக விற்கப்படுகிறது.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, 70 ரூபாய், 80 ரூபாய், 90 ரூபாய், மிக அதிகமாகப் போஞல் 100 ரூபாய் என்ற அளவில் வாங்கிக் கொடுக்கும்போது குவிண்டால் 150 ரூபாய்க்கு, கிட்டத்தட்ட 50 சதமானம் அதிகமாக, விற்பனை செய்ததற்கு என்ன காரணம் சொல்லப்பட்டது என்று சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. கே. எ. மதியழகன் : இதற்குச் சமாதானம் சொல்ல வேண்டிய பொறுப்பே இந்த அரசாங்கத்திற்கு இல்லையென்ருலும், இந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டப்படுகிற நிலைமை இல்லை என்ருலும், வெளிச் சந்தை விலைகளின் ஏற்றம், நம்முடைய பற்ருக்குறை ஆகியவைகளின் அடிப்படையில் இந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டன.

திரு. கே. விஞயகம் : ஸார், இந்த கடலை இப்போது வெளி மார்க்கெட்டிலே 140 ரூபாய்க்கு விற்பதற்கும், அரசாங்கத்தின் கோடவுனில் 150 ரூபாய்க்கு விற்பதற்கும் இருக்கிற தாரதம்மியத்திற்குக் காரணம் என்ன என்று அமைச்சர் அவர்கள் சொல்லமுடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : வெளி மார்க்கெட்டில் இன்னும் விலை அதிகமாக இருக்கிறது. அவர்களாக ஒரு விலையை நிர்ணயித்துக் கொண்டு வெளி மார்க்கெட்டில் 140 ரூபாய் என்று கூறுவது தவருனதாகும். இப்போது அந்த மாதிரி இல்லை.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சென்ற மாதம் கூட நமது கோடவுனிலிருந்து 165 ரூபாய்க்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று உத்திரவு சென்றிருப்பது அமைச்சருக்குத் தெரியுமா ? இதற்கு மேல் இதை வாங்கிக்கொள்ளக் கூடிய மொத்த வியாபாரிகள் மேலும் 20 ரூபாய் உயர்த்தி விற்பதால் அன்ருடம் வாங்கி வறுகடலைத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்குத் தொந்தரவு ஏற்படுகிறது என்பது தெரியுமா ? மொத்த வியாபாரிகளை நீக்கிவிட்டு நியாயமான விலையில் விற்க துரிதமாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நியாயமான லாபம், லாபம் இல்லை என்பது பொருள் அல்ல. கடலை வியாபாரத்திலே ரொம்பவும் விலை ஏறி முக்கியமாக விலையை ஸ்திரப்படுத்தவேண்டுமென்ற கொள்கையை முந்திய சர்க்கார் அனுசரித்தது. 165 ரூபாய்க்கு நம் மாநிலத்தில் விற்கிற கடலைப் பருப்பு உத்திரப் பிரதேசத்தில் 200 ரூபாயைத் தாண்டிக்கொண்டிருக்கிறது. உறுப்பினர் செய்கிற சிபார்சு இங்கே இருக்கிற யாரோ கொஞ்சம் வியாபாரிகளுக்கு லாபம் சம்பாதிக்கத்தக்க உதவிகரமாகத்தான் இருக்கும். இது விலையையும் ஸ்திரப்படுத்துவதாக இல்லை. அரசாங்கத்திற்குக் கொள்முதல் செய்வதில் நஷ்டம் ஏற்படுத்த இது வழி வகுக்கிறதே தவிர, பிரச்சினையைத் தீர்க்க உதவுவதாக இல்லை. (**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** வெளியில் இன்னும் கொள்ளை அடிக்கிருர்கள்) இப்போது வருவதற்குத் தடை செய்யப்பட்டிருக்கிறது. இவர்கள் சொல்லுவது வியாபாரிகள் கொள்ளை அடிப்பதற்குத் திட்டவட்டமாக உதவும் என்பது தான் என் வாதம்.

திரு. பா. தம்பி நாயக்கர் : தலைவர் அவர்களே, சர்க்கார் கடலை வாங்கி வைப்பது லாபத்திற்காகவா ? அல்லது விவசாயிகளை நல்ல முறையில் ஊக்குவிக்கவா ? என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1967 ஜூலை 17

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : லாப நோக்கம் அல்ல. விலையை ஸ்திரப்படுத்துவதற்கும், நெருக்கடியைக் குறைப்பதற்கும் தான் அரசாங்கம் இதிலே ஈடுபட்டது.

திரு. அ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற விலையை விட இன்னும் ஏதாவது குறைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : முதலிலே இவர்கள், ஏதோ சர்க்கார் வியாபாரம் செய்வதாக எண்ணுகிறார்கள். நிலைமையை விளக்கினால் விவரம் தெரிந்துவிடும். நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் பிளாக் கிராம், ரெட் கிராம், பெங்கால் கிராம் எவ்வளவு தேவை என்று சொன்னாலே கூட புதிரே மிகத் தெளிவாக விளங்கி விடும். நேரம் ஆனாலும் சொல்லிவிடுகிறேன். நம் மாநிலத்தில் பிளாக் கிராம் வருஷத்திற்கு 60,000 டன் தேவை. இங்கே உற்பத்தி ஆவது 10,000 டன் தான். 50,000 டன் வெளியிலிருந்து வரவழைக்கவேண்டியிருக்கிறது. ரெட் கிராம் 85,000 டன்னும், பெங்கால் கிராம் 150,000 டன் கிராமாகவும் 100,000 டன் பருப்பாகவும், மொத்தம் 250,000 இன்னும் தேவைப்படுகிறது. இத்தனைக்கும் நம் மாநிலத்தில் பெங்கால் கிராம் பயிரிடுவதே இல்லை. அத்தனையும் வெளி மாநிலத்திலிருந்து தான் வர வேண்டியிருக்கிறது. நம் மாநிலத்திலே இன்றைக்கு இருப்பே 3,000 டன் தான் இருக்கிறது. அதிலே கூட இப்போதெல்லாம் ஏதோ கொடுக்கிறார்கள் என்று கருதுகிறார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்ற பிறகு 600 டன் இருந்தது. இந்த 600 டன்னில் 300 டன்னை கடைகளுக்குக் கொடுத்து, வறுகடலை வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்கள் என்று பரிதாபப்பட்டு, மாவட்டக் கலெக்டரிடமிருந்து அத்தாட்சிப் பத்திரம் வாங்கி வந்தால் 300 டன்னை வீதாச்சாரப் பிரகாரம் கொடுப்பதற்கு நான் பொறுப்பு ஏற்ற பிறகு ஏற்பாடு செய்தேன். ஆகவே, இதிலே பெரிய காரியம் இருக்கிறது என்று யாரும் கருதத் தேவையில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பஞ்சாப், அரியானா ஆகிய மாநிலங்களில் உற்பத்தியாகக்கூடிய கடலை தான் முதல் ரகம். மற்ற ராஜ்யங்களில் உற்பத்தியாகக்கூடிய கடலை மட்ட ரகம். இரண்டையும் கலப்படம் செய்து நமது சர்க்காருக்கு விற்பனை செய்கிறார்கள். நமது மாநில சர்க்காரும் ஏமாந்து அதை வாங்கி வருவதாகச் சொல்லப்படுகிறதே. அது உண்மையா? ஆகவே, நல்ல மாதிரியாக சிந்தித்து அதைப் பார்த்து வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கலப்படம் கூட பிடிபட முடியாத அளவுக்கு நாம் பரிதாப நிலையில் இருந்துகொண்டிருக்கிறோம். திரும்பத் திரும்ப நாம் இதைப்பற்றி வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள், அரியானா முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள். நம்முடைய தேவை 3 லட்சம் டன் என்று சொல்கிறபொழுது, இப்பொழுது 3,000 டன் இல்லாத அளவுக்கு சிரமப்படுகிறோம். இதனால் சிறிய வியாபாரிகளுக்கு நாம் கொடுக்க முடியவில்லை.

*355 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state whether the Government are aware of the fact that "toor" dhall sold in the fair price shops are dealer than in the open market ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The price of toor dhall in fair price shops is *now cheaper* than the prices in the open market. The Government price of toor dhall in fair price shops, that is, in ration shops, in the statutory rationed areas and Family

1967 ஜூலை 17]

Card Shops in the informal rationed areas is Rs. 127 *per quintal*. The price of toor dhall, *II sort* in the open market ranges from *Rs.* 135 *to Rs.* 139 and for I sort the price is from Rs. 145 to Rs. 148 *per quintal*.

THIRU K. VINAYAKAM : In the month of March, when I put this question, was not the price of toor dhall in our Fair Price Shops higher than the price prevailing in the open market and was it due to the non-availability of toor dhall in the open market ? What is the reason for the price to come down now-has the supply increased ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது முழுக்க முழுக்க சரியானதாகும் என்று ஒத்துக்கொள்ளுகிறேன். இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற நேரத்தில் வெளியிலே ரூ. 80-க்கு விற்றுக்கொண்டிருந்தது. ஆனால் நம்முடைய அரசாங்கக் கடைகளிலே ரூ. 110க்கு விற்க வேண்டியிருந்தது. நிலைமை சரியாக இல்லை. 1965-ம் வருஷம் வாங்கிய துவரம் பருப்பு உளுத்துப்போய் டீகம்போஸ் ஆகக்கூடிய நிலையில் பல கிடங்குகளில் பருப்பு இருந்தது. அதைப் பார்த்த பிறகு, ரூ. 80-க்கு வெளியிலே விற்கிறது என்ற நிலைமையில், அதுவும் மோசமான பருப்பை வாங்குவார் இல்லாத காரணத்தினால், இன்னும் இருந்தால் உத்திரப் பிரதேசத்திலிருந்து வாங்கிய உருளைக்கிழங்கு கதையாக முடிந்து விடும் என்ற நிலையில், ரூ. 22 லட்சம் இந்த வியாபாரத்தில் மட்டும் அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட இருந்ததை தவிர்க்கும் முறையில், நமது உணவு அமைச்சர் தலையீட்டினால், இன்றைக்கு ரூ. 12 லட்சம் நஷ்டத்தை ஈடு கட்டக்கூடிய நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம். பாக்கி ரூ. 10 லட்சம் நஷ்டத்தையும் கூட ஈடு கட்டிவிடலாமா என்பதை யோசித்துக்கொண்டிருக்கிறோம். அங்கத்தினர் சொல்வதை முழுக்க முழுக்க ஒத்துக்கொள்ளுகிறேன்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : துவரம் பருப்பு, அரிசிக்கு அடுத்தபடியான உணவுப் பண்டமாக மிகவும் அவசியமாக இருப்பதினால், ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவதைப் போல, துவரம்பருப்பும் ரூபாய்க்கு ஒரு படி போடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நந்தனார் காலத்தில் விளைந்தது போல திடீரென்று துவரம்பருப்பை நம்முடைய கனம் விவசாய அமைச்சர் அவர்கள் இரண்டு மாதத்தில் உற்பத்தி செய்து கொடுத்தால் தான் இப்படியெல்லாம் செய்யமுடியும். உத்திரப் பிரதேசம், அரியானா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களிலிருந்து நமக்கு துவரம்பருப்பு வரவேண்டியிருக்கிறது. வருஷத்திற்கு 1,000 டன் தான் நம்முடைய மாகாணத்தில் துவரம்பருப்பு உற்பத்தியாகிறது. நம்முடைய தேவை ஒரு லட்சம் டன்னாக இருக்கிறது. நம்முடைய விவசாய அமைச்சர் அவர்கள் மேற்கொண்டிருக்கிற தீவிர திட்டங்கள் மூலம் தான் இன்னும் அதிக விளைச்சலை எதிர்பார்க்கலாம். அதுவும் நீண்டகாலத் திட்டத்தின் மூலம் இதை எதிர்பார்க்க முடியும்.

திரு. என். சங்கரய்யா : இந்தப் பருப்பு வகையறுக்களுக்கு வெளி மாநிலங்களை நாம் அதிகமாக சார்ந்திருக்கக்கூடிய நிலைமை இருப்பதினால், நம்முடைய மாநிலத்திலேயே இந்தப் பருப்பு வகையறுக்களை இன்னும் அதிகமாக உற்பத்தி செய்வதில் என்ன இடைஞ்சல் இருக்கிறது? அவ்வாறு அதிகமாக உற்பத்தி செய்யமுடியுமா என்பதைப் பரிசீலித்து, நீண்ட காலத் திட்டத்தின் மூலமாகவாவது இந்தத் தட்டுப்பாட்டைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுபற்றி அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது ஏற்பட்டிருக்கிற நிலைமைகளும், நிர்ப்பந்தமும் இந்தத் திசையிலே தான் நம்மை செலுத்திக் கொண்டிருக்கிறது. இப்பொழுது நம்மிடத்தில் 3,000 டன் துவரம் பருப்பு இருக்கிறது. இந்த மாநிலத்திற்கு ஒரு வருஷத்திற்கு ஒரு லட்சம் டன் தேவைப்படுகிறது. உத்திரப் பிரதேசத்தில் விளைச்சல் இல்லை. மேலும் பருப்பு வெளியே போகக்கூடாது என்ற தடை உத்திரவை வடக்கு மாநிலங்கள் போட்டிருக்கின்றன. இந்த நிலைகள் தான் நெருக்கடிக்குக் காரணமாகும்.

நெல்லுக்கு பூரிப்பூதியம்

***357 வினா.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1966-ம் ஆண்டு ஜனவரி முதல் வடாற்காடு மாவட்டத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து போனஸ் கோரி வந்த மனுக்கள் எத்தனை ?

(இ) அவைகளுள் முடிவெடுக்கப்பட்ட மனுக்கள் எத்தனை ?

(உ) பெண்டிங்காக வைக்கப்பட்ட மனுக்கள் எத்தனை, தாலுகா வாரியாக ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) வட ஆற்காடு மாவட்ட உழவர்களிடமிருந்து 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி முதல் பூரிப்பூதியம் (போனஸ்) வழங்கும்படி வேண்டி 8,529 மனுக்கள் வந்துள்ளன. இதற்கு முன்பு பூரிப்பூதியத் திட்டம் எதுவும் இல்லை.

(இ) எல்லா மனுக்களும் கீழ்க்கண்ட முறையில் முடிவு செய்யப்படுகின்றன.

(1) ஒப்பளிப்பு வழங்கப்பட்டவை ..	6,829
(2) மறுக்கப்பட்டவை	1,700
மொத்தம் ..	8,529.

(உ) இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : போனஸ் வழங்கப்படுவதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. இத்தனை மனுக்கள் பைசல் ஆகவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பைசல் ஆகாத மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து, போனஸ் வழங்குவதில் காலதாமதம் இருக்கக் கூடாது. பெண்டிங் மனுக்களை உடனடியாக பைசல் செய்வதற்கு அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பெண்டிங்காக இன்னும் மனுக்கள் இருக்கின்றன. போனஸ் வரும் என்று உறுப்பினர் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். காலதாமதம் ஆனது உண்மைதான். அதற்கு காரணம் இருந்தது. இந்த போனஸ் விஷயம் ஆகஸ்டு மாதம் முடிவு செய்யப்பட்டது. கொள்முதல் வேலைகளில் கலெக்டர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்ததினால், இது சம்பந்தமான மனுக்களை சேகரித்து போனஸ் வழங்குவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகிவிட்டது. நான் படித்த பதிலில் 6829 மனுக்கள்பேரில் போனஸ் வழங்கப்பட்டிருக்கிறது என்றும், மீதி 1700 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டன என்றும் தெரிவித்தேன். ஆகவே இன்னும் போனஸ் கொடுக்கப்பட வேண்டியவர்கள் யாராவது இருக்கிறார்கள் என்று கருதினால், அது சரியானது அல்ல.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ஆயிரத்துச்சொச்சம் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : காரணம், அந்தப் போனஸுக்கு வேண்டிய தகுதி அவர்களுக்கு இல்லை. அவர்கள் அதற்கு உரியவர்கள் அல்ல என்பதுதான் அதற்குப் பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வட ஆற்காடு பற்றிய வினா இது. அதைப்பற்றி திரு. கே. சகாதேவ கண்டர் துணை வினா கேட்பார்கள்.

திரு. கே. சகாதேவக் கண்டர் : இந்தமாதிரி போனஸ் என்ற கணக்கை வைத்துக்கொண்டு பல அவஸ்தைகள் படுவதைவிட, சில விவசாயிகள் இதனால் ஏமாந்துபோய்க் கொண்டிருக்கிற நிலைமைகள் இருப்பதினால், இந்த போனஸை நெல்லின் விலையோடு சேர்த்துக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வட ஆற்காடு பற்றிய வினா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிச் செய்யலாமா என்பதைத்தான் இந்த அரசாங்கம் இப்பொழுது பரிசீலித்துக்கொண்டு வருகிறது.

திரு. எஸ். முருகையன் : வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனையோ விவசாயிகள் நெல் கொடுத்தார்கள். 8,529 மனுக்கள் வந்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பல விவசாயிகள் பில்லை வாங்கி சேர்த்து உரிய காலத்தில் போனஸுக்காக மனுச் செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே, மொத்தமாக எத்தனை விவசாயிகள் நெல்லைக் கொடுத்தார்கள் என்று பரிசீலனை செய்து, வந்த மனுக்கள் போக, இன்னும் போனஸ் கொடுக்கப்படாமல் இருக்கும் விவசாயிகளுக்கு, அவர்களுடைய மனுக்களை சேகரித்து, அவர்களுக்கும் போனஸ் கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது தீர்ந்துபோன விவகாரம். இதைத் திரும்பவும், மீண்டும் பரிசீலனை செய்யச் சொல்வது நல்லது அல்ல. இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கச்சொல்லி அங்கத்தினர் அவர்கள் விவசாயிகளுக்கெல்லாம் சொல்லவேண்டும்.

THIRU T. MARTIN : Sir, may I request the Hon. Minister to state whether this Government will issue directions to the procurement officials to settle the bonus claims immediately then and there ?

MR. SPEAKER : Does this question relate to North Arcot ?

THIRU T. MARTIN : Yes, Sir.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Sir, I will answer the question.

Collectors were instructed to prepare procurement registers and other relevant registers villagewise. But even before the issue of this order, procurement was in swift progress in almost all the districts and they were not able to prepare these registers quickly. That is the reason why it was delayed.

கோதுமை ஒதுக்கீடு

* 358 வினா.—**திரு. எஸ். ஜே. ராமசாமி:** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965, 1966ம் ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு மத்திய அரசால் மாநிலத்திற்குக் கொடுக்கப்பட்ட கோதுமையின் அளவு எத்தனை டன்கள் ?

(இ) 1967-ம் ஆண்டு முதல் இன்றுவரை கொடுக்கப்பட்ட கோதுமையின் அளவு எத்தனை டன்கள் ?

(உ) ஆண்டு ஒன்றுக்கு நமது மாநிலத்திற்குத் தேவைப்படும் கோதுமையின் அளவு எத்தனை டன்கள் ?

(எ) நமது மாநிலத்திற்குத் தேவையான கோதுமையை மத்திய அரசு அனுப்புகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: (அ) 1965-ம் ஆண்டில் 81,700 மெட்ரிக் டன் கோதுமையையும் 92,150 மெட்ரிக் டன் கோதுமைப் பொருளையும், 1966-ம் ஆண்டில் 1·46 லட்சம் மெட்ரிக் டன் கோதுமையையும் 1·70 லட்சம் மெட்ரிக் டன் கோதுமைப் பொருளையும் இம் மாநிலத்திற்கு இந்திய அரசு ஒதுக்கியது.

(இ) 1967, ஜூன் மாதத்திற்கான ஒதுக்கீடு உட்பட இதுவரையில் 26,800 மெட்ரிக் டன் கோதுமையையும் 59,377 மெட்ரிக் டன் கோதுமைப் பொருளையும் இம் மாநிலத்திற்கு இந்திய அரசு ஒதுக்கியுள்ளது.

(உ) ஓராண்டிற்குக் குறைந்தளவு 1·8 லட்சம் மெட்ரிக் டன் அளவு கோதுமையும் 1·4 லட்சம் மெட்ரிக் டன் அளவு கோதுமைப் பொருள்களும் இம் மாநிலத்திற்குத் தேவைப்படுகின்றன.

(எ) மத்திய அரசு, இம் மாநிலத்திற்கு வழங்கும் கோதுமையும் கோதுமைப் பொருள்களும் நமது தேவைக்குக் குறைவாகவே உள்ளது. இம் மாநில அரசு கோதுமை பெறத்தக்க வேறு ஆதாரம் இல்லாமையால் மத்திய அரசு எந்தளவு கோதுமை ஒதுக்கினாலும் மாநில அரசு இந்த அளவைக் கொண்டு அதன் பயனைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டி உள்ளது.

(*a*) In the year 1965, a quantity of 81,700 tonnes of wheat and 92,150 tonnes of wheat products and in the year 1965, a quantity of 1·46 lakhs tonnes of wheat and 1·71 lakh tonnes of wheat products were allotted to this State by the Government of India ?

(*b*) A quantity of 26,800 tonnes of wheat and 59,377 tonnes of wheat products has been allotted to this State by the Government of India, so far, *including the allotment for June* 1967.

(*c*) The minimum requirements of this State for a year is 1·8 lakh tonnes of wheat and 1·4 lakh tonnes of wheat products.

(*d*) The allotment of wheat and wheat products to this State by the Central Government is below our requirements. The State Government have to restrict issues to whatever quantity is allotted by the Centre as there is no other source from which the State Government can get wheat.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு ஆய்வுக்கு 25 வினாக்களும், இரண்டு தீர்மானங்களும், 11 மசோதாக்களும் இருக்கின்றன. ஆகவே, அமைச்சர் அவர்கள் தமிழிலே மட்டில் பதிலுரைத்தால் போதுமானது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: தமிழிலே தெளிவாக இல்லாமல் இருந்தது. அதனால் ஆங்கிலத்திலும் சொல்ல வேண்டியதாக இருந்தது.

திரு. எஸ். ஜே. ராமசாமி: போதிய அளவில் கோதுமை கொடுக்கவில்லையென்றாலும், ரொட்டி சுடும் மைதா போன்றவை ஆஸ்பத்திரியில் கூட இல்லை என்கிறார்கள். அதையாவது கேட்டு வாங்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: எல்லா மாவும் கோதுமைப் பொருள்தான்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரிசிக்குப் பதில் கோதுமை சாப்பிடுங்கள் என்று கடந்த நாட்களில் மக்களைக் கேட்டுக் கொண்டு வந்திருக்கிறது. அரிசி உற்பத்தியைப் பெருக்குவதற்கும், நீர்ப்பாசன திட்டத்திற்கு நிதியும் கொடுக்கவில்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக ஒதுக்கியதைவிட இந்த ஆண்டு தேவையைப் பார்க்கும்போது குறைவாக ஒதுக்கியிருப்பதையும் பார்த்தால் ஒரு பயங்கரமான சூழ்நிலை கோதுமை பற்றி இருப்பதால், அதைப்பற்றி மத்திய சர்க்காருக்கு திட்டவட்டமாக அறிவுறுத்தி, எடுத்துச் சொல்லி, கோதுமையை அதிகமாகப் பெற இந்த சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நாங்கள், தவறாமல், சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் தேவையான அளவு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். ஆனால் ஒவ்வொரு நேரமும் உத்திரப் பிரதேசத்தையும், பீகாரையும், கடைசியாக இப்பொழுது சூயஸ் கால்வாயையும் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள் மத்திய சர்க்கார்.

திரு. கே. விநாயகம்: ஐயா, அமைச்சர் படித்த கணக்கிலிருந்து கோதுமையின் தேவை அதிகமாக இருந்தும், நமக்குக் கிடைப்பது ஆண்டு தோறும் குறைந்து கொண்டு வந்து, அதே நேரத்தில் அரிசிப் பற்றாக் குறையும் அதிகமாகி, அரிசியையும் மக்களுக்குக் கொடுக்க முடியாத நிலையில், கலப்பட உணவுகளை நம்பி வாழலாம் என்றால், அதற்கும் வழி இல்லாமல், மக்களை அரைப் பட்டினி, கால் பட்டினி போட்டு, செத்து மடியச் சொல்லுகிறதா அல்லது வேறு என்ன வழி என்று அமைச்சர் விளக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளைத்தான் இந்த அரசாங்கம் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக் கொண்டு வருகிறது. அதே சமயத்தில் அவர்கள் நம்மை கேரளத்திற்கு கொடுங்கள் என்கிறார்கள். கோதுமை தருவதில் இன்றைக்கு உத்தரப் பிரதேசத்தையும், மற்றவைகளையும் காட்டுகிறார்கள். அங்கிருந்து பருப்பு வகைகளை கேட்டு வாங்கி அனுப்ப வேண்டும் என்றும், அந்த அடிப்படையில்தான் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், போதுமான அளவுக்கு கோதுமை பல முறை கேட்டும்கூட அந்த அரசாங்கம் கொடுக்க முன்வரவில்லை. குறைந்த விலையில் அரிசி கொடுக்கத் துணை செய்ய, நஷ்டஈட்டுப் பணத்தை கேட்டும் கொடுக்காமல் இருக்கக்கூடிய மத்திய சர்க்கார் நிலை காரணமாக இன்றைக்கு அரைப் பட்டினி, கால் பட்டினி போடக் கூடிய நிலை இருக்கிறதா அல்லது மத்திய சர்க்காரைக் கொடுக்க விடாமல் தடுக்கக் கூடிய அளவுக்கு பேசக்கூடியவர்கள் காரணமாக அரைப்பட்டினி, கால் பட்டினி போடும் நிலை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல அரைப் பட்டினி, கால் பட்டினி ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றால், இந்த மாநில அரசு தன் தேவைகளை எந்த வகையில்

வற்புறுத்துகிறதோ, அதற்கு மத்திய சர்க்காரின் போக்கைக் கண்டு செய்யும் கண்டனத்தில் பெரும் பங்கு உணர்வு பூர்வமாகக் கொண்டு, ஒத்துழைப்புத் தர முன்வர வேண்டும்.

திரு. ந. வீராசாமி : *தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு கொடுத்த கோதுமையில் ஐந்தில் ஒரு பங்குதான் இந்த ஆண்டு கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு ஆட்சி மாறிய, அரசியல் காரணத்திற்காக இந்த ஆண்டு அந்த அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கிறதா அல்லது வேறு காரணம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *அப்படியெல்லாம் நாம் உள்நோக்கம் கற்பிப்பது முறையாகாது. ஏற்கனவே நான் சொன்னது போல, உத்தர பிரதேசத்திலும், பீகாரிலும், இருக்கும் பஞ்சத்தைக் காட்டிக்கொண்டு இருந்தார்கள். போதாக் குறைக்கு இப்பொழுது சூயஸ்ம், ஈஜிப்டு நாடும், இஸ்ரேல் நாடும் குறுக்கிட்டு விட்டன.*

திரு. கே. பி. எஸ். மணி : *சார், அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து, இந்த தமிழ் நாட்டுக்குத் தேவையான கோதுமையோ, அரிசியோ கொடுக்காத நிலையில், நம்மை மற்ற மாநிலங்களுக்குக் கொடு, கொடு என்று மேலேயிருந்து விரட்டுகிறார்கள். நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய பழைய காலத்தில்போல, பர்மா போன்ற தேசங்களிலிருந்து தமிழ் நாட்டிற்கு வேண்டிய அரிசி, மற்றவைகளை வேறு தேசங்களிலிருந்து, தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாகவோ அல்லது அரசாங்கமேயோ வரவழைக்க வழி செய்ய மத்திய சர்க்காரிடமிருந்து தடைகளை நீக்க இந்த அரசு கேட்குமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்மிபுகு திரு. கே. ஏ. மதியழகன் : *பர்மா ராச்சியத்திலிருந்து வழி செய்வதற்கு இன்றைக்கு மத்திய சர்க்கார் தயங்குவதை இந்த மாமன்றத்திலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.*

Deputy Tahsildars' list of Madurai district

*359 *Q.*—THIRU A. BALASUBRAMANYAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Deputy Tahsildar's list of Madurai district has not been finalised from 1963 till date ;

(*b*) number of appeals preferred against the orders of the Board of Revenue ; and

(*c*) the number of appeals allowed and the reasons therefor ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : (*a*) Yes.

(*b*) Seventy eight persons preferred appeals against the orders of the Board of Revenue ;

(*c*) Based on merits, the Government allowed the appeals of 22 persons.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : *தலைவரவர்களே, இந்த 22 அப்பீல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள். அதுபோக பாக்கியுள்ள அப்பீல்கள் எல்லாம் தகுதியற்றவை என்று கருதி தள்ளப்பட்டு விட்டனவா ? ஏற்கெனவே தகுதியில்லாத ஒரு நபர் தகுதியுள்ள பலருக்கு மேலாக உயர்த்தப்பட்டதன் விளைவாகத்தான் இந்த அப்பீல்கள் வந்தனவா ? இதுகுறித்து அரசாங்கம் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.*

THE HON. THIRU K. A. MATHIALAGAN : I decline to answer any supplementary question in the public interest.

சாத்தனூர் அணை ஆயக்கட்டு நிலங்கள்

*360 விஞ.—**திரு. கே. சகாதேவக் கண்டர் :** *மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

சாத்தனூர் அணை ஆயக்கட்டு நிலங்களிலுள்ள விவசாயிகளின் நிலையை உத்தேசித்து அங்கு விதிக்கப்படும் பொது நன்மை வரியை ரத்துச் செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *இல்லை.*

திரு. கே. சகாதேவக் கண்டர் : *மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, சாத்தனூர் அணைக்கட்டு சம்பந்தப்பட்ட நிலங்களுக்கு அபிவிருத்தி வரி, மத்தியஸ்த வரி, தண்ணீர் வரி, நிலத்தின் அடிப்படை வரி என்று இப்படிப் பல வரிகளையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் ஒரு ஏக்கருக்கு 50 ரூபாய் கட்ட வேண்டியிருக்கிறது. இது விவசாய மக்களுக்கு அதிகச் சுமையாக இருக்கிற காரணத்தால் அபிவிருத்தி வரியையாவது, அல்லது மத்தியஸ்தம்—காம்ப்வுண்ட்—செய்யப்பட்டு விதிக்கப்படுகிற வரியையாவது குறைத்துக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?*

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வது புதுமையாக இருக்கிறது. இந்த வரியைக் குறைக்க வேண்டுமென்று வட ஆற்காடு மாவட்டத்திலிருந்தோ அல்லது தென்னார்க்காடு மாவட்டத்திலிருந்தோ எந்தவிதமான விண்ணப்பங்களோ மற்றவைகளோ எந்த விவசாயிகளிடமிருந்தும் வரவில்லை என்று இரண்டு கலெக்டர்களும் தகவல் கொடுத்திருக்கிறார்கள்.*

திரு. எஸ். முருகையன் : *இந்த சாத்தனூர் அணைக்கட்டு விவசாயிகள் 3, 4 ஆண்டு காலமாக ஒவ்வொரு ஆண்டும் சர்க்காருக்கு இப்படிப்பட்ட மனுவை அனுப்பி, ஒவ்வொரு ஆண்டும் தள்ளுபடி செய்ய முடியாது என்று பதில் வந்திருக்கிறது. இப்பொழுது, 2, 3 மாதங்களுக்கு முன்பு கூட அந்தப்பகுதி விவசாயிகள் எல்லாம் ஒன்றுகூடி "ஆறு மாதத்திற்குத் தண்ணீர் பாய்கிறது, இரண்டு போக சாகுபடிக்கு உண்டான தீர்வை வசூலிக்கிறார்கள். 'பெட்டர்மெண்ட் லெவி' வசூலிப்பதால் வரி அதிகமாக இருக்கிறது. இந்தக் குறைகளையெல்லாம் உடனடியாகச் சர்க்கார் நீக்கிவிட வேண்டும்" என்று பலமுறை கோரிக்கைகள் அனுப்பியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் எந்தக் கோரிக்கையும் தமக்கு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்து வரியைக் குறைக்க முயற்சி எடுக்கப்படுமா ?*

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : *வேறு ஒரு கேள்வி இதிலிருந்து எழுகிறது. கலெக்டர் சொன்னது சரியா, இல்லையா என்ற கேள்வியைக் கொண்டுவந்து விடுகிறது. நான் தவறான தகவலைக் கொடுத்து விட்டேன் என்று நினைத்துவிடக் கூடாது. இது இந்தக் கேள்வியோடு சம்பந்தப்பட்டது அல்ல. அங்கத்தினரின் குற்றச்சாட்டின் அடிப்படையில் அம்மாதிரி ஏதாவது புகார்கள் வந்ததா என்று வடார்க்காடு தென்னார்க்காடு மாவட்டக் கலெக்டர்களை இந்த அரசாங்கம் விசாரணை செய்யும்.*

முத்திரைத் தாள்கள் தட்டுப்பாடு.

***371 வினா.—திரு. வை. சுவாமிநாதன், திரு. எஸ். ஜே. ராமசாமி திரு. ரா. ரா. முனுசாமி, திரு. சா. மெய்யப்பன், திரு. கே. சகாதேவக் கண்டர் :** மதிப்பிற்குரிய உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரூ. 5, 10, 50, 25 பத்திர ஸ்டாம்புகள் கிடைக்கவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அந்த பத்திர ஸ்டாம்புகள் தாராளமாகக்கிடைக்கச் செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) & (இ) நாசிக் அச்சகத்திலிருந்து முத்திரைத் தாள்கள் பெறப்படாத காரணத்தால் முத்திரைத் தாள்கள் போதிய அளவில் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. முத்திரைத்தாள்களை அச்சிடுவதற்கான அயல்நாட்டுத் தாள் போதுமான அளவிற்குக் கிடைக்காத காரணத்தினால்தான் நாசிக் அச்சகத்திலிருந்து முத்திரைத் தலைகள் அனுப்பப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவசியமான அந்நியச் செலாவணி வழங்கப்படவும், முத்திரைத் தாள்களை அச்சிடுவதற்கு உள்நாட்டில் தயாரிக்கப்படும் தாளையே பயன்படுத்த இயலுமா என்று ஆராயப்படவும் இதுகுறித்து இந்திய அரசுடன்கடிதப் போக்குவரத்து நடந்துவருகிறது. நமது முதலமைச்சரும் இது குறித்து இந்தியத் துணை பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஸ்டாம்பு தயாரிப்பதை மத்திய அரசாங்கத்துக்கு பதிலாக நம் மாநில அரசாங்கமே செய்ய உத்தேசம் உண்டா ? 5 ரூபாய், 10 ரூபாய் ஸ்டாம்பு இல்லாமல் ரிஜிஸ்தர் செய்யலாம் என்ற கொள்கை கடைப்பிடிக்கப்படுமா ? எந்தத் தேதி முதல் அமுலுக்குவரும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது இந்த நெருக்கடியைத் தணிக்க "அட்ஹெஸிவ் ஸ்டாம்ப்" ஒவ்வொரு மாவட்டத்திலும் அதிகாரிகள் விநியோகிக்கலாம் என்று ஏற்படுத்தியிருக்கிறோம். அதுபோல் ஜூலை மாதம் 1-ம் தேதியிலிருந்து ரசீது வாங்கிகொண்டு சப்-ரிஜிஸ்டார் ஆபீஸில் இதைக் கொடுக்கலாம் என்பதற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது "அட்ஹெஸிவ் ஸ்டாம்பு" பெறுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளப்பட்டு 13 கோடி ரூபாய்க்கு "அட்ஹெஸிவ் ஸ்டாம்பு" வேண்டுமென்று தெரியப்படுத்தியிருந்தோம். அது வந்து இருக்கிறது. வேறு ஸ்டாம்பு இல்லாமல் காகிதங்களில் எழுதப்படும் விண்ணப்பங்களில் "அட்ஹெஸிவ் ஸ்டாம்பு" ஒட்டுவதற்கு ஏற்பாடுகள், இப்பொழுது இடைக்கால நிவாரண வேலையாக, செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, 13 கோடி ரூபாய்க்குத் தேவை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நம் மாநிலத்தில் அவ்வளவு பத்திரம் தேவைப்படும்பொழுது, நாசிக்கிலிருந்து வருவதைவிட நமது அரசாங்க அச்சுப்பொறியிலேயே போட்டுக்கொள்ளக்கூடிய உத்தரவை மத்திய அரசாங்கத்திடம் கேட்டுப்பெறுவதற்கு எண்ணம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது ரொம்பவும் புரட்சிகரமான காரியமாகும். இப்பொழுது பஞ்சாபிலுள்ள ஒரு மில்லிலிருந்து தயாராகும் பேப்பரில் காஷ்மீர், பர்மா போன்ற இடங்களில் இம்மாதிரி ஸ்டாம்புகளாக அச்சடிக்கிறார்கள். மத்திய அரசாங்கம் நினைத்தால்போதும். நம்முடைய அரசாங்கம் திருப்பத்திருப்பச் சொன்னாலும் அவர்கள் முயற்சியில் ஈடுபட என்னவோ தாமதம் காட்டுகிறார்கள்.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, பத்திர ஸ்டாம்பு இப்போது குறைவாக இருப்பதால் நமது புதிய அரசு ஆவன செய்து உடனடியாகக் கிடைக்கும் என்று நம் அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். அதையொட்டி இப்பொழுது நமக்கு வேண்டிய பத்திர ஸ்டாம்பு கிடைக்கும் வரையில், தமிழகத்தில் நிலம் எழுதக்கூடிய விவசாயிகள் இப்பொழுது அதிகம் தொல்லைப்படுவதால் தனிப்பட்ட முதலாளிகள் ஸ்டாம்ப், அதிகமாய் வைத்திருக்கும் நிலைமையை, மாற்றி நியாய விலையில் கிடைகக அமைசசரவர்கள் வழி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது அதற்காகத் தான் மேலே குறிப்பிட்ட "அட்ஹெஸிவ் ஸ்டாம்புகள்", ஸ்டாம்பு இல்லாமல் ரசீது வாங்கிக் காகிதத்தில் எழுதிப் பத்திரத்தைப் பதிக்கலாம் என்ற அந்த முறையை அரசு கொண்டு வந்திருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இப்பொழுது ஸ்டாம்ப் பேப்பர் கிடைக்காத காரணத்தினால் ரிஜிஸ்ட்ரேஷன் டிபார்ட்மென்டிலே கிரயம், போக்கியம் முதலியவை தவிர பிற அயிட்டங்களுக்கு ஸ்டாம்ப் பேப்பர் இல்லாமல், ரசீது கொடுத்து, பணம் பெற்றுக்கொண்டு கொடுக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகையால் பல ரிஜிஸ்ட்ரேஷன்கள் தடைப்படுகின்றன. செய்யவே முடியாமல் போகிறது. ஆகவே, ரிஜிஸ்தர் ஆபீஸிலே ரிஜிஸ்தர் செய்யக்கூடிய எல்லா வகைகளுக்கும், பணத்தைப் பெற்று ரசீது கொடுத்து ரிஜிஸ்தர் செய்யஅனுமதியளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஜூலை 1-ஆம் தேதி முதல் அதிகாரப் பூர்வமாக அரசாங்கம் ஆணைப்பிறப்பித்திருக்கிறது.

திரு. ஆலடி. அருணா : தலைவரவர்களே, பத்திரப் பற்றுக்குறையைப் போக்க தற்காலிகமாக அரசு ஆணையிட்டிருக்கிறது. அந்த ஆணை 6 மாதத்திற்குத் தான் அமலில் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இதே முறையை நிரந்தரமாகப் பின்பற்றுவதில் என்ன சங்கடங்கள் இருக்கின்றன என்று தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த நெருக்கடியை மத்திய அரசாங்கம் நீக்கிவிடும் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம். நெருக்கடி நீடிக்குமானால் அந்த நேரத்திலே முடிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : சப்-ரிஜிஸ்ட்ரேஷனுக்குச் சலுகை கொடுக்கப்பட்டது. அதுபோல் "ஜுடீஷியலுக்கும்" அதாவது கோர்ட்டில் ரசீது கொடுத்துப் பெற்றுக்கொள்ளும் நிலைமையைச் செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்தப் பத்திர ஸ்டாம்பு கிடைக்காததால் இந்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதை உயர்நீதி மன்றத்திலே நிறைவேற்ற பல சங்கடங்கள் இருக்கின்றன. அவர்கள் பணம் வாங்கிக்கொள்வதில் சில நெருக்கடிகள் உள்ளன. இப்பொழுது உள்ள ஏற்பாட்டை 6 மாத காலத்திற்கு தற்காலிகமாக வைத்து பரீட்சிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பத்திர ஸ்டாம்ப் முதலியவை அடிக்கும் அதிகாரம் எல்லாம் மத்திய அரசாங்கத்தில் இருப்பதால் அவை கிடைக்காத இப்படிப்பட்ட அபாயகரமான நிலை இருக்கிறது என்பது விளங்கும்.

Dr. H. V. HANDE : Sir, on a point of order. I have given a Call Attention Notice on this subject nearly three weeks ago, but no answer has been given, though it is ready and is with the Government. I request the Hon. Minister to find out where the fault lies.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அலுவலகத்தில் என்ன நடக்கிறது என்று இந்தப் பேரவையில் கேட்கக் கூடாது, கேட்க விரும்புவதைத் தனிப்பட்ட கடிதம் மூலமாகவோ, நேரடியாகவோ கேட்க வேண்டும் என்று விதிமுறைகள் இருக்கின்றன. ஆகவே, டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்த கவன ஈர்ப்புக்கான அறிவிப்போ, அல்லது தீர்மானமோ அல்லது கேள்வியோ என்ன ஆயிற்று என்று இந்தப் பேரவையில் கேட்கக் கூடாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Dr. H. V. HANDE : Sir, is the Hon. Minister aware that there are two distinct problems. One is the problem of sufficient stamp papers and the other is the problem of sufficient staff to issue stamp papers or temporary receipts. With regard to the first problem, the Hon. Minister is trying to solve it. But in regard to the second problem, as there is not sufficient staff, will the Ministry come forward to decide immediately—because it is a burning question—the appointment of more staff to avoid the long queus waiting in front of almost every Collector's Office?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அதற்குக் காரணம், நம் முடைய அலுவலர்கள் குறைவு அல்ல. அலுவலர்கள் குறைவாக இருந்தால், அதிகப்படுத்துவதற்கும், அதிகமாக இருந்தால் குறைப்பதற்கும் இந்த அரசாங்கம் தீவிரமாக முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது கனம் அங்கத்தினர் அறிந்த ஒன்றாகும்.

கேளிக்கை வரி

*372 வினா.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய உணவு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1966–67-ல் இம்மாநிலத்தில் சினிமா காட்சிகள் மூலமாகக் கிடைத்த தமாஷா வரி எவ்வளவு, ஜில்லாவாரியாக ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : சபையில் ஒரு விவர அறிக்கை* சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இந்த வரி செலுத்துவதில் ஏமாற்றுதல் ஏதேனும் இருக்கிறதா ? தமாஷா வரியை உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த வரி செலுத்துவதில் ஏமாற்று என்று சொல்லுவதைவிட, இன்னும் சில நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால், அரசாங்கத்திற்கு மேலும் இதிலே வருமானம் கிடைக்கும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. அதற்கான வழி வகைகளைச் செய்வதற்கு இந்த அரசாங்கம் மிகவும் தீவிரமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

திரு. ஏ. ஆர் பெருமாள் : சினிமா தமாஷா வரிகளில் ஏராளமான மோசடிகள் இருப்பதன் காரணமாக, இப்பொழுது இருக்கக்கூடிய முத்திரை குத்துகிற முறையை மாற்றி, ஸ்டாம்ப் ஒட்டும் முறையை இந்த அரசு ஏற்படுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்களும் இந்தச் சபையும் இந்த வரியிலே ஏய்ப்பு அல்லது சரியாகக் கொடுக்காமல் இருக்கும் அளவிற்குப் பலவீனங்கள் இருக்கின்றன என்பதை ஒத்துக் கொண்டதற்காக இந்த அரசாங்கம் நன்றி செலுத்துகிறது. அதற்காகத் தான், பழைய முறைகளை மாற்றித் தீவிரமான முறைகளை அமல்படுத்த வேண்டும் என்று இந்த அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது. அவைகளை அமல் படுத்துகிற வேளையில் இந்த மன்றம் அதற்கு முழு ஆதரவு அளிக்கவேண்டும்.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, கிராமங்களிலிருக்கும் பெரும்பாலான டூரிங் சினிமாக் கொட்டகைகளில், அரசாங்க அலுவலக முத்திரையிடப்பட்ட அனுமதி சீட்டைக் கொடுக்காமல் பணத்தை வாங்கிக் கொண்டு சினிமா பார்ப்பவர்களை அனுமதிப்பதைத் தடுக்க "ஃப்ளையிங் ஸ்க்வாட்" என்று சொல்லப்படுகிற பறக்கும் பரிசோதகர்களை நியமிக்க அரசு முன் வருமா ?

* 561–562-ம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்லுகிற மாதிரியான பல நிலைமைகள் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவைகளையெல்லாம் சீர் செய்வதற்குத்தான் மிகத் தீவிரமான செயல்முறைகளை இந்த அரசாங்கம் எடுப்பதாக யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. வை. சுவாமிநாதன் : இப்பொழுது சென்னை நகரிலும் மற்ற இடங்களிலும் வெளியிடப்படுகின்ற "அனுபவி ராஜா அனுபவி" படத்தில் மாதர்களை இழிவுபடுத்தும் நிலையில் ஆபாச போஸ்டர்கள் ஒட்டியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? இதைத் தடுக்க ஏதாவது சட்டம் இயற்றப் படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் எந்த வினா மூல வினா என்பதைத் தெரிந்துகொண்டிருக்கிறார் அல்லவா ? மூல வினாவையொட்டித் துணை வினாவைக் கேட்கக் கூடாதா ? மூல வினாவை யொட்டித்தானே துணைவினா கேட்க வேண்டும் ? அருள்கூர்ந்து துணை வினாவை மூல வினாவையொட்டிக் கேட்கும்படியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

Thiru K. VINAYAKAM : Sir, whereas this entertainment tax is being properly and fairly worked in major cities like Madras, Madurai and Tiruchirappalli and whereas it is commonly apprehended that more often it is not properly worked in villages, may I know how many times in a month do the Commercial Tax Officers get into the theatres and check them on the spot and it is not known whether anybody is booked or not. Is it because that they are already being given complimentary tickets thot they do not discharge their duties properly ? Will the Government look into this matter in right earnest ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : காம்ப்ளிமென்டரி டிக்கட்டுகள் அதிகாரிகளுக்குக் கொடுப்பதால் அவர்கள் தீவிரமாகக் கண்டுபிடிப்பதில்லை என்ற நிலையில் கனம் உறுப்பினர் அவர்கள் சொல்லுவது அதிகாரிகளுடைய உற்சாகத்தைக் குறைப்பதாகும். ஆனால், பொதுவாக, இந்தத் துறையில் நிரம்ப வரி ஏமாற்றப்படுகிறது. அது அரசாங்கத்திற்கு வர வேண்டும் என்பதுதான் இதிலிருந்து தெரியவரும் ஒரு உண்மையாகும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : கிராமப் பகுதிகளில் டூரிங் சினிமாக்கள் அதிகமாக நடைபெறுகின்றன. அவற்றிலிருந்து வரக்கூடிய தமாஷா வரி அங்கங்கே இருக்கக்கூடிய பஞ்சாயத்துக்களுக்குச் சேருகிறதா ? அல்லது அதிலிருந்து ஒரு பகுதி மாநில சர்க்காருக்குச் சேருகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தக் கேளிக்கை வரியிலிருந்து கிடைக்கும் தொகையில் 90 சத வீதம் பஞ்சாயத்துக்குச் சேருகிறது. இவ்வளவு வரி வசூலிக்கிறோமே தவிர, அதிலே மொத்தம் 10 சத வீதம்தான் நிர்வாகச் செலவிற்காக எடுத்துக்கொள்ளப்படுகிறது. பாக்கி 90 சத வீதம் அந்தந்தப் பஞ்சாயத்துக்கே சேருகிறது. அது மட்டுமல்லாமல், அந்தந்த ஸ்தலஸ்தாபனம் விதிக்கிற சர்சார்ஜ் முழுவதும் அவர்களுக்கே சேர்ந்துவிடுகிறது. ஆனால், சர்ச்சார்ஜ் விதிக்கும்போது, மூல வரிக்கு அதிகப்படாமல் விதிக்க வேண்டும் என்று விதி முறை இருக்கிறது. ஆக, கேளிக்கை வரியில் 90 சத வீதமும், உபரி வரி (சர்ச்சார்ஜ்) முழுவதும் அந்தந்த ஊருக்கு இருக்கும் உள்ளாட்சித் துறை நிறுவனத்திற்கே சேருகிறது.

திரு. சு. துரைசாமி : கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகரத்தில் ஒரு முக்கியமான காங்கிரஸ் பிரமுகருடைய சினிமாக் கொட்டகை சோதனையிடப்பட்டதாகவும், அதிலே தமாஷா வரி ஏமாற்றியிருப்பது கண்டு

பிடிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறதே, அப்படிப்பட்டவர்களுக்குச் சிறை தண்டனை கொடுப்பது போன்ற நோக்கம் இந்த சர்க்காருக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது இன்னும் ஆராய்ச்சி நிலையில் இருக்கிறது.

Commercial Tax Department.

* 373 *Q.*—THIRU S. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the amount of revenue realised through he checkpos s of the Commercial Tax Department from the year 1965 to 1967 ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Rs. 43,26,284·53.

திரு. எஸ். இராமச்சந்திரன் : 'Commerical Tax is the main source of income '. நம்முடைய சர்க்கார் பதவி ஏற்றதற்குப் பிறகு, இந்தத் துறையிலே அதிக வருவாய் வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒரு 'upward trend' இருக்கிறதா ? அது மட்டுமல்லாமல், கள்ளக் கணக்குகள் வைத்து, இதிலே பெரிய ஏமாற்றங்கள் எல்லாம் நடைபெறுவதால், அதைப் பற்றி ஆங்காங்கு சென்று, உடனடியாகப் பிடித்து, நடவடிக்கை எடுப்பதற்கு சர்க்கார் முயற்சிகள் மேற்கொண்டுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்தத் துறையில் அரசாங்கம் சுறுசுறுப்பான அக்கறை செலுத்தி வருகிறது. ஆனல், வீடுகள், மற்ற இடங்களில் எல்லாம் சோதனை போட்டதற்குப் பிறகு, சுப்ரீம் கோர்ட்டில் சில தாவாக்கள் இருக்கிற காரணத்தால், சட்ட சம்பந்தமான சில பிரச்னைகள் முடிவாக வேண்டியிருக்கிற நிலைமைகளில் இவைகளில் வேகமாகக் காரியங்களைச் செய்ய முடியவில்லை.

Collection of kist in inam villages.

முற்பகல் 10-00 * 374 *Q.*—THIRU A. BALASUBRAMANYAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have not appointed officials to collect kist from the ryots of inam villages in Pudukkottai Division taken over by the Government under the Inam Abolition Act, 1963 ;

(*b*) whether it is also a fact that even the kist has not been determined so far ;

(*c*) whether any representation has been received by the Government on the large number of suits filed by inamdars against the poor ryots taking advantage of non-appointment of officers and non-determination of kist ; and

(*d*) if so, the action taken or the decision of the Government in the matter ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN :

(*a*) No. The Tahsildars of the taluks and the Deputy Tahsildars in charge of the sub-taluks have been appointed to manage the inam estates within their respective jurisdiction with effect from the notified date. It is their responsibility to collect the kist through the village officers concerned.

(*b*) The question at what rates the assessments have to be collected in areas in Pudukkottai Division involved a very detailed examination and the Government were able to issue orders in the matter only in April 1967. After the receipt of Government orders, the District Revenue Officer, Tiruchirappalli has issued instructions to the Tahsildars to prepare accounts for Fasilis 1375 and 1376.

(*c*) & (*d*) No. In certain villages there were disputes between' the in Inamdars and the ryots only in regard to the sharing of the produce both claiming that they were entitled to ryotwari patta. Such disputes were amicably settled and no case is reported to have been taken to the Court.

தென் ஆற்காடு மாவட்டத்தில் நெல் கொள்முதல்

* 375 விஞ.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1967 ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் முதலிய நான்கு மாதங்களில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் ரகங்கள் யாவை ?

(இ) எவ்வளவு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன ?

(உ) கோவாப்பரேடிவ் சொஸைட்டி மூலம் எவ்வளவு ?

(எ) சர்க்கார் கொள்முதல் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) 1967 ஜனவரி, பிப்ரவரி மார்ச், ஏப்ரல் திங்கள்களில் தென் ஆர்க்காடு மாவட்டத்தில், கீழ்க்கண்ட நெல் ரகங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன :—

(1) செங்கற்பட்டு சிறுமணி (கே. 19).
(2) கார்த்திகைச் சம்பா.
(3) குதிரைவால்.
(4) வேழம்கொண்டான்.
(5) ஒட்டுக் கிச்சடி.
(6) கருடன் சம்பா.

(இ) 8,40,820 மூட்டைகள் (ஒவ்வொரு மூட்டையும் 75 கிலோ கிராம் கொண்டது) அல்லது 42,041 டன் அரிசி.

(உ) 99,440 மூட்டைகள் (ஒவ்வொரு மூட்டையும் 75 கிலோகிராம் கொண்டது) அல்லது 4,972 டன் அரிசி.

(எ) 7,41,380 மூட்டைகள் (ஒவ்வொரு மூட்டையும் 75 கிலோகிராம் கொண்டது) அல்லது 37,069 டன் அரிசி.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, சிதம்பரம் தாலுகாவில் மட்டும் எவ்வளவு மூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அது பற்றிய விவரம் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவர் அவர்களே, கடந்த அரசாங்கத்தினுல் கொள்முதல் செய்யப்பட்டதிலே நஷ்டம் வந்ததாகக் கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் கொள்முதலுக்காக வருகிற அதிகாரிகள் சரியாகப் பொருள்களைப் பார்க்காமல் ஈரத்தையும் மணலையும் கலந்திருந்த பொருள்களை, சர்க்கார் பொருள்தானே என்ற அசிரத்தையின் காரணமாகக் கொள்முதல் செய்ததால் பெருவாரியாக நஷ்டம் ஏற்பட்டது என்று கணக்குக் காண்பித்திருக்கிறது. இப்போது சர்க்காருக்

காகக் கொள்முதல் செய்யும்போது முறையாகக் காயவைத்த நெல்லைக் கொள்முதல் செய்வார்களா ? அப்படி நஷ்டம் வந்தால் அந்த நஷ்ட ஈட்டைக் கொள்முதல் செய்கிற அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து வசூலிக்க உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கொள்முதல் விஷயங்களில் சரியாக நடந்துகொள்ளவும், முறைப்படி உலர்ந்த நெல்லைக் கொள்முதல் செய்யவும் வேண்டிய நடவடிக்கைகளை அவ்வப்பொழுது சர்க்கார் எடுத்து வருகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் 8 லட்சத்து 40 ஆயிரம் மூட்டைகள் கொள்முதல் செய்ததாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த மாவட்டத்தில் எத்தனை மூட்டை கொள்முதல் செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எந்த அளவுக்குக் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற நிலையில், 40 ஆயிரம் டன் கொள்முதல் செய்ய வேண்டுமென்று குறியீடும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கொள்முதல் வெற்றிகரமாகவும், நடைபெற்றிருக்கிறது. குறிப்பாக நண்பர் சிவசுப்பிரமணியன் அவர்களுடைய சிதம்பரம் தாலுகாவிலிருந்து பெருமளவுக்குக் கொள்முதலாகியிருக்கிறது. தென் ஆர்க்காடு மாவட்டத்தின் குறியீட்டை எட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், இப்போது பெரும்பாலும் நெல் கொள்முதல் களத்து மேடுகளில்தான் நடக்கிறது. அந்த நெல் காயாமல் இருக்கும்போதே அதிகாரிகள் கொள்முதல் செய்துகொண்டு போய்விடுகிறார்கள். அந்த நெல்லை ஈரமாக இருக்கும்போதே அவியலில் போடும்போது அரிசி அவ்வளவு நன்றாக இருப்பதில்லை. ஆகவே, அதிகாரிகள் வந்து காயப்போட்ட நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்பது சரியானதாக இருக்கும் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி தென் ஆர்க்காடு மாவட்டத்தை ஒட்டியதா ? மூல வினாவையொட்டி, 'தென் ஆர்க்காடு மாவட்டத்திலா '?

திரு. கரு. சீமைச்சாமி : இப்படி நெல் கொள்முதல் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெறுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் சொல்லுகிற கூற்று, வியாதி வந்துவிட்டதென்றால் ஆளையே கொன்றுவிடுங்கள் என்று சொல்லுவது போல் இருக்கிறது.

தவிடு, பிண்ணாக்கு ஏற்றுமதி

*376 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தவிடு, பிண்ணாக்கு நமது மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு எவ்வளவு ஏற்றுமதி ஆகிறது ?

(இ) 1957 முதல் 1966 வரை வருட வாரியாக எவ்வளவு ஏற்றுமதி ஆகிறது ?

(உ) ஏனைய மாநிலங்களுக்கும் ஏற்றுமதி ஆகிறதா ? எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) முதல் (உ) வரை சபை முன் ஒரு விவர அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

a 563–564-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, கால்நடை அபிவிருத்திக்கோ, அல்லது பாதுகாப்புக்கோ மிக மிக அத்தியாவசியமானது தவிடும், பிண்ணாக்கும். இப்போது உரம் கிடைக்காத காரணத்தால் உரத்திற்குப் பதிலாகப் பிண்ணாக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. பிண்ணாக்கு வெளிநாடுகளுக்கு ஆயிரக்கணக்கான டன் கணக்கில் ஏற்றுமதி செய்யப்பட்டும், இந்தத் தேசத்திலே மற்ற ராஜ்யங்களுக்கு ரயில் மூலமாக மட்டும் 1965-ம் ஆண்டிலே 1,52,420 டன்னும், 1966-ம் ஆண்டிலே 23 ஆயிரத்து சொச்சம் டன்னும் ஏற்றுமதி செய்யப்பட்டும் இருப்பதால், அதனால் கால்நடைகள் பாதிக்கப்படும் அல்லவா ? கால்நடைகள் பாதிக்கப்பட்டால் விவசாயம் பாதிக்கப்படும் அல்லவா ? விவசாயம் பாதிக்கப்பட்டால், உணவு உற்பத்தி குறைந்து, அதனால் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி மக்களுக்குப் போட முடியாது அல்லவா ? ஆகவே இந்த அரசாங்கம் பிண்ணாக்கு ஏற்றுமதியைத் தடை செய்ய என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

மாண்புமிகு ழரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் கேட்ட கேள்வியை சர்க்கார் உணருகிறது. இது பற்றி மத்திய சர்க்காருக்கு எழுதி அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த அறிக்கையில் பார்க்கிறபோது, 1965–66-ல் வெளிநாட்டுக்கு அரிசித் தவிடு, பிண்ணாக்கு முதலியவை ஏற்றுமதி செய்யப்படவில்லையா ? அது கணக்கில் வராததன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : புள்ளி விவர இலாகா எந்தெந்த இனங்களுக்காகப் புள்ளி விவரங்கள் சேகரிக்கின்றார்களோ, அதில் தவிடு சேர்க்கப் படவில்லை. ஆகவேதான் புள்ளி விவரம் தரப்படவில்லை.

திரு. அ. மாரிமுத்து : வேறு மாநிலங்களிலிருந்து நமது மாநிலத்திற்கு கூட்டுறவு முறையில் பிண்ணாக்கு இறக்குமதி செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அது பற்றிய தகவல் இல்லை.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இப்போது விவசாயத்திற்கு உரம் தேவைப்படுகின்ற வகையில் பிண்ணாக்கு அதிகமான அளவில் தேவைப்படுகிறது. அதனுடைய விலையேற்றமும் இருக்கிறது. ஆகவே, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடுக்க மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்தி, ஏற்றுமதியினால்தான் விலையேற்றமும் இருக்கிறது -என்று கூறி, அதற்குத் தடை விதிக்க மத்திய அரசிடம் அனுமதி கோருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினரின் கேள்விவிக்கு நண்பர் கோதண்டராமனுக்கு அளித்த பதிலையே சொல்ல விரும்புகிறேன். பிண்ணாக்கு தடை செய்யப்படவேண்டுமென்பது நூற்றுக்கு நூறு அவசியம் என்பதை மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்தி எடுத்துக் கூறியிருக்கிறோம். தடை விதிப்பதற்கு மத்திய சர்க்காருடைய ஒப்புதலை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், பிண்ணாக்கு விவசாயத்திற்கு மிகவும் முக்கியமாக இருக்கிறது. இந்தப் பிண்ணாக்கை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் இவ்வளவு விலை உயர்வு ஏற்பட்டிருக்கிறது. நமது நாட்டிலே உணவுப் பஞ்சத்தைப் போக்க வேண்டும், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று பிரசாரம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, இந்த நேரத்திலே இந்த மாநிலத்தில் உற்பத்தியாகின்ற பிண்ணாக்கைத் தடை செய்து, இங்கேயே விவசாயத்திற்கு உரமாகப் போட ஏன் அரசாங்கம் ஏற்பாடு செய்யக் கூடாது என்று அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பிண்ணுக்கு அவசியம் என்பதை இந்த சர்க்கார் உணருகிறது என்று இரண்டு கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மணிலாப் பயிர் செய்பவர்கள், மணிலாப் பிண்ணுக்கு அதிகமாக வெளிநாடுகளுக்குப் போனுல், மணிலாவுக்கு அதிக விலை கிடைக்குமென்று எண்ணுகிருர்கள். நான் நேற்று தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குச் சென்றிருந்தேன். தென் ஆர்க்காடு மாவட்டத்தை மணிலா மாவட்டம் என்ற வேறு பெயருடன்தான் அழைக்கிருர்கள். இங்கு உற்பத்தியாகின்ற பிண்ணுக்கு இங்கிருக்கும் விவசாயிகளுக்கு உபயோகப்பட வேண்டுமென்பதுதான் இந்த சர்க்காரின் எண்ணம். ஆகவே, முக்கியமாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடை செய்ய வேண்டுமென்று மத்திய சர்க்காரின் அனுமதி கோரப்பட்டிருக்கிறது.

திரு. கே. விஞயகம் : ஐயா, பிண்ணுக்கு ஒரு வேளை விவசாயத்திற்கு அத்தியாவசியமாகக் கருதப்பட்டாலும் கூட அப்பேர்ப்பட்ட பொருள்களை அந்நிய நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதனுல் அந்நியச் செலவாணி கிடைக்கிறது. அதை வைத்துக்கொண்டு தொழில் அபிவிருத்திக்குப் பல இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வாங்குகிறேம் என்பது உண்மையா ? ஆகவே வெளிநாடுகளுக்கு நாம் ஏற்றுமதி செய்கிற பொருள்களைத் தடை செய்யாது ஏற்றுமதி செய்ய இந்த அரசாங்கம் தொடர்ந்து அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இது இரண்டாவது கருத்து. நமக்கு அந்நியச் செலாவணி தேவைதான். ஆனுல் ரசாயன உரம் கிடைக்காத காரணத்தினுல் பிண்ணுக்கு விவசாயிகளுக்கு உடனடியாகத் தேவைப்படுகிறது என்பதை உணர்ந்து அதன் ஏற்றுமதியைத் தடை செய்ய அரசாங்கம் யோசனை செய்து வருகிறது. அந்நியச் செலவாணி விஷயம் அரசாங்கத்திற்குத் தெரிந்துதான் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : பிண்ணுக்கு எந்த எந்த நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது ? அந்த அந்த நாடுகளில் இருந்து என்ன என்ன பொருள்கள் தருவிக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதைப்பற்றிய விவரம் என்னிடம் இல்லை. புள்ளி விவர இலாகாவுக்கு எழுதியும் அது தரப்படவில்லை என்று சொல்கிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : வெளிநாடுகளில் இந்தப் பிண்ணுக்கை வாங்கிக்கொண்டு போய் மாட்டு சூப், ஆட்டு சூப் முதலியவற்றை எல்லாம் சேர்த்து பிஸ்கெட்டுகளாக நமக்கே அனுப்பி பத்து பங்கு லாபம் பெறுகிருர்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : நாம் அனுப்புகிற கச்சாப் பொருள்களை, அவர்கள் தங்கள் அறிவு வளர்ச்சியின் பயனுக பிஸ்கெட்டுகளாகவும், வாசனை எண்ணெய் வகைகளாகவும் நமக்குத் திருப்பி அனுப்புகிருர்கள் என்பதை அரசாங்கம் உணர்ந்துதான் இருக்கிறது.

பூச்சிக் கொல்லி மருந்து

* 377 வினு.—திரு. கொளத்தூர் கோதண்டம்,
திரு. பி. வேங்கடசாமி,
திரு. வி. டி. அண்ணுமலை : } மதிப்பிற்குரிய
வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

உணவுப் பயிர்களுக்கும் பணப் பயிர்களுக்கும் (Cash crops) முறையே பூச்சி கொல்லி மருந்துகள் கொடுக்கப்படும்போது சர்க்கார் மான்யம் எவ்வளவு தரப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தற்போது உணவுப் பயிர்களுக்கு பூச்சிக் கொல்லி மருந்துகள் விற்பனையின்மீது அவற்றின் விலையில் 25 சத வீதம் உதவித்தொகை வழங்கப்படுகின்றது. சில வாணிகப் பயிர்களுக்குப் பூச்சி கொல்லி மருந்துகள் விற்பனையின் மீது விலையில் 50 சத வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது,

இரண்டு தினங்களுக்கு முன் விவசாயத் துறை மானியத்திற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் உணவுப் பொருளின் அவசியத்தை உணர்ந்து பூச்சிக் கொல்லி மருந்து 50 சத வீதம் உணவுப் பயிர்களுக்கும் சப்சிடி கொடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியதன் காரணமாட வாணிகப் பயிர்களுக்கு 50 சத வீதம் கொடுத்துவந்த சப்சிடியை 35 சத வீதம் ஆகக் குறைத்து, உணவுப் பயிர்களுக்கும், 35 சத வீதம் சப்சிடி கொடுப்பது என்பதாக—இரண்டுக்கும் சமமாக மானியம் வழங்கும் முடிவு ஒன்றை இந்த அரசு செய்துள்ளது என்பதை இந்த மன்றத்தில் அறிவித்திருக்கிறேன்.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, வாணிகப் பயிர்களுக்கு 35 சதவீதம் மானியம் என்று குறிப்பிட்டார்கள். புயலினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளிலாவது தென்னை மரப் பாதுகாப்புக்கு 50 சதவீதம் என்ற அளவிலாவது கொடுக்க முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : புயலினுல் பாதிக்கப்பட்ட பகுதிகள் சம்பந்தப்பட்டவரை அரசு என்ன செய்யும் என்பது பற்றி இந்த மன்றத்தில் நான் அளித்துள்ள விவரமான அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

Thiru B. VENKATASWAMY : Sir, nowadays, it is very difficult for the ryots to buy pesticides and fungicides because their prices have been increased as cmpared to the last year. But the procurement price is not increased proportionately. So, will the Government come forward to raise the price of foodgrains or give 50 per cent subsidy to pesticides and fungicides ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் முதல் கேள்விக்குப் பதில் அளித்திருப்பதைக் கூர்ந்து பார்த்திருந்தால் இந்தக் கேள்வி எழுந்தே இராது. பணப் பயிருக்கும் உணவுப் பயிருக்கும் இன்றைக்கு 35 சத விகிதம் உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தற்சமயம் பணப் பயிர்களுக்கு 75 சத விகிதம் அரசாங்க மானியம் ஆக சப்சிடி கொடுக்கப்படுகிறது. அதை 50 சத விகிதமாகக் குறைத்து உணவுப் பெருக்கத்தின் யோசனையை முன்னிட்டு, தற்சமயம் உணவுப் பயிருக்காக கொடுக்கப்படும் 35 சத விகிதம் சப்சிடியை 50 சத விகிதமாக உயர்த்த சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இப்போது இந்த அளவு சலுகை வழங்கப்பட்டதன் மூலமாக தமிழக சர்க்காருக்கு 10 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகிறது. கனம் அங்கத்தினர் கேள்விப்படி அதிகச் சலுகை அளிக்க, சர்க்காரின் நிதி நிலை தற்போது சரியாக இல்லாததால் முடியாத நிலையில் இருக்கிறது. இப்போது அளிக்கப்பட்டிருக்கும் சலுகையிலேயே விவசாயிகள் ஓரளவு திருப்தி அடைந்திருக்கிருர்கள்.

கரும்புத் தீர்வை

* 378. வினு—திரு. வி. கே. கோதண்டராமன் : மதிப்பிற்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் ரோட்டு வசதிகள் செய்வதற்காக Sugar cane cess fund ஆக இதுவரை எவ்வளவு தொகை கொடுத்துள்ளார்கள் ?

(இ) அதில் ரோட்டு அபிவிருத்தி செய்ய எவ்வளவு செலவு செய்யப்பட்டுள்ளது : மாவட்ட வாரியாக, சர்க்கரை மில் வாரியாக ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) —(இ) சபை முன் விவர அறிக்கை ([a]) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

---

[a] 565–566-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த விவர அறிக்கைப்படி பார்த்தால் வடாற்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை 29,81,260 ரூபாய் 48 பைசா கொடுத்திருக்கிறது. கோயம்புத்தூரில் இருந்து 6 லட்சத்தி சொச்சம் கிடைத்திருக்கிறது. செங்கற்பட்டு மாவட்டம் 12 லட்சம் சொச்சம் கொடுத்திருக்கிறது. சேலம் 10 லட்சம் சொச்சம் கொடுத்திருக்கிறது. இதில் செங்கற்பட்டு மாவட்டம் கொடுத்தது 12 லட்சம். ஆனால், ரூபாய் பதினொரு லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் ரூபாய் ரோடுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகமாகக் கொடுத்திருக்கும் வடாற்காடு மாவட்டத்திற்குப் போதுமான பாலங்களோ, ரோடு வசதிகளோ செய்து தரப்படவில்லை. ஆகவே அங்கே இருக்கும் ஷேர் ஹோல்டர்ஸ் எவ்வளவு தூரம் மனம் புண்பட்டு இருக்கிறார்கள் என்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? இத்துறையில் உடனடியாக நடவடிக்கை எடுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்கள் இரண்டு மூன்று கேள்விகளைச் சேர்ந்தாற்போல் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் பதில் சொல்கிறேன். வடாற்காடு மாவட்ட சர்க்கரை ஆலை 21–11–1960-இலும் மதுராந்தகம் ஆலை 22–3–1963-இலும் துவக்கப்பட்டன. ஆனால் செங்கற்பட்டு மாவட்டம் அதிகமாகச் செலவிட்டது என்றால் அதற்கான காரணம் நான் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஏற்கனவே அந்த மாவட்டத்தில் பொறுப்பில் இருந்தவர்கள் நல்ல அக்கறை காட்டி அளிக்கப்பட்ட தொகையை வைத்துக்கொண்டு கணிசமாக வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்திலும் கூடுமானவரை சர்க்கார் தீவிர கவனம் செலுத்தி ஆவன செய்யும்.

திரு. கே. விநாயகம் : ஆம்பூரில் இருக்கும் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வரவேண்டுமென்றால், அங்கிருக்கும் ரயில்வே லைனைத் தாண்டித்தான் வரவேண்டி இருக்கிறது. அப்போதைக்கப்போது அங்கிருக்கும் கேட் சாத்தப்பட்டு விடுவதால் சர்க்கரை ஆலைக்குக் கரும்பு வருவது தடைபடுகிறது. எனவே, இந்தப் பணத்திலிருந்து ஒரு பாலம் அமைக்க, மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார் யோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் அவர்களுடைய யோசனை நல்ல யோசனைதான். ஆனால் 1967–68-ம் ஆண்டுக்குரிய திட்டத்தில் இதற்கு வசதி இல்லை. ரூபாய் 30 லட்சம்தான் செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

அரிசன விடுதிகள், சீர்காழி வட்டம்

*379 வினா—**திரு. கே. பி. எஸ். மணி :** மதிப்பிற்குரிய ஹரிஜனநல செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சீர்காழி தாலூக்காவிலுள்ள அரிசனமாணவ, மாணவிகளுக்கான விடுதிகள் கட்டுவது சம்பந்தமாக தயார் செய்துள்ள திட்ட நகல் அமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதா ?

(இ) ஆம் எனில் நடப்பு ஆண்டிலேயே மேற்படி கட்டடங்களைக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சீர்காழியில் அரசினர் மாணவர் விடுதி, அரசினர் மாணவியர் விடுதி ஆகியவற்றிற்கும் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. கே. பி. எஸ். மணி : இந்தப் பிரசினை கடந்த எட்டு ஆண்டு காலமாக பரிசீலிக்கிறோம், பரிசீலிக்கிறோம் என்று முன்பிருந்த நிர்வாகத்தால் சொல்லப்பட்டது. இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தனியாக இயக்குநர் இருந்தால் நன்றாக இருக்குமென்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கம் ஜூனியர் கிரேட் டைரக்டர்களை இந்தக் கமிட்டியை விட்டு எடுத்து விட்டு ஸீனியர் கிரேட் ஐ.ஏ.எஸ். ஆபீஸர்களை எஜுகேஷன் விங்கில் போட்டால் சரியாக இருக்கும். இதற்குரிய திட்டத்தை அரசாங்கம் ஆராயுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தாமதப்படுவதற்கு கனம் அங்கத்தினர் கூறுவது காரணம் அல்ல. ஆனால் அந்த இடங்களில் எல்லாம் விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று, கலெக்டர்கள் இடமிருந்தது ஆர். டி. ஓ.க்களுக்கு, புறம்போக்கு நிலங்களில் கட்டுவதற்கான திட்டங்கள் கேட்கப்பட்டிருக்கின்றன. ஆர்.டி.ஓ.-க்களிடமிருந்து இந்தக் கணக்குகள் வந்தவுடன் காவேரி டிவிஷன் எக்ஸிகியூடிவ் இன்ஜினியர்கள் அந்த விடுதியைக் கட்டுவதற்கு திட்டம் தீட்டித் தருவார்கள். உடனடியாக அரிசனங்களுக்கு விடுதிகள் கட்டுவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யும்.

கைதிகளுக்கு உணவு.

* 380 வினா.—**திரு. வி. கே. கோதண்டராமன் :**
திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : } மதிப்பிற்குரிய
திரு. டி. மார்டின் :

சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறையிலுள்ள கைதிகளுக்குப் போதுமான அளவு சரியான உணவு கொடுக்கப் படுவதில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்வி எழவில்லை.

திரு வி. கே. கோதண்டராமன்: ஸார், யானை கொழுத்தால் வாழைத் தண்டு. மனிதன் கொழுத்தால் கீரைத்தண்டு என்பது பழமொழி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பழமொழி கேள்வியாகாது, நேரம் இல்லாத காரணத்தால், அங்கத்தினர்களை ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். எனவே, பழமொழிகள் சேர்க்காமல் கேள்விகளை மட்டும் கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு வி. கே. கோதண்டராமன் : ஜெயிலில் நல்ல உணவு கொடுக்கப்படுவது இல்லை. அதனால் கைதிகளின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது. ஆகவே, வாரத்தில் ஒரு நாளோ, இரண்டு நாளோ கறி, மீன் போன்ற சத்துள்ள உணவு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கீரையில் அதிகச் சத்து இருப்பதாக விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். ஆகவே, ஜெயிலில் கீரையுடன் உருளைக்கிழங்கு, தக்காளி ஆகியவையும் கொடுக்கிறோம்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : கீரை சத்துள்ளது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆனால், உணவுடன் புழுவையும், மண்ணையும், கீரை வேரையும் போடுவது நல்லதல்ல. அங்கு அளிக்கப்படும் குழம்பில் உலகத்தில் உள்ள எல்லா வஸ்துக்களும் இருக்கின்றன. ஆகவே அந்த நிலையை மாற்றி நல்ல உணவளிக்க சர்க்கார் நடவடிக்கை உடனடியாக எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் ரொம்ப நாட்களுக்கு முன்பு சிறையில் இருந்திருக்கிறார்கள் என நினைக்கிறேன். இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு இப்படிப்பட்ட குறைகள் எல்லாம் இருப்பதில்லை.

திரு. டி. மார்டின் : மதுரை மத்தியச் சிறையில் கைதிகளுக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருந்த கடலை மிட்டாய் நிறுத்தப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட எண்ணெய் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் ஏதேனும் புகார்கள் இந்த அரசுக்கு வந்ததா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இருந்தால் அனுப்பி வைக்கலாம்.

Thiru K. VINAYAKAM : May I know whether the Minister was any day a prisoner in our State, what his experience was, what the type of food that he got was and whether he was given any better treatment than the ordinary prisoners ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு மூன்று முறை சிறையில் இருந்திருக்கிறேன். அப்போது இருந்த நிலைமையை நான் இந்த சட்ட சபையிலேயே சொல்லி இருக்கிறேன்.

*381 வினா.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சிறைகளில் உள்ள கைதிகளுக்கு ஒரு நாளைக்கு, ஒரு நபருக்கு 1966-67 ஆண்டில் உணவிற்காக நிர்ணயிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச் சாலைகளில் கைதிகளுக்கு உணவு அளிப்பதற்குச் செலவு வீதம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கைதிகளுக்கு வழங்கவேண்டிய உணவு அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அளவின்படி கைதிகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஒரு கைதிக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்றால், தினசரி நல்ல கறி, குழம்பு, தயிர் ஆகியவைகளுக்காக அளவு இல்லாமல் செலவு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைதிகளுக்கு பொதுவாக எவ்வளவு உணவு கொடுக்கவேண்டுமென்பதற்குத் தான் விதி இருக்கிறது. எந்தெந்த உணவு எவ்வளவு கொடுக்கப்படவேண்டுமென் பதற்கும் விதி இருக்கிறது. அவர்களுக்கு நல்ல முறையில், நோயில்லாமல் வாழ்வதற்குரிய வகையில் உணவு அளிக்கப்பட வேண்டுமென் பதற்குத்தான் விதி இருக்கிறது.

Marriage Registrars

*382 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that temple Executive Officers have been appointed as Marriage Registrars : and

(*b*) if so, the purpose or object of such appointments ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கோவில்களில் நடக்கும் இந்து திருமணங்களைப் பதிவு செய்வதற்காக அந்தந்தக் கோயில் நிர்வாக அதிகாரிகள் திருமணப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

V211_31 N67
N67.5.5
65026

Thiru K. VINAYAKAM : Are the Executive Officers of temples paid any extra remuneration for doing this extra work ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கனவே கோவில்களில் இதுபோன்ற திருமணங்கள் நடத்தப்படுவதற்கு ரசீது கொடுத்து வந்தார்கள். அது ரிஜிஸ்தர் செய்வதற்கு அனுமதி இல்லாமல் இருந்தது. இப்போது அதற்கான விதி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது சட்டபூர்வமாக ரிஜிஸ்தர் செய்யப்படும்.

மத்திய சிறை இடமாற்றம்.

* 383 வினா :—**திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறைச்சாலையை நகருக்கு வெளியே மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நிதி இடர்ப்பாடு நிலை நீங்கியதும், இச்சிறைச்சாலை வேறு இடத்திற்கு மாற்றப்படும்.

Dr. H. V. HANDE : Will the Ministry take up the work as early as possible and help the Health Ministry to have additional accommodation for the extension of the General Hospital ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கு மொத்தம் 201 ஏக்கர் 80 சென்ட் வேண்டுமென்று கோரப்பட்டது. 107 ஏக்கர் ஒரு சென்ட் கிடைத்திருக்கிறது. இதற்கு ஒரு கோடிக்கு மேல் தேவைப்படுவதால் இதைத் தொடர்ந்து பரிசீலித்து நிதி வசதிக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள்

* 384 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கைசெய்யும் கூட்டுறவு இலாகா தணிக்கையாளர்களை நிறுத்திவிட்டு அக்கௌண்டண்ட் ஜெனரல் ஆபீஸ் அலுவலர்களைக் கொண்டு தனிக்கை செய்யும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை. தமிழக அரசிடமிருந்து பெருமளவில் நிதி உதவி பெறும் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை இலவசமாகச் சோதனை முறையில் தணிக்கை செய்வதற்கு மாநிலக் கணக்காளர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அவருடைய செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்போது ஆடிட் பண்ணுவது முறையாக இல்லை. இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை நல்லமுறையில் தணிக்கை செய்ய தனியாகவே ஒரு அதிகாரியைப் போட்டு அதைப் பரிசீலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவு இலாகாவில் தனியாகவே ஆடிட் விங் இருக்கிறது. அதன் தலைவராக அக்கவுண்டன்ட்-ஜெனரல் ஆபீஸில் இருந்து சீப் ஆடிட் ஆபீசர் போடப்பட்டிருக்கிறார். இதை எந்த முறையில் அமைக்கலாம் என்பது பரிசீலனையில் இருக்கிறது.

* 385 விஞ.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூக்காவில் கூட்டுறவு சங்கங்கள் அமைக்க வேண்டுமென்று கோரி எத்தனை கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன ?

(இ) அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) and (இ) தாண்டவராயன் சோழகப்பேட்டை கிராமத்திலிருந்து ஒன்றும், வயலானூர் கிராமத்திலிருந்து ஒன்றும் ஆக இரண்டு முறையீடுகள் வந்தன.

(2). தாண்டவராயன் சோழகப்பேட்டை கிராமத்திற்கு மட்டும் நாணயச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டால் அது திறம்படச் செயல்படுவது அரிது. எனவே மனுக்கொடுத்தவர்கள் அவர்களுடைய கிராமத்திற்கு அண்மையில் உள்ள கணக்கர்பட்டு பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேருமாறு அவர்களுக்கு ஆலோசனை கூறப்பட்டது.

வயலானூர் கிராமத்திலிருந்து வந்த முறையீட்டைப் பொறுத்தவரையில் வயலானூர் முத்தாலம்மன் பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் நாணயச் சங்கமொன்று அக்கிராமத்தில் ஏற்கெனவே இருப்பதாகத் தெரியவந்துள்ளது. இச்சங்கம் பல்லாண்டுகளாகச் செயலற்றிருந்ததாலும், அச்சங்கத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லையாதலாலும் அச்சங்கத்தைக் கலைப்பதற்காக அரசாங்கக் கலைப்பு அதிகாரி (Official Liquidator) ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இந்த வயலானூர் கிராமம் அண்மையிலுள்ள பூவாலை பல நோக்கக்கூட்டுறவுச் சங்கத்தின் செயல் எல்லைக்குள் இப்போது சேர்க்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க சர்க்காரின் அடிப்படைத் திட்டங்கள் என்ன ? ஹரிஜனங்களுக்குத் தனிச் சலுகை அளிக்க இந்தச் சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுச் சங்கம் அமைக்கப்படுகிறபோது லையபிள் யூனியனுக இருக்க வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அங்கத்தினர்கள் அத்தனைபேரும் சேர்ந்திருந்தால்— அது செயல்படப்போதுமா என்று பார்த்து முடிவு செய்யப்படுகிறது. ஹரிஜனங்களுக்கு எந்த முறையில் அமைக்க வேண்டும் என்பதை எழுதி அனுப்பினுல் பரிசீலிக்கப்படும்.

நவீன அரிசி அரைவை ஆலை, திருவாரூர்

*386 விஞ.—**திரு. ஏ. அ. சுப்பராஜா :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தய்வுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருவாரூர் நவீன அரிசி ஆலை எப்பொழுது துவக்கப்பட்டது ?

(இ) இதுவரையில் எத்தனை டன்கள் அரிசி அரைவை நடத்தியிருக்கிறது ?

(உ) ஒரு டன் அரிசி அரைவை செய்ய இவ்வாலையில் எவ்வளவு செலவு ஆகிறது ?

(எ) தனியார் மில்லில் அரைவை செய்ய ஒரு டன்னுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தொகையென்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதியன்று திருவாரூர் நவீன அரிசி ஆலை துவக்கப்பட்டது.

(இ) 1967-ம் ஆண்டு மார்ச் முடிவுவரை 16,275 (பதினாறு ஆயிரத்து இருநூற்று எழுபத்தைந்து) டன் நெல் அரைக்கப்பட்டது.

(உ) ஒரு டன் நெல்லை இவ்வரிசி ஆலையில் அரைக்க ரூ. 10·03 செலவாகிறது.

(எ) தனியார் அரிசி ஆலையில் ஒரு டன் நெல் அரைக்க விதித்துள்ள கட்டணம் ரூ. 10·20 ஆகும்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : அரசாங்கம் நடத்துகிற நவீன ஆலையிலே நல்ல ரக நெல்லை அரைவைக்குக் கொடுத்ததிலே 70,72 சதவீதம் வரை அவுட்டர்ன் கிடைக்கிறது. ஆனுல் அதே நேரத்திலே அதே நெல்லை தனியார் துறையிலே அரைப்பதற்கு ஒப்பந்தம் செய்கிறபொழுது 65 சதவீதம்தான் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படுவதாகக் கேள்விப்படுகிறேன். இந்த வித்தியாசத்தால் நமக்குக் கிடைக்கின்ற லாபம் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய அளவில் இருக்கிறது. ஆகவே, இதைத் தடை செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடுகள் செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த நவீன ஆலை ஏற்படுத்தியதே அதற்காகத்தான். திருவாரூரிலே நவீன ஆலையை அந்த முறையில் தான் ஏற்படுத்தி இருக்கிருேம். தனியார் துறையில் ஒப்பந்தம் செய்வதைப் பொறுத்த வரையில் தவறு இருந்தால், அது பரிசீலிக்கப்படும்.

திரு. நா. காசிராமன் : திருவாரூரில் உள்ள நவீன ஆலையில் ஒரு நாளைக்கு எவ்வளவு டன் அரைக்க முடியும், ஒரு வருடத்திற்கு எவ்வளவு டன் அரைக்க முடியும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒரு வருடத்திற்கு 28,800 டன் நெல் அரைக்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இதை ஃபேஸ்ட் புரோகிராமிலே ஆரம்பித்திருக்கிருர்கள். இதுவரை 38 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டு தொடங்கப்பட்டிருக்கிறது. இதனுடைய முழுப் பலனையும் பின்னுல்தான் சொல்ல முடியும்.

நகராட்சிக்குக் குடிநீர்த் திட்டம்

* 387 விஞ.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மதிப்பிற்குரிய மருத்துவத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சிதம்பரம் நகர மன்றத்திடமிருந்து, குடி நீர்த்திட்டம் மேலும் விஸ்தரிக்க எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு அதற்காக உதவி மானியம் கேட்டு அரசாங்கத்திற்குக் கோரிக்கைகள் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) and (இ) சிதம்பரம் நகராட்சிக்கான குடிநீர் வழங்கு மேம்பாட்டுத் திட்டத்தின் முதல் கட்ட வரைவு மதிப்பீடுகள் தலைமைப் பொறியாளரிடமிருந்து வந்துள்ளன. இதன் முதலீட்டுச் செலவு ஏறத்தாழ ரூ. 3·24 லட்சம் ஆகும். இத்திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து, அதைச் செயல்படுத்துவதற்கு ரூ. 2·24 லட்சம் கடனுதவி அளித்தல் வேண்டும் எனக் கோரும், சிதம்பரம் நகராட்சி மன்றத் தீர்மானம் ஒன்று 14—6—1967 அன்று வந்துள்ளது. இத்திட்டத்தை அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், சிதம்பரம் ஒரு பெரிய நகரம். ஜனப் பெருக்கம் அதிகமாகியிருக்கிறபடியால், இப்பொழுது இருக்கிற குடிநீர்த் திட்டம் போதாது. ஆகையால் நம்முடைய அரசானது உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் குறிப்பிட்ட காரணமாகத்தான் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

* 388 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Municipal Council of Vaniyambadi, North Arcot district has applied for a loan to the Government for a Water Supply Scheme to be embarked upon so as to get drinking water from river Palar, and

(b) if so, what action was taken ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) வாணியம்பாடி நகராட்சியில் நீர் வழங்குத்திட்டம் ஒன்றைச் செயல்படுத்துவதற்கு ரூ. 30·65 லட்சம் கடனுதவி அளிக்கக் கோரும் தீர்மானத்தின் நகல் ஒன்று 17—6—1967 அன்று வந்துள்ளது.

(இ) வாணியம்பா்டி நகராட்சி ஆணையாளர் 16—6—1967 அன்று நகராட்சி மன்றம் கோரும் கடனுதவிக்கான விண்ணப்பத்தை தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியுள்ளார். இது தலைமைப் பொறியாளரின் பரிந்துரையுடன் வந்ததும், அதன் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Sir, whereas Vaniyambadi is a very important centre of tanning of hides and skins and the dirty waters that flow out of these factories result in all sorts of diseases, will the Government think of the possibility of expediting these drinking water supply schemes as early as possible and do not postpone them for their own convenience ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Sir, for the very reason detailed by my hon. Friend, the matter is under the active consideration of the Government.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய மாணவர்களுக்கு ஒதுக்கப் பட்டுள்ள விகிதாசாரப்படி இடங்கள் கிடைக்காமை.

திரு. கே. பி. எஸ். மணி : கனம் சபாநாயகர் அவர்களே, தமிழக அரசினர் கல்லூரிகளிலும், தனியார் கல்லூரிகளிலும் தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சமூக மாணவர்களுக்கு அவர்கள் வேண்டும் குரூப்புகளை முறையே 16 சதவீதம், 25 சதவீதம் விகிதாசாரப்படி ஒதுக்கித்தராமல் மார்க் என்ற அடிப்படையில் உயர்த்தி வைத்துக்கொண்டு பிரின்சிபால் கள் இடம் கொடுக்காமல் தடைசெய்வதால் நூற்றுக்கணக்கான வர்கள் கல்லூரிகளில் சேரமுடியாமலும், பிற்காலத்தில் வேலை வாய்ப்பும், உயர் பதவிகளுக்கும் வராமல் தடுக்கும் மறைமுகத் தடையாக உள்ளது என்ற அவசரப் பொதுமுக்கியம் வாய்ந்த விஷயத்தை விவாதிக்க சட்ட மன்றக் கூட்டத்தை ஒற்றிவைக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்காகப் பேரவையின் நடவடிக்கைகளைத் தள்ளிப்போட வேண்டியதில்லை. ஆகையால் பேரவைத் தலைமை இதற்கு இசைவு கொடுக்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. கவன ஈர்ப்பு.

மருத்துவக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களிடமிருந்து உறுதி மொழி பெறுதல்.

திரு. சு. துரைசாமி : மருத்துவக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு ரூ. 50,000 வரையில் அரசு செலவு செய்து டாக்டர் படிப்பு படிக்க வைத்து படிப்பு முடிந்தவுடன் மேற்படி மருத்துவக் கல்லூரி மாணவர்கள் சொந்தமாகத் தொழில்செய்யவும், வெளிநாடுகளுக்குப் போகின்ற நிலைமையும் இருப்பதால் ஏராளமான கிராமங்களில் டாக்டர் இல்லாத பெரும் குறை இருந்து வருகிறது. ஆகவே, மற்ற மாநிலங்களைப் போல் இந்த அரசும் மருத்துவக் கல்வி பயில சேர்த்துக்கொள்ளும் மாணவர்களிடம் குறைந்தது சில ஆண்டுகளாவது அரசாங்கத்திடம் பணியாற்ற வேண்டுமென்ற உறுதிமொழி வாங்கவேண்டியதைப்பற்றி அவசரமும், முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு பொதுச் சுகாதார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : Mr. Speaker, Sir, the question of compelling Medical graduates to serve in rural areas for a specified period, after their graduation was considered at length in 1949. The suggestion made at that time was that all persons trained in the Medical Colleges should agree to settle and practise in the villages at least for a period of three years after they took their degrees and that on that condition only, they should be admitted to the Medical Colleges. The view was held that it would not be possible to enforce such a condition. The matter was also considered by the Cabinet and the Government decided to drop the question. The same issue was again taken up for consideration in 1953 at the instance of the Government of India and the earlier decision was reiterated.

Again in 1954, the Government of India suggested that medical graduates might be required to put in a minimum period of one year's service in the rural or tribal areas before thay were recruited to Government service. It was held that it would not be possible to lay down such a rule and the suggestion of the Government of India was not accepted. A scheme to grant scholarships and stipends to a certain number of medical students every year and to take bonds from them so as to bind them to serve the Governmet in rural areas for a stipulated period on completion of the medical course was considered in 1961. As it was expected that sufficient number of medical graduates would become available by the end of the Third Five-Year Plan, the scheme was dropped.

In August 1964, the Government of India considered the necessity of taking bond or undertaking from medical students to serve the Government after qualifying in the final M.B.B.S. examination. The Government of India have held that any bond taken from a candidate engaging himself to serve the Government for a period of time after qualifying as a medical practitioner would be constitutionally void unless it were given for some special consideration which made it a reasonable restriction in the general public interest. The Government of India have suggested that it may be made obligatory for all scholarship holders or persons admitted to seats

reserved for special interests like scheduled castes and scheduled tribes, etc. to fill in a bond or undertaking to serve the Government after qualifying in the final M.B.B.S. examination for a minimum period of three years. This Government have examined the suggestion of the Government of India and have decided that a bond shall be taken on the lines sugested from the following categories of students admitted to M.B.B.S. course in Government Medical Colleges :—

(i) all students who received cholarships from the Government.

(ii) students from outside Madras State and refugees (Indian citizens) except those from abroad who are admitted against reserved seats.

It was decided that these orders might be given effect to in future. Necessary instructions have already been issued by the Director of Medical Education to the Deans/Principals of all Government Medical Colleges to take action to implement the orders of Government.

Necessary provision has also been included to this effect in the Prospectus for the I Year Integrated M.B.B.S. course, July 1967 session which is extracted below :—

" 25. All students who receive scholarship from the Government including those students from outside Madras State and Refugees excepting those from abroad, who are admitted against the reserved seats, shall execute a Bond, in the form appended in the Prospectus with a Guarantee from the Parent or Guardian of the student and from two other sureties. Such candidates shall serve the Government for not less than three years in Madras Medical Service as may be directed by Government."

In the circumstances, it will not be possible to insist on executing a bond or undertaking to serve the Government for a specified period after completion of the M.B.B.S. course, by all students selected and admitted to M.B.B.S. course in Government Medical Colleges.

4. அறிக்கை அளித்தல்

உரிமைக் குழுவின் அறிக்கை—திரு. ஏ. சிதம்பரநாத நாடார் பேரவைத் தலைமைமீது ஒருதலைக் ~ற்றம் சாட்டியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, உரிமைக் குழுவின் அறிக்கை ஒன்றை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இப்பேரவைக்கு அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு ஏ. சிதம்பரநாத நாடார் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைமை மீது ஒருதலைக் குற்றஞ்சாட்டி அவையின் உரிமையை மீறியதாக ஏற்பட்ட வழக்கு பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை இப்பேரவைமுன் வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையுரிமைப் கேள்விகள் பற்றிய மூன்று தீர்ப்புகள் நாளை வழங்கப்படும்.

5. அரசினர் மசோதாக்கள்

(அ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) மசோதாவில் (சட்டப் பேரவை மசோதா எண் 2/1967) சட்ட மேலவை செய்த திருத்தத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் கோருவார்கள்.

THE HON. THIRU S. MADHAVAN ; Sir, I move—

"That the following amendment made by the Legislative Council in respect of the Madras District Municipalities (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 2 of 1967) as passed by the Legislative Assembly, be taken into consideration.")

Clause 2.

In clause 2, in new sub-section (5-A), add the following proviso:—

"Provided that before publishing a notification under this sub-section, the State Government shall publish in the *Fort St. George Gazette*, a notice specifying the grounds on which they propose to publish such notification, fix a period of not less than four weeks for any person interested to show cause against the proposal and consider the objections, if any."

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்தத் திருத்த மசோதாவின் மீது ஏற்கனவே இதே மன்றத்தில் விவாதம் செய்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். என்றாலும் இது கவுன்சிலுக்குச் சென்றதற்குப் பிறகு அங்கே இருக்கக் கூடிய மெஜாரிடி காரணமாக,—அரசியல் நோக்கத்தோடு என்று கூடச் சொல்லலாம்—அந்த அடிப்படையில் இதை வேறு ஒன்றும் செய்யவில்லை என்று சொன்னாலும் எந்த அளவுக்குக் காலதாமதம் செய்ய வேண்டுமா—" டிலே டாக்டிக்ஸ் "—அந்த அளவுக்குக் காலதாமதம் செய்வதற்கு உரிய வழியைக் கையாண்டு இதற்கு ஒரு திருத்தத்தை உண்டாக்கி பொதுமக்களிடத்தில் அனுப்பி வைத்து அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கேட்டு அதற்குப் பிறகு முடிவு எடுக்க வேண்டுமென்ற பிரச்சினையில் இருக்கிறது. இது ரொம்பப் பெரிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல—பொதுமக்களைப் பாதிக்கக் கூடிய பிரச்சினை ஒன்றும் இதிலே இல்லை. நகராட்சியைப் பொறுத்தமட்டில் உள்ள விஷயந்தான். அவர்கள் ஏற்கனவே செய்த தவறை உணருவதற்குப் பதிலாக அந்தத் தவறு செய்ததை ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற அளவுக்குத்தான் இது இருக்கிறது. ஆகவே, அந்தத் திருத்தம் அவசியமே கிடையாது. அது நிராகரிக்கப்பட வேண்டுமென்று தெரிவித்து அதே நேரத்தில் ஏற்கனவே செய்திருக்கிற முடிவின் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்தத் திருத்தம் எப்படித் தேவையில்லை என்று முதலிலே அரசாங்கம் கருதியது என்று தெரிவிக்க ஆசைப்படுகிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்ன கருத்து நாங்கள் ஏற்கெனவே பரிசீலித்த கருத்துத்தான். ஒரு திருத்தச் சட்டத்தின் மூலம் ஒரு ஆணை பிறப்பிக்கப்படும்போது

அந்த ஆணையால் பாதிக்கப்படுபவர்கள் யாராவது இருந்தால் அவர்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதுதான் ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட விதியாகும். இந்தத் திருத்தச் சட்டத்தின் மூலமாக மக்களுக்கு நன்மை செய்யப் போகிற காரணத்தால் "ஷோ காஸ் நோட்டீஸ்" கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்று இந்த அரசாங்கம் கருதியது என்று கனம் அங்கத்தினர் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்ளுகிறேன். இது மேலவைக்குச் சென்ற பிறகு இதுபோன்ற வாதம் கூறப்பட்டது. நோட்டீஸ் கொடுப்பதிலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை; தவறு என்று கருதவில்லை, தேவையில்லை என்றுதான் கருதியது. எதிர்க்கட்சியினர் விரும்பினால் ஏற்றுக் கொள்ளத் தயார் என்று முதலிலேயே மேலவையில் சொன்னோம். அதை அவர்கள் அப்போது ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்குப் பின்னால் செலக்ட் கமிட்டிக்குச் சென்றது. அங்கும் அரசாங்கத் தரப்பில் இந்தக் கருத்தைச் சொன்னோம். அங்கும் ஏற்றுக்கொள்ளவில்லை. இதுபோன்ற அதிகாரமே கூடாது என்று சொன்னார்கள். மறுபடியும் மேலவைக்கு விவாதத்திற்கு வந்தபோது அவர்கள் இப்படிப்பட்ட ஒரு திருத்தம் தேவை என்று சொன்னார்கள். அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு எதிர்க்கட்சியின் கருத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்ற அளவில் இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதை ஏற்றுக் கொண்டு விட்ட காரணத்தால் எந்தவிதமான தவறும் ஏற்பட்டுவிட முடியாது என்று கனம் அங்கத்தினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்தத் திருத்தத்தை ஏகமனதாக எல்லோரும் சேர்ந்து நிறைவேற்றுவதிலே நோக்கத்திற்கு எந்த விதமான தடங்கலோ, தடையோ ஏற்படாது என்று உறுதி கூறி, இதை நிறைவேற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *பேரவையின் முன் உள்ள கேள்வி—*

"இந்தத் திருத்தம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *பேரவையின் முன்னுள்ள கேள்வி—*

"இந்தத் திருத்தம் மசோதாவின் இரண்டாவது பிரிவுக்கு உரிய பகுதியாகக் கருதப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move—

"That the Madras District Municipalities (Amendment) Bill, 1967 (L.A. Bill No. 2 of 1967) as amended be passed."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : *பேரவையின் முன்னுள்ள கேள்வி—*

"இந்த மசோதா திருத்தப்பட்டபடி சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, திருத்தப்பட்டபடி மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

6. அரசினர் தீர்மானம்.

பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதிகள்* 23 (1) *என்ற விதியின் கீழ், இன்றைய நிகழ்ச்சி நிரலில்* 6-*வது பிரிவாக இருக்கிற* "1967-*ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண்* 13/1967)" *என்பதை* 11-*வது பிரிவாக இருக்கிற* "*தமிழ்நாடு,* 1967-*ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண்* 18/1967)" *என்பதற்குப் பிறகு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கோருகிறேன்.*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

5. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(இ) சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 11/1967.)

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* "1967-*ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதா** *(சட்டப் பேரவை மசோதா எண்* 11/1967) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.*

1919-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழகச் சட்டம் 4/1919) 5-வது பிரிவில் வகுத்துள்ளவாறு, சென்னை மாநகராட்சி மன்றம் நூறு உறுப்பினர்களைக் கொண்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவர். சென்னை மாநகர் நூறு வட்டங்களாகப் பிரிக்கப்படுவதற்கு மேற்படி சட்டத்தின் 45-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரில் தமிழகச் சட்ட மன்றப் பேரவைக்கு உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை ஒட்டி, சென்னை மாநகரில் உள்ளாட்சி முறைக்காக பெருவட்டங்கள் முடிவு செய்யப்பட வேண்டுமென மேற்படி சட்டத்தின் 6-வது பிரிவில் சொல்லப்பட்டுள்ளது. 1967-ஆம் ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் சென்னை மாநகரில் சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகள் 10 மட்டுமே இருந்தன. எனவே மாநகராட்சியிலும், 10 பெருவட்டங்களும், ஒவ்வொரு பெருவட்டத்திலும் 10 வட்டங்களாக, 100 வட்டங்களும் இருந்தன. தொகுதி எல்லை மாற்ற ஆணைக் குழு தொகுதிகளை மாற்றியமைத்ததன் விளைவாக, சென்னை மாநகரில் தமிழகச் சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகளின் எண்ணிக்கை இப்போது 10-லிருந்து 12-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, மாநகராட்சியில் 12 பெரு வட்டங்களும், 100 வட்டங்களும் இருக்கும். பெருவட்டங்களின் எண்ணிக்கை 10-லிருந்து 12-ஆக உயர்வதால், முன்னர் இருந்ததுபோல, சட்ட மன்றப் பேரவைத் தொகுதிகள் ஒவ்வொன்றிலும் ஒரு சீராக 10 வட்டங்கள் இனியும் இருக்காது. இந்த எண்ணிக்கையை ஒரு சீராக அமைக்கும்பொருட்டு, வட்டங்களின் எண்ணிக்கையை 100 லிருந்து 120 ஆக உயர்த்த எண்ணியுள்ளது.

இதற்காக மேற்படி சட்டத்தின் 45-வது பிரிவிற்கு திருத்தம் தேவையென்று கருதப்படுகிறது. அப்போதுதான் முன்னர் இருந்ததுபோலவே ஒவ்வொரு பெரு வட்டத்திலும் 10 வட்டங்கள் இருக்கும். மேலும், வட்டங்களின் எண்ணிக்கை 100-லிருந்து, 120-ஆக உயர்த்தப்படுவதன் விளைவாக, ஒவ்வொரு வட்டத்திலும் வாக்காளர்களின் எண்ணிக்கையை ஒரு சீராக்கவும் எண்ணியுள்ளது. சென்னை மாநகரில் இப்போதுள்ள வட்ட எல்லைகளை மாற்றியமைப்பதன் வாயிலாக இதை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது. மேற்படி சட்டத்தின் 5-வது பிரிவில் மாநகராட்சி

* 1967 ஜூலை 10-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

உறுப்பினர்களின் எண்ணிக்கை 100 என வரையறுக்கப்பட்டுள்ளது. வட்டங்களின் எண்ணிக்கை கூடுவதன் விளைவாக உறுப்பினர்களின் எண்ணிக்கையும் 100-லிருந்து 120-ஆக உயர்த்தப்படும். இதன் விளைவாகச் செய்ய வேண்டிய ஏனைய சில திருத்தங்களை மேற்படி சட்டத்தின் 48, 51-வது பிரிவுகளில் செய்யக் கருதப்பட்டுள்ளது எனச் சொல்லிக் கொண்டு, இச்சட்ட வரைவினை இம் மாமன்றம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Hon. Speaker, Sir, I wholeheartedly welcome this Bill. In connection with the Bill, I wish to offer a few remarks which I hope the Minister will bear in mind while drafting the rules and regulations under the Act.

Previously there were one hundred divisions in the City. Some divisions had only five thousand voters. The average number of voters in divisions 28 and 29 was nearly five thousand. But in Division 32 Vyasarpady the number of voters was thirteen thousand or fourteen thousand. There was a large variation in the number of voters between one division and another. I do not know what the reason for it is. Was it because of political motive.—I do not know and I cannot ascribe any motive. But the fact remains that in some divisions the number of voters was small and while in some others the number was large. The Corporation Councillor of the 32nd Division had to do the work of four Councillors. The volume of work he had to do was enormous and I had actually watched his work. But the Corporation Councillor of the 28th Division will have to do only about one-fourth of the work compared with the work of the Councillor of the 32nd Division. I request the Ministry to issue proper instructions to the authorities who are going to frame rules under this Act to bear this in mind My criticism is that in respect of Assembly Constituencies also, in one constitutency the number of voters is 35,000 and in another it is 1,00,000. But we cannot change it, because it falls within the jurisdiction of the Central Government. But within an Assembly Constituency at least, we must see that all the divisions have more or less equal number of voters. It may be three hundred or four hundred this way or that way. But there should not be any large variation. If the Minister takes this into consideration, I will be very happy.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வட்டங்களைச் சீரமைக்கும் பணியினை எடுத்துக் கொள்ளும்போது ஒவ்வொரு வட்டத்திற்கான வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரே சீரானமுறையில் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதை ஏற்கெனவே ஏற்றுக் கொண்டு அதை அமல்படுத்துவதற்கான பணிகள் இப்போது தொடர்ந்து செய்யப்பட்டு வருகின்றன. இந்த ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம் நீண்ட காலத்திற்கு முன்னால் உருவாக்கப்பட்ட அந்தப் பிரிவினை முறைகள் இந்த மக்களின் இடமாற்றம் காரணமாக ஒருசில பகுதிகளில் அதிகப்படியான குடியேற்றமும் ஒருசில பகுதிகளில் குடியேற்றம் தாழ்ந்த விட்டதாலும், ஏற்பட்ட நிலைமைதான். ஒருசில இடங்களில் 10,000, 15,000 வாக்காளர்களும், சில வார்ட்களில் 5,000-க்குக் குறைவான வாக்காளர்களும் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. இவைகளை எல்லாம் சீராக்கி செப்பனிட்டு எல்லா வார்ட்களும் ஏறத்தாழ ஒரே சீரான முறையில் இருக்கவேண்டுமென்ற அடிப்படையில்தான் இதைப் பிரிக்கிற பணியினைச்

செய்யுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அப்படிப் பிரிக்கும்போது 120 பகுதிகளும், சமமான முறையில் வார்ட்கள் அமைக்கப்பட்டு அவர்கள் தங்கள் பணியினைத் திறமையாக ஆற்றும் முறை நிச்சயம் அளிக்கப்படும் என்ற உறுதியை தெரிவித்துக் கொண்டு இந்த வரைவை சட்டமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் உள்ள கேள்வி:—"1967-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 11/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு, இவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : "1967-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) மசோதாவை (சட்டப்பேரவை மசோதா எண் 11/1967) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(உ) நில்வுடைமைகள் (நடவடிக்கைகளின் நிறைவேற்றத்தை நிறுத்தி வைத்தல்) குறித்த (தமிழ்நாடு திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 9/1967).

The Hon. Thiru K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

'That the Holdings (Stay of Execution Proceedings) (Madras Amendment) Bill, * 1967 (L.A. Bill No. 9 of 1967) be taken into consideration.'

The Holdings (Stay of Execution Proceedings) Act, 1950 (Travancore-Cochin Act VIII of 1950) was in force in the Kanyakumari district and Shencottah taluk at the time of their transfer to this State from the former Travancore-Cochin State in 1956. Consequent on the extension to the Shencottah taluk of the Cultivating Tenants Protection and Fair Rent Acts by virtue of Madras Act 28 of 1959 with effect from 2nd March 1960, the Holdings (Stay of Execution Proceedings) Act ceased to be in force in that taluk. It is now in force only in the Kanyakumari district.

The Act provides for the stay of proceedings in execution of a decree in a suit for the recovery of possession of a holding, so far as they relate to the delivery of possession of the holding.

The Act is due to expire on the 24th September 1967. The Government had already undertaken necessary legislation for the abolition of certain special tenures prevalent in the Kanyakumari district and for the introduction of ryotwari settlement therein on the lines of the ryotwari settlement prevalent in the rest of the State. The implementation of the connected Acts is not yet complete. The question of abolition of the special tenure relating

*Published in the *Fort St. George Gazette* Extrordinary, dated 4th July 1967.

(Thiru K. A. Mathialagan) [1967 ஜூலை 17

to Sreepadam lands is also under consideration. In the circumstances, it is considered necessary to extend the life of Travancore-Cochin Act VIII of 1950 by two years from the 25th September 1967. The Bill seeks to achieve the above object.

I request the House to accept the motion.

*THIRU R. PONNAPPA NADAR : Sir, I rise to say a few words regarding L.A. Bill 9 of 1967. The life of the Holdings (Stay of Execution Proceedings) Act, 1950 (Travancore-Cochin ActVIII of 1950) is being extended piecemeal periodically. It will be advantageous if a comprehensive legislation is brought forward so that permanent relief may be granted to the lessees who are entitled to certain benefits under this Act. Now that the ryotwari settlement is going to be implemented in that district, there are some other tenures which ought to be abolished. For instance there is the tenure relating to Sreepadam lands or lands held by the former Maharaja of Travancore. These lands ought to be enfranchised.
மு.ப. 11–00 Certain tenures have already been enfranchised and a few in that category of lands still remain to be enfranchised. It will be in the interests of the ryots to bring forward legislation relating to Sreepadam lands.

So for as the peresent Bill is concerned, the priodical extension of the life of the Travancore-Cochin Act may be put an end to and a permanent legislation may be brought in. That is the only remark which I wish to offer. With these words, I conclude my speech.

திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மீது நான் இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் தயவு செய்து இப்போது இந்தச் சட்டம் விஸ்தரிக்கப்படக் கூடிய நேரத்திற்குள், கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கிற பல்வேறு முறைகளும், தமிழ் நாட்டில் இருக்கிற முறைகளும் மாறுபட்டவைகளாக இருப்பதால் அவைகளை ஒரே சீராக ஆக்கி, குத்தகைவாரம்தார் பாதுகாப்புச் சட்டங்களும் இதரச் சட்டங்களும் அங்குள்ளவர்களுக்கும் இங்கே இருப்பதைப் போன்றே இருக்கும் முறையில் இந்த இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் செய்ய வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்களும் குறிப்பிட்ட மாதிரி நம்முடைய மாநிலத்தில் இருக்கிற ரயத்வாரி முறையில் இவைகளை மாற்றுவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டு வருகிறது. இந்தச் சட்டம் மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படுகிறது என்பதாலேயே அது தள்ளிப் போடப்படுகிறது என்று பொருள் அல்ல. அவர்கள் குறிப்பிட்டதைப் போல, ரயத்வாரி முறையின் கீழ் ஸ்ரீபாதம் நிலங்களைக் கொண்டுவருவது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து மிகத் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இந்தக் கருத்துக்களை மனதிற்கொண்டு எவ்வளவு விரைவாகக் காரியங்களைச் செய்ய முடியுமோ அதை அரசாங்கம் செய்ய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மசோதாவை முழு மனதுடன் நிறைவேற்றித் தருமாறு எல்லாத் தரப்பினரையும் கேட்டுக் கொள்கிறேன்.

1967 ஜூலை 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேரவையின் முன் உள்ள கேள்வி :—"1967-ம் ஆண்டு நிலவுடைமைகள் (நடவடிக்கைகளின் நிறைவேற்றத்தை நிறுத்தி வைத்தல்) குறித்த (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 9/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே,

"1967-ம் ஆண்டு நிலவுடைமைகள் (நடவடிக்கைகளின் நிறைவேற்றத்தை நிறுத்தி வைத்தல்) குறித்த (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 9/1967) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்." என்று முன்மொழிகிறேன்.

மசோதா சட்டமாக ஆக்கபடவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(எ) தமிழ்நாடு குடியிப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப் படுவதினின்று பாதுகாப்பு அளித்தல்) திருத்த மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 10/1967).

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Bill,* 1967 (L.A. Bill No. 10 of 1967) be taken into consideration."

The landowners, in anticipation of legislation for imposition of ceiling on agricultural landholdings, were disposing of their lands on a large scale. In order to facilitate such disposal, they were also evicting from their Kudiyiruppus the agriculturists and agricultural labourers occupying them.

The Government considered that such large scale eviction would lead to agrarian unrest and should be put an end to. The Government, therefore, enacted the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act, 1961 (Madras Act 38 of 1961) so as to afford protection from eviction to occupants of kudiyiruppu for a period of three years in the first instance. By the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Amendment Act 1964 (Madras Act 24 of 1964), the Act was continued in force for another period of three years from the 29th November 1964. The intention then was to replace that Act by a permanent and comprehensive legislation conferring permanent rights on occupants of kudiyiruppu. The question of conferment of rights of ownership on occupants of kudiyiruppu is linked with the question of conferment of such rights on tenants of agricultural lands. Hence, legislation to confer on occupants of kudiyiruppu rights of ownership can be undertaken only after or simultaneously with the enact-

***Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated the 10th July 1967**

ment of a comprehensive tenancy law which will lay down the rights of agricultural tenants. It is also considered that a satisfactory and enduring solution to the question of conferring permanent rights on occupants of kudiyiruppu can be found only after the law dealing with the ceiling on landholdings has been fully implemented and the surplus lands have been taken over, and after the ryotwari settlement of inam estates, minor inams and leaseholds has been completed. These works are in progress. It has, therefore, been proposed to extend the life of the Madras Occupants of Kudiyiruppu (Protection from Eviction) Act 1961 (Madras Act 38 of 1961) for a further period of three years. The Bill seeks to achieve the above object.

I request the House, Sir, to accept the motion.

திரு. என். சங்கரய்யா : சபாநாயகர் அவர்களே, குடியிருப்புதாரர் சட்டத்தை மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு விஸ்தரிப்பதற்காக அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் மசோதாவை வரவேற்கும் நேரத்தில் பின் வரும் கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

அதாவது இந்த மசோதாவிற்கான நோக்கங்களும் காரணங்களும் இப்போது கூறப்பட்டிருப்பதிலே நிலவுடைமைக்கு வரம்பு கட்டும் சட்டத்தின் மீது நடவடிக்கைகள் பூர்த்தியான பிறகு, குத்தகை வார சாகுபடி செய்யக் கூடிய விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் முறையில் இந்த உரிமைகளைப் பற்றிச் சேர்த்துப் பரிசீலிக்க முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. சமீபத்தில் இந்த மன்றத்திலே கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போது அமைச்சரால் 25,000 எக்கர் தான் உபரி நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது என்றும், அதிலும் 16,000 எக்கர் தான் வசப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. அந்த அளவில் நிலவுடமைக்கு வரம்பு கட்டும் சட்டம் உண்மையில் பயன்படாமல் போயிற்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில சமயங்களில் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, இது பற்றி அரசாங்கம் ஆழ்ந்த பரிசீலனை செய்துவருவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கவனித்துத் தான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, இன்றைக்கு இருக்கக் கூடிய குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டத்தை நல்ல முறையில் பயன்படுத்தி, இன்றைக்குக் குடியிருப்பவர்கள் வெளியேற்றப்படாமல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பது தான். ஏராளமான விவசாயத் தொழிலாளர்கள் வாழும் இடங்களில் அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட்டு அவர்கள் வெளியேற்றப்படாமல் தடுக்கப்படுவது அவசியம் என்று கூறிக்கொண்டு, இன்றைக்குத் தவருன முறையில் நிறைவேற்றப்பட்டிருகிற நிலவுடைமைக்கு உச்சவரம்பு கட்டும் சட்டத்தை திருத்தி அமைத்து, விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கும் வகையிலும், அதையொட்டி குத்தகை வார சாகுபடிக்காரர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் வகையிலும், அவர்கள் குடியிருக்கும் இடங்களிலிருந்து வெளியேற்றப்படாமல் பாதுகாப்புக் கிடைக்கும் வகையிலும் அடுத்து வரும் ஆண்டுகளில் அரசாங்கம் மிகக் கடுமையாக சட்டங்களை இயற்றி நடவடிக்கை எடுக்கும் என்று விவசாயிகளும், குடியிருக்கக் கூடியவர்களும் எதிர் பார்க்கிறார்கள் என்று குறிப்பிட்டு இந்த மசோதாவை வரவேற்கிறேன்.

*** திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டத்தை மூன்று வருஷங்களுக்கு நீட்டிப்பதை நான் வரவேற்கிறேன். இது மிகவும் முக்கியமான ஒரு சட்டம் ஆகும். இந்த மூன்று வருஷங்களுக்கு இடையிலே குடியிருப்பவர்களுக்கு மனைகளைச் சொந்தப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

குடியிருப்புப் பாதுகாப்புச் சட்டம் என்று சொல்லுகிற நேரத்தில், சென்ற அரசு இவ்வாறு ஒரு சட்டத்தை நிறைவேற்றிவிட்டு, அதை அமல்படுத்தாமலேயே இருந்துவிட்டார்கள். அதற்கென்று ஒரு அதிகாரி நியமிப்பதாகச் சொன்னார்களே யொழிய, அந்த அதிகாரிக்கு அதிகாரம் வழங்கி, குடியிருப்பு சம்பந்தமாக விவகாரங்கள் ஏற்படுகிற காலத்தில் அந்த விவகாரத்தை யாரிடம் சொல்லுவது என்றே புரியாமல் இருந்தது. இன்றைய தினம் அமைச்சர் அவர்கள் அதை அறிவிக்க வேண்டும். நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் குடியிருக்கிறவர்களை வெளியேற்ற வேண்டும் என்று போலீஸை வைத்து, தங்கள் பலத்தை உபயோகப்படுத்தி நிர்ப்பந்தம் செய்து வெளியேற்றினால் அந்த மாதிரி விவகாரங்களில் எந்த அதிகாரியிடம் சென்று அவர்கள் முறையிட வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டும்.

அது மாத்திரமல்ல. நமது சர்க்காருக்கு சொந்தமான புறம்போக்கு இடங்களில் குடியிருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பொருந்தக்கூடிய அளவிலே, அவர்களையும் குடியிருப்பு மனைகளிலிருந்து வெளியேற்றாமல் இருப்பதற்கு ஒரு உத்தரவாதத்தை அளித்தாக வேண்டும். பல ஆண்டு காலமாக குடி இருந்து கொண்டிருக்கிறார்கள். திடீரென்று அவர்கள் வீடு கட்டிக் கொள்வதாக இருந்தால் அதை ஆட்சேபணை செய்ய வேண்டியது தான். பல ஆண்டு காலமாக குடியிருந்து வந்தாலும், கிராமத்தில் இருக்கக்கூடிய நிலப்பிரபுக்களின் விருப்பு வெறுப்பு அடிப்படையில் அவர்கள் ரெவின்யூ அதிகாரிகளை அணுகி வெளியேற்ற வேண்டும் என்று சொல்லி தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்தி குடியிருப்பு மனைகளிலிருந்து குடியிருந்து கொண்டிருப்பவர்களை வெளியேற்றக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. அம்மாதிரி இல்லாத அளவுக்கு, ரெவின்யூ அதிகாரிகள் வெளியேற்றத்துக்கு நோட்டீஸ் கொடுப்பதாகத் தெரிவித்தால், அதையும் விசாரித்து நியாயம் வழங்க வேண்டிய முறையில் இந்தச் சட்டம் அமைய வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொண்டு இந்த மசோதாவை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா அவர்களும் சில கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். இந்தச் சட்டத்தை இன்னும் மூன்று ஆண்டுகளுக்கு நீடிக்கின்ற காரணத்தினால், இதை ஒட்டிய, ஒருங்கிணைந்த காரியங்களுக்கு குந்தகம் ஏற்பட்டுவிடும் என்றோ அல்லது அவைகளிலே இந்த அரசாங்கம் சிரத்தை காட்டவில்லை என்றோ கருதினால் அந்தக் கருத்து சரியானதல்ல என்பது தான் என்னுடைய எண்ணம். ஒரு காம்ப்ரெஹென்ஸிவ் டெனன்ஸி லா கொண்டு வருவது பற்றி இந்த அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. அதோடு இது ஒருங்கிணைந்த ஒரு பிரச்சினையாக இருக்கிறது. ஏற்கனவே நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் ஒன்றைச் சொன்னார்கள். நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருப்பதாலும், அதனுடைய நடைமுறையில் ஏற்பட்டுவிட்ட கோளாறுகள் என்ன என்பதை ஆராய்வதற்கு இந்த அரசாங்கத்திற்கு அவகாசம் வேண்டுமென்று சொன்னார்கள். அது மிச்ச வரம்புச் சட்டம் என்று கூட அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். உச்ச வரம்புச் சட்டம் மிச்ச வரம்புச் சட்டமாக ஏன் அமைந்தது, அதனால் ஏற்பட்ட பாதகம் என்ன, அந்தச் சட்டத்திலுள்ள கோளாறுகள் என்ன, பலஹீனங்கள் என்ன, எதனால் அது தோல்வி அடைந்து விட்டது என்பதை சரியாக ஆராயாமல், மீண்டும் அவசர அவசரமாக குடியானவர்களுக்கும் விவசாயிகளுக்கும் ஏதோ நன்மை செய்யப் போகிறோம் என்ற பெயரால் விரிவான முறையில் ஆழ்ந்த பரிசீலனை இல்லாமல் ஒரு மசோதாவைக் கொண்டு வந்தால் கெட்ட சம்பவத்தில் தான் முடியும் என்ற காரணத்தினால், அதைப்பற்றி ஆழ்ந்து யோசித்துக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றிய ஆய்வுக்குப் பிறகு காம்ப்ரெஹென்ஸிவ் லெஜிஸ்லேஷன் கொண்டு வருவதாக ஏற்கனவே இந்த அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

[திரு. கே. ஏ. மதியழகன்] [1967 ஜூலை 17

இந்த சந்தர்ப்பத்தை ஒரு வாய்ப்பாகக் கொண்டு கனம் உறுப்பினர் திரு. சுப்பையா அவர்கள் சில நிலைமைகளை எடுத்துச் சொன்னார்கள். அந்த நிலைமைகளை இந்த அரசாங்கம் பூரணமாக உணர்ந்துகொண்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர்களைப் பாதுகாக்க, இந்தச் சட்டம் பெயரளவுக்கு இருந்தும், அதை சரியாக அமுல் படுத்துவதிலே முந்திய அரசாங்கம் போதிய சிரத்தை காட்டவில்லை என்பதை மனதில் கொண்டு, இந்த சட்டத்தை சரியான முறையில் அமுல் படுத்துவதற்கும், என்ன பாதுகாப்பு விவசாயத் தொழிலாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த சட்டத்தில் கண்டிருக்கிறதோ, அதை அமல் படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசாங்கம் எல்லா வகைகளிலும் முயற்சிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவை இந்த மாமன்றம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி:

" தமிழ்நாடு, 1967-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாப்பு அளித்தல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 10/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை நெடுந் தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு, கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, " தமிழ்நாடு, 1967-ஆம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்று பாதுகாப்பு அளித்தல்) திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 10/1967) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(ஐ) தமிழ்நாடு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மீகரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதா 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 12/1967).

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition (Amendment) Bill,* 1967 (L.A. Bill No. 12 of 1967) be taken into consideration."

The Madras (Transferred Territory) Jenmikaram Payment Abolition Act, 1964 (Madras Act 39 of 1964) was published in the *Fort St. George Gazette*, dated the 17th March 1965. Sub-section (3) of section 9 and sub-section (3) of section 10 of the Act lay down that applications for inclusion of jenmom lands, or modifications of the existing entries, in the Register of jenmikarams shall be filed within a period of three months from the date of the publication of the Act in the *Fort St. George Gazette*. The provisos to the sub-sections referred to above also enable the Settlement Officer to allow in his discretion, further time not exceeding three months for the filing of such applications. The time limits prescribed in the provisions referred to above expired on the 17th September 1965.

* Published in the *Fort St. George Gazette* Extraordinary; dated 11th July 196

1967 ஜூலை 17] [Thiru K.A. Mathialagan]

Representations have been received to the effect that several persons were not able to file their applications within the time allowed under sub-section (3) of section 9 and sub-section (3) of section 10 of the Act. It is, therefore, proposed to amend the provisions aforesaid so as to enable the Government to prescribe by rules the time limit within which such applications should be filed.

I request the House to accept the motion.

திரு. சா. மெய்யப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மசோதாவை முழுமனதுடன் நான் வரவேற்கிறேன் என்ற நிலை இருந்தாலும் கூட, இது செவ்வனே நன்றாக நடைபெற வேண்டும் என்பதற்காக ஒரு சில திருத்தங்களை சமர்ப்பிக்க விரும்புகிறேன். ஏற்கனவே ஜமீன் அபாலிஷன் ஆக்ட் இருந்த பொழுது, நஷ்டஈடு கொடுப்பதற்காக மனுச் செய்துகொள்ள வேண்டியவர்களெல்லாம் 6 மாதங்களுக்குள் மனுச் செய்து கொள்ள வேண்டும் என்று ஒரு நிலை இருந்தது. அப்படி 6 மாதங்களுக்குள் செய்யாமல் இருந்தால், பிறகு 6 மாதங்களுக்குள் ட்ரிப்யூனலின் உத்தரவின் பேரில் மனுக்கள் தரப்படலாம் என்று அந்தக் காலவரையறை நீடிக்கப்பட்டிருந்தது. அதுவும் செய்யாமல் பல மனுக்கள் தேங்கியிருந்தன. பிறகு இம்மாதிரி பல மனுக்கள் டிரிப்யூனலில் தேங்கி இருந்தால், டிரிப்யூனல் இப்பொழுது பவர் கிடையாது என்று சொல்லிவிட்டார்கள். இப்படி பல மனுக்கள் முடிவு செய்யப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. மறுபடியும் இதுபோன்று ஜமீன் சட்டம் நடைமுறைக்கு வராமல் இருக்கக் கூடாது என்பதற்காக, நோக்கங்கள் நல்ல முறையில் நிறைவேறவேண்டுமென்பதற்காக, இனிமேல் நிர்ணயிக்கப் போகும் இந்த நேரத்திற்குள் அல்லது காலத்திற்குள் என்று காலவரை விதிக்காமல், இப்பொழுதே ஒரு காலவரையை, அதாவது செப்டம்பர் 1, 1968 என்றோ செப்டம்பர் 1, 1967 என்றோ சட்டத்தின் மூலம் நாம் நிர்ணயித்துவிடுவோமானால் நலமாக இருக்கும். எப்பொழுது காலவரை நிர்ணயிக்கப்படப் போகிறது என்று இந்த சட்டங்களைப் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டிய தேவையில்லை. இது சீக்கிரமாக செவ்வனே நடைபெறுவதற்காகத்தான் நான் இந்தத் திருத்தங்களைக் கொண்டு வரலாமென்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தங்கள் மீதும் தாங்கள் இப்பொழுதே பேசலாம்.

திரு. சா. மெய்யப்பன் : என்னுடைய திருத்தங்களிலே முதலில் இருப்பது

"In the proviso *for* the words " of inclusion of such jenmom lands in the Register of Jenmikarams" *substitute* the words "within one year from 1st September 1967".

அது வேண்டாம் என்று திரும்பப் பெற்றுக் கொள்கிறேன்.

அதன் பிறகு மூன்றாவது பிரிவில்,

" In the proposed sub-section 3 of section 9 of the Principal Act, for the word " such period as may be prescribed "

என்று இருப்பதை

" within one year from 1st September 1967 "

என்று ஆக்கலாம் என்று நினைக்கிறேன். அடுத்து மூன்றாவது பிரிவில்,

" In the proviso under the proposed sub-section 3 of section 9 of the Principal Act, for the words "such period as may be prescribed for the filing of such application "

என்று இருப்பதிலே,

"six months after 1st September 1968"

என்று ஆக்கலாம் என்று நினைக்கிறேன்.

அதே போல, 4-வது பிரிவிலே, 10-வது செக்ஷன், மூன்றுவது உட்பிரிவிலே,

"In the proposed sub-section 3 of section 10 of the Principal Act, for the words 'such period as may be prescribed" என்று இருப்பதற்குப் ப லாக, "one year from 1st September 1967" என்றும் *for* "such period as may be prescribed for the filing of such application" *snbstitute* the words "six months after 1st September 1968".

என்று திருத்தி அமைத்தால் நன்ருக இருக்கும் என்று நினைக்கிறேன்.

***திரு. ஆர் பொன்னப்ப நாடார் :** சார், இந்த மசோதாவிலே ஓரிரு கருத்துக்களை கூறுவதற்கு முற்படுகிறேன். பொது மக்கள் பாதிக்கப் படுகிருர்கள் என்று அவ்வப்போது அரசாங்கத்திற்குத்தெரிவித்தபடி, அதற்கு இணங்க இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்ததற்கு நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஜன்மீகரம் ரெஜிஸ்டர் தயாராக்குவதில் பல சங்கடங்கள், கஷ்டங்கள் இருக்கின்றன. ஜன்மிகள் தங்களுடைய சொத்துக்களைப் பற்றி சரியான கணக்குகள் வைக்காமல் இருப்பதால் பல கஷ்டங்கள் ஏற்படுகின்றன, அதை அனுபவிக்கிறவர் களுக்கு. ஆகவே தான், அதிகார பூர்வமாக ரெவின்யூ கணக்கை வைத்து, காலவரையறையை நீடிக்க வேண்டும் என்று பொது மக்கள் கூறி ஞர்கள். அதற்கு இணங்க, இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்ததை வரவேற்கிறேன். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த சட்டத் திருத்தம் தேவை என்று அரசாங்கத் தரப்பிலும் கூறப்பட்டு, இந்த திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு மெய்யப்பன் அவர்கள் கொண்டுவரும் திருத்தங்கள் அந்த நோக்கத்திற்கு நேர் எதிராக, அதை நிறைவேற்ற வேண்டாம் என்று சொல்லக் கூடிய அளவில் இருக்கிறது. சட்டம் போடும் போது மனுப் போடக்கூடிய காலத்தை நிர்ணயித்தோம். அதை அதிகப்படுத்த, சர்க்காருக்கு இது போன்ற சட்டத் திருத்தத்தின் மூல மாகத்தான் செய்ய முடியும். நிர்வாக உத்தரவிஞல் செய்ய முடியாது. அதஞல் ஏராளமான தொல்லைகள் விவசாயிகளுக்கு ஏற்பட்டன. இந்தச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட, "அப்பாயின்டட் டே" யிலிருந்து இத்தனை வருஷம், அல்லது இத்தனை மாதத்திற்குள்ளாகப் போட வேண்டும் என்று சொன்ஞல், பெரும்பாலான விவசாயிகளுக்குத் தெரிவதில்லை. கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, விவசாயிகளுக்கு ஏற்படும் சிரமத்தைப் போக்க, அவ்வப்பொழுது மக்கள் அரசாங்கத்தை அணுகி, காலத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். இப்பொழுது இருக்கக்கூடிய சட்டப்படி அதிகாரம் இல்லை. சட்டத்தைத் திருத்திஞல் ஒழிய அதைச் செய்ய முடியாது. ஜமீன் ஒழிப்புச் சட்டம், இஞம் ஒழிப்புச் சட்டம் இவற்றில் அதிகப்படுத்த அதிகாரம் வேண்டும் என்று விதிகளில் ஏற்படுத்தி அந்த வகையில் விவசாயிகளுக்கு நன்மை செய்ய முடியும். அந்த அடிப்படையில் இந்தத் திருத்தமும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த திருத்தம் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. மெய்யப்பன் ஒரு கருத்தைச் சொன்ஞர்கள். ஜமீன் ஒழிப்பு சட்டம், 26/48-வது சட்டத்தின் கீழ், எற்கனவே இத்தனை ஆண்டு, இத்தனை மாதம் என்று அறுதியிட்டுச் சொல்லியிருந்ததால், ஏராளமான மனுக்கள்

ட்ரிப்யூனலில் பெண்டிங்காக இருந்த நிலையும், எங்களுக்கு ஜூரிஸ் டிக்ஷன் இல்லை என்று அவர்கள் சொல்லும் நிலையும் இருந்தது. என்னுடைய நினைவு சரியாக இருக்கிறது என்ருல், எற்கனவே அது போன்ற திருத்தச் சட்டம் வந்து, முந்தைய அரசாங்கம் அதற்கான அதிகாரத்தை எடுத்துக்கொண்டது. 1963-ல் கொண்டு வந்து நிறைவேற்றப பட்டிருக்கிறது. அந்தக் கஷ்டத்தை உணர்ந்த காரணத்தால், இஞம் ஒழிப்பு சட்டம் 26/63 சட்டத்திலேயும் அதே போல் செய்தது. அது போன்ற முறையை பின்பற்ற வேண்டும் என்று, விதிகளிலே அதிகாரம் பெற வேண்டும் என்று, கொள்கையளவில் முடிவு எடுத்திருக்கிருேம். அந்த அடிப்படையில் விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காக இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கத்தினர்கள் இதை ஏகமனதாக நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சட்ட அமைச்சர் குறிப்பிட்டது போல, காலவரையறை அதிகப்படுத்தப்படுகிறது. அதற்கான அதிகாரம் விதிகளில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. கனம் உறுப்பினர் திரு மெய்யப்பனின் திருத்தத்தை ஏற்றுக் கொள்வதாஞல், எதிர்மறை யான விளைவுகள் தான் ஏற்படும். விவசாயிகளுக்கு நன்மை ஏற்படுத்த முடியாது. ஆகவே, இந்த மன்றம் மசோதாவை ஏகமனதாக நிறை வேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"1967-ம் ஆண்டு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மீகரம் செலுத் தல் நீக்க (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

2-வது பிரிவு

திரு மெய்யப்பன் கொடுத்த திருத்தம் பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெறப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

3-வது பிரிவு

THIRU S. MEIYAPPAN ; Sir, I move

(1) In the proposed sub-section 3 of section 9 of the Principal Act, *for* the words "such period as may be prescribed" *substitute* the words "within one year from 1st September, 1967".

(2) In the proviso under the proposed sub-section 3 of section 9 of the Principal Act, *for* the words "such period as may be prescribed for the filing of such application" *substitute* the words "six months after 1st September 1968".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 3, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட

ைதை நிறை

4-வது பிரிவு

THIRU S. MEIYAPPAN: Sir I move—

(1) In the proposed sub-section 3 of section 10 of the principal Act, *for* the words "such period as may be prescribed" *substitute* the words "one year from 1st September 1967".

(2) In the proviso under the proposed sub-section 3 of section 10 of the Principal Act, *for* the words "such period as may be prescribed for the filing of such application" *substitute* the words "six months after 1st September 1968".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

பிரிவு 4, பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

முதல் பிரிவு, முகப்புரை நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, "1967-ம் ஆண்டு (மாற்றலாகியுள்ள பகுதி) ஜென்மீகரம் செலுத்தல் நீக்க (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 12/1967) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்." என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(ஒ) தமிழ்நாடு நிலவரி தண்ணீர்த் தீர்வை (மேல்வரி) (ரத்து) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 8/1967).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker,

முற்பகல் 11-30 Sir, I beg to move—

'That the Madras Land Revenue and Water-cess (Surcharge) (Repeal) Bill (L.A. Bill No. 8 of 1967) be taken into consideration'.

In order to augment the resources of the State in the context of the emergency and to implement development schemes, the Madras Land Revenue and Water-cess (Surcharge) Act, 1965 (Madras Act 34 of 1965) was enacted.

In seeking to abolish basic land revenue and rationalise the pattern of water-rates, the Government have considered how best they could straightaway afford relief to the farmers. The Government have since decided that the surcharge on land revenue and water-cess levied from 1st July 1965 under the Madras Act 34 of 1965 should be abolished with effect from fasli 1376 (i.e. 1—7—1966). Accordingly the Government have already issued instructions in G.O. Ms. No. 3201, Revenue, dated 10th November 1966 not to collect the surcharge on and with effect from fasli 1376. The Bill seeks to give effect to the above decision of the Government by repealing the Madras Act 34 of 1965.

I request the House, Sir, to accept the motion.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன். முன்பிருந்த அரசாங்கம் இந்த நில வரி, தண்ணீர்த் தீர்வை மீது 25 காசு வரிவிதிக்கும் காலத்தில் இது தேவையில்லை, இது தேவை இல்லாத வரி என்று ஆட்சேபணை செய்தோம். அந்த ஆட்சே

திரு. மு கலந்து கொண்டவர்களில் நமது உணவு அமைச்சரவர்களும்

சட்டம், 26/48 அவசியமில்லாத வரியைக் கொண்டு வந்து தேவையில்லாமல்

மாதம் என்று in the *Fort St. George Gazette* Extraordinary, dated 4th July 1967.

விவசாயிகள் தலையிலே சுமத்தி, பிறகு அவர்களே இந்த வரியை வசூல் செய்ய வேண்டியதில்லை என்று கைவிட்டு விட்டார்கள். இவ்வாறு தேவையில்லாத ஒரு செலவைத் தமிழகத்திற்கு வைக்கக் கூடிய நிலையில் தான் இந்த மசோதா முன்னால் சட்டமாக்கப்பட்டது. விவசாயிகளிடமிருந்து 25 சதம் வசூல் செய்திருக்கிறார்கள். சட்டம் பாஸ் பண்ணிய பிறகு வசூல் செய்யப்படுகிறது. ஒத்தி வைக்கப் போகிறோம் என்று சொல்லியும் வசூல் செய்திருக்கிறார்கள். அம்மாதிரி வசூல் செய்யப்பட்ட தொகையை விவசாயிகளிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் வரி கொடுக்கிறார்களே, அதில் இந்தத் தொகையையும் சேர்த்துக் கழித்துக் கொள்ளவேண்டுமென்பது என்னுடைய ஆலோசனை. அந்த முறையில் அமைச்சரவர்கள், விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட்டிருக்கும் இந்தத் தீர்வையை, 25 காசை, அவர்களுக்குத் திருப்பிக் கொடுப்பதற்கோ அல்லது அவர்கள் கொடுக்கக்கூடிய வரியிலே அதை சேர்த்துக் கொள்வதற்கோ வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** கனம் தலைவர் அவர்களே, முன்னால் இருந்த அரசாங்கத்தால் சட்டம் ஆக்கப்பட்டு, அந்தச் சட்டம் அமல் ஆக்கப்படாமலேயே இருந்து, இன்றைக்கு ரத்து செய்யப்படுகிறது. அதை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் ஏற்பட்டிருந்த பெரும் பாரத்தை வந்திருக்கும் அரசாங்கம் என்ன செய்யுமோ என்று நினைத்த பொழுது, நிச்சயமாக நாங்கள் வசூல் செய்யப் போவதில்லை என்று சொன்னதை நான் வரவேற்கிறேன். நிலவரியின் பேரிலே எத்தனையோ வரிகள் போடப்பட்டிருக்கின்றன. அந்தப் பல வரிகளை ஒரே முறையில் புரியக்கூடிய வகையில் வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். கனம் நண்பர் சுப்பையா சொல்லியது போல் இதனால் ஏதேனும் வரிகள் வசூலிக்கப்பட்டிருந்தால் அந்த வரியைத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறி இந்த மசோதாவை முழு மனதுடன் ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை இந்த மாமன்றத்தின் முன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டு வருவதிலும், நிறைவேற்றுவதிலும் மிகுந்த பெருமையும், வரலாற்றுச் சிறப்பையும் கொள்கிறேன். நிலத் தீர்வையையும், நீர்த் தீர்வையையும் 25 சதவிகிதம் உயர்த்தி முன்னால் பொறுப்பில் இருந்த அரசாங்கம் கொண்டு வந்த நேரத்தில் மிகவும் அழுத்தந் திருத்தமாக, விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பிலே நானே இந்த விவாதத்தில் பங்குகொண்டு சட்ட மன்றத்தில் எடுத்துரைத்தேன். கம்யூனிஸ்ட் உறுப்பினரவர்கள் இங்கே எடுத்துரைத்தார்கள். நிலத் தீர்வையையும், நீர்த் தீர்வையையும் கொண்டுவந்த நேரத்தில், இந்த வரி ஒழிக்கப்பட வேண்டிய ஒன்றாகும், இந்தப் புதிய நெருக்கடி ஏழைகளையும், குடியான மக்களையும் தொடக்கூடியது என்று வாதாடினோம். சிலரிடம் வசூல் செய்ததாக திரு. சுப்பையா சொல்கிறார்கள். பலத்த எதிர்ப்புக்கிடையே வசூல் செய்வதை விட்டிருந்தது. அவர்கள் சட்டம் போட்டு விட்டார்கள். அதுமாதிரியான ஒரு சட்டத்தை எடுக்கவும், ஏழை உழவர்களின் நில உரிமைக்கும் வாய்ப்பு கொடுத்து இந்த மசோதாவை இந்த வரிசையிலிருந்து சொல்வதற்கும் எனக்கே வாய்ப்பு கிடைக்கும் பொழுது உண்மையிலேயே நினைவு கூறத்தக்க பசுமையான, பொன்னான வாய்ப்பாகக் கருதுகிறேன். புதிய வைகையாறு, மணிமுத்தாறு, பவானி, கீழ்பவானி, சாத்தனூர் போன்ற திட்டங்களின் கீழுள்ள நஞ்சை நிலங்கள் ஒரு கோடியே 25 லட்சம் ஏக்கர் இதிலிருந்து ரத்து செய்யப்படுகிறது.

பழைய அரசாங்கம் 25 சதவிகிதம், நிலவரி தண்ணீர்த் தீர்வையை உயர்த்தி யிருந்த அந்தச் சட்டத்தை இந்த மாமன்றம் இன்றைக்கு ரத்து செய்ய மசோதாவைப் பிரேரேபிக்கிற வாய்ப்பு கிடைத்ததை நான் மிகுந்த பெருமையாகக் கொள்கிறேன். இந்த மாமன்றம் அதை நிறைவேற்றுவதில் மிகுந்த பூரிப்பு கொள்ளலாம் என்று கூறி அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு நில வரி தண்ணீர்த் தீர்வை (மேல்வரி) (ரத்து) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : "தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு நிலவரி தண்ணீர்த் தீர்வை (மேல்வரி) (ரத்து) மசோதா" வை நிறைவேற்ற வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(ஔ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா, 1967) சட்டப் பேரவை மசோதா எண் 15/1967).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker Sir, I beg to move—

"That the Madras General Sales Tax (Second Amendment) Bill *, 1967 be taken into consideration.'

Pesticides and insecticides were liable to multi-point tax of $2\frac{1}{2}$ per cent under the Madras General Sales Tax Act, 1959. Having regard to the representations of the trade and for conferring the benefit of a lower incidence of tax on the agricultrists, the Government decided to levy a single point tax of $3\frac{1}{2}$ per cent (which is the rate of tax levied on chemical fertilisers) at the point of first sale in the State in respect of pesticides and insecticides, with effect from the 1st July 1967 although this would result in a loss of revenue to the tune of Rs. 34,000 per annum.

The decision has been given effect to by issuing a notification under section 59 (1) of the Act, amending the First Schedule to the Act. Under section 59 (2) of the Act, a Bill to give effect to the amendment to the Schedule made by the aforesaid notification has to be introduced during the present session of the Legislature.

The Bill now before the House accordingly contains necessary provisions in this regard. I commend the motion for the acceptance of the House.

THIRU R. PONNAPPA NADAR: Sir, this Bill is having retrospective effect. The Bill has been published in the *Fort St. George Gazette* on the 15th July 1967 and it is said to come into effect from 1st July 1967. In fiscal matters it will not be proper to legislate with retrospective effect. That will lead to compli-

* Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 15th July 1967.

cations. It has been held by the High Court as well as the Supreme Court that giving of retrospective effect to fiscal statutes should be avoided as far as possible. This may result in complications in the matter of collection. The Gazette notification has been issued at a later stage and we are legalising it by this legislation. I request the Hon. Minister to consider whether it will be proper to give retrospective effect. That is the only matter on which I want clarification.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, 59(1) வது பிரிவின்கீழ் இப்படிப்பட்ட நோட்டிபிகேஷன் செய்வதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "ரிட்ராஸ் பெக்டிவ் எஃபெக்ட்" என்றெல்லாம் சொல்லுவது வெறும் சட்ட நுணுக்கத்திற்காகச் சொல்லப்பட்டதாக இருக்கிறதே தவிர, ஜூலை முதல் தேதியிலிருந்துதான் இது அமலுக்கு வருகிறது. சட்ட நுணுக்கத்தை வைத்து விவாதம் செய்வதற்கு வேண்டுமானால், அவருடைய வாதம் பயன்படலாமே தவிர, இதனால் பெரிய விளைவுகள் ஏற்படும் என்று சொல்லுவதற்கில்லை. சட்டத்தின் கீழ் விதிகள் செய்ய நமக்கு அதிகாரம் இருக்கும் காரணத்தால் இது செய்யப்பட்டது. ஆகவே, கனம் உறுப்பினர் தம்முடைய கருத்தை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு, இந்த மசோதாவை இப் பேரவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் சபாநாயகர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 15/1967) சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மசோதா சட்டமாக ஆக்க்ப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(அஅ) தமிழ்நாடு இனும்கள் (துணை) திருத்த மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 16/1967).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker, Sir, I beg to move—

"That the Madras Inams (Supplementary) Amendment Bill*, 1967 (L.A. Bill No. 16 of 1967) be taken into consideration.

Under sub-section(1) of section 5 of the Madras Inams (Supplementary) Act, 1963 (Madras Act 31 of 1963) the time limit for application for determining the question whether any non-ryotwari area is or is not an existing inam estate or part village inam estate or a minor inam or a whole inam village in Pudukkottai is three

* Published in the *Fort St. George Gazette* Extraordinary dated 15th July 1967.

months from the notified date in respect of cases governed by the Madras Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 26 of 1963) and three months from the date of publication in the District Gazette of a copy of the notification under sub-section (5) of section 1 of the Madras Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Madras Act 30 of 1963) in respect of cases governed by that Act. In addition to this the Settlement Officer can allow further time not exceeding thirty days in his discretion. The first batch of inam estates under Madras Act 26 of 1963 was notified on the 15th April 1965. The validity of Madras Acts, 26, 27 and 30 of 1963 was questioned in a number of writ petitions before the High Court. A Division Bench of the High Court in its judgment, dated the 24th June 1966 upheld the validity of all the three Acts and observed that the character of each grant would have to be decided under Madras Act 31 of 1963. In a few cases, the High Court observed that the authorities under Madras Act 31 of 1963 would take a liberal view, if there is no question of limitation. Cases have also come to the notice of Government where parties were not able to file applications under Madras Act 31 of 1963 as the time limit has already expired. The Government have examined the question whether the present time limit of three months specified in section 5 of the Act should be extended in such a way as to permit the parties affected to avail themselves of the machinery provided in the Act. They have decided that the time limit should be prescribed by rules made by the Government and that the Act should be suitably amended for the purpose. The rules will specify the extended time limit so as to avoid hardship either to the landholders or to the ryots. The Bill seeks to give effect to the above decision.

I have now briefly indicated the objects of the legislation. I request the House to accept the motion.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். இது புதுக்கோட்டையைக் குறித்து மட்டும் அமைந் திருக்கிறது. ஆனால், சென்னையில் இம்மாதிரி எத்தனையோ இனாம் எஸ்டேட்டுகள் இருக்கின்றன. குறிப்பாக, திருவல்லிக்கேணியில் "அமீர் மஹால்" என்று ஒரு பெரிய மஹால் இருக்கிறது. அதையும் இந்த இனாம்களிலே எடுத்துக் கொள்ள வேண்டும் என்கிற என்னுடைய கருத் தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அமீர் மஹால் 45 எக்கர் விஸ்தீரணம் கொண்டது. சில நகரங்களில் அம்மாதிரி பரம்பரையாக வைத்துக்கொண்டு இருக்கும் இடங்களையெல்லாம் இனாம்களில் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

***திரு. கே. பி. எஸ். மணி :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன். தஞ்சை ஜில்லாவில் பழைய காலத்தில் ஜமீந் தார்கள், ஜாகிர்தார்கள், முஸ்லிம் மன்னர்கள் இவர்களால் கொடுக்கப்பட் டிருக்கிற இனாம்களையெல்லாம் சிலர் சொந்தத்திலே வைத்துக் கொண்டு, ஹைகோர்ட்டிலே கேஸ் போட்டாலும், கேஸ் போட்டு முடிந்த பிறகு, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருப்பதாகத் தெரிகிறது. அதன் காரணமாக குத்தகை வாரங்கள் அளக்கப்படாமலிருக்கும்போது, அந்தக் குத்தகை வாரங்களை அளக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் கீழ், முன்சிப் கோர்ட்டில் தாவா செய்து, ஏழை விவசாயிகளின் வீடுகளையும் மற்ற பொருள்களையும் ஜப்தி செய்து கொண்டு இருக்கிறார்கள். உதாரணமாக, சீர்காழி தாலுக்காவில் தைக்கல் கிராமத்தில் இருக்கும் முஸ்லிம் பிரமுகர்

ஒருவர் இனாம்தாரராக இருந்துகொண்டு, முஸ்லிம் வீடுகள் அத்தனையும் ஜப்தி செய்யப்பட்டு நிர்ப்பந்தப்படுத்தப்பட்டு, மனைகளில் எந்தவித உரிமை யும் இல்லை என்று எழுதி வாங்கப்படுகிறது. இன்னும் பல கிராமங்களில், குத்தகை நெல் அளக்காமல் இருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு, சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்து, கோர்ட்டில் தாவா செய்து, மறு படியும் அவர்கள் வீட்டிலே இம்மாதிரி தொல்லை கொடுத்து ஜப்தி செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட நிலவரங்கள் இருக்கும்போது, தனிப்பட்டு புதுக்கோட்டைக்கு மட்டும் செய்வதை விட, மாநிலம் பூராவும் இருக்கும் ஜமீன்கள் பூராவும் ஏககாலத்தில் ஒழிக்கப்பட்டு, சிறு சிறு ஜமீன்கள், இனாம்கள், ஜாகிர்கள் இவற்றையெல்லாம் எடுத்துக்கொண்டு உடனடியாக சர்க்கார் ஒரு நல்ல விகிதாசார முறைப்படி, விவசாயிகள் எங்கே நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறார்களோ, எங்கே குடியிருப்புகளில் இருக்கி றார்களோ, அவர்களுடைய வாழ்க்கைக்கு ஒரு நிரந்தரமான ஏற்பாட்டை செய்ய வேண்டும். அம்மாதிரி திருத்தங்களை இந்த மசோதாவில் சேர்க்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

***திரு. ஆ. கு. சுப்பையா :** தலைவர் அவர்களே, இந்த மசோதாவை ஆதரித்து சில விஷயங்களை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இம்மாதிரியான ஒரு மசோதாவைக்கொண்டு வந்து சட்டம் ஆக்கும்போது, அதற்கு முன்பே அந்தச் சட்டத்தைப் பரிசீ லனை செய்வதற்காகச் செலக்ட் கமிட்டியெல்லாம் போட்டுப் பரிசீலனை செய்யப்பட்டது. அந்தப் பரிசீலனை நேரத்தில், இதிலே இருக்கக்கூடிய பலவீனங்களை யெல்லாம் எடுத்துச் சொல்லி, ஒரு சட்டமாக்கப்பட்ட பிறகு கூட, எப்படியோ தெரியவில்லை, புதுக்கோட்டையில் 400-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு இந்தச் சட்டத்திலிருந்து விலக்கு அளித்துவிட்டார்கள். அந்த நிலத்தைப் பண்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய அல்லது பல ஆண்டுக் காலமாக அந்த நிலத்தைத் தங்களுடைய அனுபோகத்தில் வைத்துக்கொண்டிருக்கக்கூடிய அந்த விவசாயிகளுக்கு இந்தச் சட்டத்தின் மூலமாக எந்தவிதமான சாதகமும் இல்லாத ஒரு நிலையை ஏற்படுத்தி, இனாம்தார்களுக்குச் சாதகம் அளிக்கக்கூடிய நிலையை இன்றைய தினம் உருவாக்கி இருக்கிறார்கள்.

அதற்கென்று புதுக்கோட்டைக்கு ஒரு சட்டம் கொண்டு வந்து பல்லா யிரக் கணக்கான விவசாயக் குடும்பங்களை நாம் பாதுகாக்க வேண்டும். ஒரு தனி மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். சட்ட மாக்கிய பிரதேசங்களில் கூட விவசாயிகளுக்கு சாதகமாக இல்லாமல், விவசாயிகளுக்கு அந்த நிலம் அனுபவத்தில் இல்லாமல் இருந்து வருவ தாக விண்ணப்பங்கள் செய்து ஒரு கிராமத்திலிருந்து எழுதிய மனு காணாமல் போய்விட்டது என்று எனக்குத் தகவல் வந்து அதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறேன். இம்மாதிரி சில தவறுகள் சில இடங்களில் ஏற்படுகின்றன. இன்னும் அதிகாரிகள் இனாம்தார்களுக்குச் சாதகமாக இருக்கின்ற நிலைமையில் இருந்து வருகின்றன. ஆகவே, விவசாயிகளைப் பாதுகாக்கின்ற முறையில், அவர்களுக்குச் சாதகம் அளிக்கக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தை அமுல்படுத்த நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இந்த இனாம் சப்ளிமெண்டரி மசோதாவைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்பு கின்றேன். இதனுடைய நோக்கம் வேறு. அதனைப் பயன்படுத்திக் கொண்டு பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். மைனர் இனாம் அபாலிஷன் ஆக்ட், இனாம் ஒழிப்புச் சட்டம் என்ற இரண்டு சட்டங்களையும் கொண்டுவந்தபோது, மைனர் இனாம்தாரர்களா அல்லது பார்ட் இனாம்தாரர் களா என்பதைத் தீர்மானிக்க இந்த மசோதா இருக்கிறது. இந்த மசோதாவின் அடிப்படையில் பெரும்பாலும் நிலச்சுவான்தார்களையே இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டுமென்று நிர்ணயிக்க இந்தச் சட்டம் வருகிறது. இந்தச் சட்டத்திலும் அவர்கள் மனுப் போடுவதற்கு கால

வரையறை கொடுக்கப்பட்டிருக்கிறது. அது சட்டத்திலே கொண்டுவரப்படுகிற காரணத்தால் சில சங்கடங்கள் வரும்போது காலத்தைக் கூட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கும் விதமாக இருக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதையும் கனம் அங்கத்தினர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். தவிர, நண்பர் எஸ். ஜே. ராமசாமி அவர்கள் சென்னையிலே ஏதோ இனாம்கள் இருப்பதாகச் சொன்னார்கள். இனாம் ஒழிப்புச் சட்டத்திலே பூரணமாக இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். முதலில் மைனர் இனாம். அதற்கு இரண்டு சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இந்த இனாம்களை இரண்டு பிரிவாகப் பிரித்துப் பார்க்கும்போது முதலிலே எஸ்டேட்டுகள் ஒழிக்கப்பட்டன. ஜமீன்தார்கள் ஒழிப்புச் சட்டம். ஒரு கிராமம் எஸ்டேட்டாக இருந்தால்கூட முழு கிராமமாக இருந்தால் கூட அதை கிராண்டு செய்யும் முறையில் இருந்தன. தானம் செய்யும் முறையில் இரண்டு தடவையாக தானம் கொடுத்தால் அது அந்தச் சட்டத்தின் கீழ் வராது என்று உயர்நீதி மன்றத்தால் தீர்ப்பு செய்யப்பட்டதால் 1936 இனாம் என்ற இனாம்கள் எஸ்டேட் ஒழிப்புச் சட்டத்திலே வருமா என்ற ஒரு சங்கடம் சொல்லப்பட்டது. இதையெல்லாம் தவிர்க்க புதிய சட்டத்தில் 26/1963 சட்டத்திலே எக்ஸிஸ்டிங் இனாம், நியூ இனாம் என்று பிரிக்கப்பட்டு, எக்ஸிஸ்டிங் இனாம் என்பதைப் பெரும் போக்காகக் குறிப்பிட்டு, நியூ இனாம் என்பது விடப்பட்ட இனாம் என்று உள்ளன. இரண்டாவது தானம் வழங்குவது. ஒரு கிராமத்தை ஒரு தடவையாக அது பிரிக்கப்பட்டிருக்கக்கூடிய காரணத்தால், ஒரே நாளில் தானமாக வழக்கமாக தேவஸ்தானம் பாதி ; தருமஸ்தானம் பாதி என்று ஏற்பட்டது. அதுவும் ஜமீன் ஒழிப்புச் சட்டத்தில் வராது. " It is not an estate ", அதுவும் இந்த இனாம் ஒழிப்புச் சட்டத்தில் வர வேண்டுமென்று எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதில் சில தகராறுகள், குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. நண்பர் சுப்பையா அவர்கள் சொன்னதுபோல புதுக்கோட்டை இனாம் என்று பிரித்துப் போட்டோம். இதே சட்டமன்றத்திலே பேசும்போது புதுக்கோட்டை இனாம்கள், பல இனாம்கள், முழு கிராமமாகப் பிரிக்கக்கூடாது. அதுவும் பார்ட் இனாம் 26/1963-ல் கொண்டுவர வேண்டுமென்பது நியாயமான வாதம். ஆனால் அது மைனர் இனாமிலே கொண்டுவரப்பட்டு ஒரு நோட்டிபிகேஷன் கொடுக்கப்பட்டு உள்ளது. இந்த மைனர் இனாம் சட்டப்படி நிலச்சுவான்தார்களுக்கு சாதகமாயிருக்கிறது. மைனர் இனாம் பிரித்ததற்குக் காரணம் சர்வீஸ் இனாம் வருகிறது. கோவிலில் பூஜை செய்கிறார்கள். அவர்களுக்கு பூஜாரி இனாம். அதுபோல் சர்க்காருக்குக் கணக்குக்காக கொடுக்கப்பட்டிருந்தால் அவர்களை இனாம் ஒழிப்புச் சட்டத்திலே கொண்டுவரக்கூடாது. மைனர் இனாமாகச் சட்டத்திலே கொண்டுவரப்பட்டது. பகுதி இனாமாகச் சட்டப்படி வர முடிந்தாலும் ஒரு முயற்சி புதுக்கோட்டைப் பகுதியிலே நடைபெற்றிருக்கிறது. அதுபற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. அது உண்மையில் பகுதி இனாம்தானா என்பதைப் பரிசீலித்து நிச்சயமாக அரசாங்கம் ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தை ஆதரித்து ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் உள்ள கேள்வி :—

" தமிழ்நாடு இனாம்கள் (துணை) திருத்த மசோதா 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 16/1967) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : "தமிழ்நாடு இனாம்கள் (துணை திருத்த மசோதா 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 16/1967) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(இஇ) சென்னை நகர நிலவருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண். 17/1967).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " 1967-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி-வருவாய் வசூல் (திருத்த) மசோதாவை* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தற்போது 1851-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரிச் சட்டமும், 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டமும் சென்னை மாநகரில் செயலில் உள்ளன ; 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டம், இம்மாநிலத்தின் ஏனைய பகுதிகளில் செயலில் உள்ளது. நிலவரி நீங்கலாக, மாநில அரசுக்குச் சேர வேண்டிய வருவாய் நிலுவைகள் அனைத்தையும், மற்றும் ஒப்பந்த முறிவின் விளைவாக மாநில அரசுக்கு ஏற்பட்ட விரயம் அல்லது சேதத்திற்கான இழப்பீடு உட்பட மாநில அரசுக்குச் சேர வேண்டியுள்ள தொகைகள் அனைத்தையும் 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் நிலவரி நிலுவையை வசூல் செய்வதைப் போலவே வசூல் செய்வதற்கு அச் சட்டத்தின் 52-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. இவை போன்ற விதித் துறைகள், 1851-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரிச் சட்டத்திலும், 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டத்திலும் காணப்படவில்லை. 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டம் சென்னை மாநகரின் எல்லைக்குள் நிலவரி வசூல் செய்யப்படுவதற்குப் பயன்படாது என்று அச்சட்டத்தின் 64-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளது. சென்னை மாநகரின் எல்லைக்குள் நிலவரியை வசூல் செய்வதற்கு, 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தின் விதித் துறைகள் பயன்படக் கூடாதென்று அச் சட்டத்தின் 64-வது பிரிவின் மூலமாகத் தடை செய்யப்பட்டுள்ளதாய், " நிலவரி நிலுவையைப் போலவே " வசூல் செய்யப்படக் கூடிய எதையும் சென்னை மாநகரின் எல்லைக்குள் அச் சட்டத்தின் விதித் துறைகளின்கீழ் வசூல் செய்ய முடியாது என்று சென்னை உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தின் 52-வது பிரிவில் வகை செய்யப்பட்டுள்ளதைப் போலவே, 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டத்திலும் திட்டவட்டமான ஏற்பாடு செய்யப்பட வேண்டியது அவசியமென்று கருதப்பட்டது. ஆனால், நகர நிலவரிச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்த பின்னர் சூழ்நிலை மாற்றமடைந்ததன் காரணமாக, நிலவரி நிலுவையை வசூல் செய்வதற்காக இருதிறப்பட்ட சட்டங்கள்—ஒன்று, சென்னை மாநகருக்குப் பயன் படுவதாகவும், மற்றொன்று சென்னை மாநகர் நீங்கலாக இம்மாநிலம் முழுவதற்கும் பயன் படுவதாகவும் இருக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, 1867-ம் ஆண்டு சென்னை மாநகர் நிலவரி (திருத்தச்) சட்டத்தை இறுதி செய்து விடவும், இப்போது 1867-ம் ஆண்டு தமிழகச் சட்டம் பயன்படத்தக்க பகுதிகளுக்கு 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தை விரிவு படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டம் ஆந்திரப் பிரதேச மாநிலத்திற்குப் பயன்படும் வகையில் திருத்தப்பட்டது. அவ்வாறு திருத்தப்பட்ட சட்டம், ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து சென்னை மாநிலத்துடன் சேர்க்கப்பட்ட ஆட்சிப் பகுதிகளில் செயலில் இருந்து வருகிறது. ஆந்திரப் பிரதேச சட்டப் பேரவையினால் செய்யப்பட்ட திருத்தத்தின் மூலம் விதித் துறைகளில் புதிய பிரிவு ஒன்றும் இயற்றப்பட்டுள்ளது. இந்தப் புதிய பிரிவு, நிலுவையைச் செலுத்தத் தவறியவருக்குச் சொந்தமான உடைகள், சமையற் பாத்திரங்கள், படுக்கைப் பொருள்கள், சமய

* 1967 ஜூலை 15-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு கே. ஏ. மதியழகன்] [1967 ஜூலை 17

வழக்கத்தின்படி மகளிரிடமிருந்து கேட்டு வாங்கக்கூடாதவையும், அவர்கள் அணிந்துள்ளவையுமான அணிகலன்கள், மற்றும் கலப்பைகள், வேளாண்மைக் கருவிகள், ஒரு ஜதை உழவு மாடு, வரும் ஆண்டில் பயன்படுத்துவதற்குத் தேவையான உரம், விதை மற்றும் அரசினால் அறிவிக்கப்படக் கூடிய ஏனைய வகைப் பொருள்கள் ஆகியவற்றைக் கைப்பற்றுவதினின்றும் விலக்கு அளிக்கிறது. தமிழகம் முழுவதிலும் ஒரே மாதிரியான சட்டம் செயலில் இருக்கும்படிச் செய்வதற்காக இம்மாநிலத்தின் பிற பகுதிகளில் செயலில் உள்ள தமிழக வருவாய் வசூல் சட்டத்தைச் சேர்க்கப்பட்ட ஆட்சிப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தவும், மேற்சொன்ன சேர்க்கப்பட்ட ஆட்சிப் பகுதிகளில் செயலில் இருக்கும் சட்டத்தை ரத்து செய்து விடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. 1864-ம் ஆண்டு தமிழக வருவாய் வசூல் சட்டத்தில் மக்களுக்குப் பயன் தரும் வகையில் அமைந்துள்ள மேற்சொன்ன விதித் துறையைச் சேர்த்து அதனை இம் மாநிலத்தின் ஏனைய பகுதிகளுக்கும் பொருந்தும்படிச் செய்யவும் கருதியுள்ளது.

நண்பகல் 12-00 பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இயற்றுவதற்கான நோக்கங்களை நான் இப்போது சுருக்கமாகக் குறிப்பிட்டேன். இம்மசோதாவை இப்பேரவை ஏற்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—"1967-ஆம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 4, 5, 6 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கீழ்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் :—

"1967-ஆம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 17/1967) சட்டமாக நிறைவேற்றப் பட வேண்டும்".

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(உஉ) தமிழ்நாடு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967).

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு சபைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா" 1967* (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967), கீழே குறிப்பிட்ட உறுப்பினர்கள் அடங்கிய இப் பேரவையின் ஆய்வுக் குழுவின் ஆராய்வுக்கு அனுப்பப்படவேண்டும் :—

1. மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.
2. மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி.
3. திரு. எஸ். ஜே. இராமசாமி.
4. திரு. என். கிட்டப்பா.

* 1967 ஜூலை 15-ம் தேதிய அரசிதழ் தனி வெளியீட்டில் வெளியிடப்பட்டுள்ளது.

1967 ஜூலை 17] [திரு. கே. ஏ. மதியழகன்]

5. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
6. திரு. க. ந. சிவபெருமாள்.
7. திரு. ந. தருமலிங்கம்.
8. திரு. கொளத்தூர் கோதண்டம்.
9. திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்.
10. திருமதி வி. ப. பழனியம்மாள்.
11. திரு. பெ. மலைச்சாமி.
12. திரு. மு. அலங்காரம்.
13. திரு. ஏ. வெள்ளதுரை.
14. திரு. து. ப. அழகமுத்து.
15. திரு. பி. ஜி. கருத்திருமன்.
16. திரு. பி. ஜயராஜ்.
17. திரு. ப. மகாதேவன்.
18. திரு. இ. எம். சுப்பிரமணியம்.
19. திரு. எஸ். ராமசாமி நாயுடு.
20. திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்.
21. திருமதி கே. பி. ஜானகி அம்மாள்.
22. திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
23. திரு . ஆ. கு. சுப்பையா.
24. திரு. க. ர. நல்லசிவன்.

என்று தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Sir, the Government were examining the question of revising the basis for the levy of agricultural income-tax in the context of the remission of basic assessment on dry lands and also in the interest of augmenting the resources of the State. It was accordingly considered necessary to take away the composition provisions and to assess agricultural income on the basis of actual income accrued. As a consequence, it was also considered necessary to take away the exemption on the basis of extent up to 12½ standard acres. But, in the light of the views expressed by several Members of this House and the Upper House, the Government reconsidered the question and they have decided that the exemption limit on the basis of extent of land should be reduced from 12½ standard acres to 5 standard acres, and that composition may be given to holdings up to the extent of 20 standard acres only. The rate of composition is also proposed to be doubled.

The exemption limit in the case of non-agricultural income is at present Rs. 4,000 per annum. The same limit is proposed to be adopted in the case of agricultural income-tax also.

Under the existing definition of "standard acres" within the meaning of the Madras Agricultural Income-tax Act, 1955, except for crops like arecanut, tea, coffee, rubber, cinchona and cardamom, calculation of standard acre is based on rate of assessment of the land. In the case of crops like sugarcane, turmeric, etc. there is no direct correlation between the income earned by the agriculturist and the tax payable per acre at the compounded rate

based on the assessment on the land. The incidence of taxation on highly remunerative commercial crops is light when compared to the incidence on food crops. Therefore the Government have decided to recast the definition of "standard acre" so as to make it more equitable. In adopting the new definition the average income from the various crops has been taken into account.

As the Bill is an important one, it is considered desirable that it should be referred to a Select Committee of this House for detailed scrutiny. I request the House to accept this motion for referring the Bill to the Select Committee.

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1967-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா இப் பேரவையின் பொறுக்குக் குழுவின் ஆய்வுக்கு அனுப்புவதற்கு முன்பு இந்த மசோதாவின் மீது சில கருத்துக்களை என் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவில் முன்பு $12\frac{1}{2}$ ஸ்டாண்டர்ட் எக்கர் வரை வருமான வரி விதிப்புக்கு விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்போது 5 ஸ்டாண்டர்ட் எக்கர் வரை விலக்கு அளிக்கப்பட்டு, 5 ஸ்டாண்டர்ட் எக்கர், அதற்கு மேல் வரி விதிக்கப்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதனால் ஆற்றுப் பாசனப் பகுதி, ஏரியில் முதல் தரமான நிலம் வைத்திருப்பவர்களுக்கு அவ்வளவு நன்மை அளிக்காது. இதனால் விவசாயத்தைப் பாதிக்கின்ற நிலைமை தான் ஏற்படும். ஆற்று ஓரம் இருக்கிற விவசாயிகள் 5 ஸ்டாண்டர்ட் எக்கரில் இருந்து வரி செலுத்த வேண்டுமென்ற முறை வருமானால் அவர்களுக்குள்ள உற்சாகம் குறைகிற நிலை ஏற்படலாம். ஆகவே வரி விதிப்புக்கான வரம்பை 5 ஸ்டாண்டர்ட் எக்கர் என்று வைப்பதற்குப் பதிலாக 10 ஸ்டாண்டர்ட் எக்கர் என்ற அளவுக்காவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஸ்டாண்டர்ட் எக்கர் என்றால் என்ன என்பதற்கான விளக்கம் இந்த மசோதாவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் எக்கர் பற்றிய விளக்கம் பழைய சட்டத்திலேயே மிகத் தெளிவாக இருக்கிறது. புதிதாக இந்த ம்சோதாவில் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கம்—எல்லாவற்றையும் நாங்கள் திருத்தி அமைத்திருக்கிறோம் என்கிற வாதத்திற்கு வேண்டுமானால் உதவியாக இருக்குமே தவிர, இதன் மூலம் விவசாயிகள் பெரும்பாலும் அதிகாரிகள் தயவில் அவரவர்கள் நிலத்தைப் பொறுத்தவரையில் என்ன என்ன செய்துகொள்ள வேண்டுமோ அந்த அளவுக்குச் செய்து கொண்டு தப்பிக் கொள்வதற்குத்தான் பயன் படும். இதன் மூலம் அதிகாரிகளின் தயவைத்தான் நாடும் நிலை ஏற்படும். ஆகவே பழைய சட்டத்தில் உள்ள விளக்கமே தெளிவாக இருப்பதனால் அதையே வைத்துக் கொள்ளலாம் என்பதாக யோசனை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து விவசாய வருமான வரி செலுத்தக் கூடியவர்கள் கம்பௌண்டிங் செய்துகொள்ள லிமிட் 50 ஸ்டாண்டர்ட் எக்கர் என்ற அளவில் முன்பு வைக்கப்பட்டிருந்தது. அந்த லிமிட்டைப் பொறுத்த வரையில் 5 ஸ்டாண்டர்ட் எக்கருக்கு மேல் வரி என்கிறபோது அதன் நான்கு மடங்கு 20 ஸ்டாண்டர்ட் எக்கர் வரை கம்பௌண்டிங் லிமிட் வைக்கலாம். ஆனால் வரி விதிப்பை 10 ஸ்டாண்டர்ட் எக்கருக்கு மேல் என்று ஏற்படுத்துகிறபோது அதன் நான்கு மடங்கு 40 ஸ்டாண்டர்ட் எக்கர் வரையாவது கம்பௌண்டிங் லிமிட்டை மாற்ற வேண்டும். அப்போது தான் திராட்சை, பாக்கு, மஞ்சள் போன்று பயிரிடுகிறவர்களுக்கு உற்சாகம் ஏற்படும். ஆகவே இதைப் பொறுத்தும் நன்கு அலச வேண்டியிருக்கிறது. குறிப்பாக காடில் பரீடிங்—கால்நடை இன விருத்தி சம்பந்தமாகவும், அதிக நிலம் மேய்ச்சல் தரைக்காக வைக்க வேண்டியிருக்கிறது. மேலும் அரசாங்கத் தரப்பில் விவசாயப் பண்ணை வைத்திருப்பது போல தனிப்பட்டவர்களும் ஒரு பண்ணை

அளவில் வைத்து விவசாயத் துறையில் நல்ல ரிசர்ச் செய்யக்கூடிய வாய்ப்பு இருந்தால் தான் விவசாயத்தில் நல்ல வளர்ச்சியைக் காண முடியும். ஆகவே இதையும் மனதில் கொண்டு கம்பௌண்டிங் லிமிட்டை 40 ஸ்டாண்டர்ட் எக்கர் வரையிலாவது உயர்த்த வேண்டும். ஆக வரி விதிப்பில் இருந்து விலக்குப் பெறுகிற நில விஸ்தீரணத்தை 10 ஸ்டாண்டர்ட் எக்கர் என்ற அளவில் உயர்த்த வேண்டும். கம்பௌண்டிங் லிமிட்டை 40 ஸ்டாண்டர்ட் எக்கர் என்ற அளவில் உயர்த்த வேண்டும், ஸ்டாண்டர்ட் எக்கர் என்பதற்கான விளக்கத்தை பழைய சட்டத்தில் உள்ளதுபோலவே வைத்துவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மசோதா இப் பேரவையின் ஆய்வுக் குழுவுக்குத்தான் போகிறது. பின்னரும் இதுபற்றி விரிவாகப் பேசி, ஆராய்வதற்கு வாய்ப்பு இருப்பதால், தற்போது இதன்மீது இரத்தினச் சுருக்கமாகப் பேசினால் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்த மசோதாவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப் பேரவையின் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பியிருப்பதை நான் வரவேற்று, எனது கருத்துக்களை இரத்தினச் சுருக்கமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அதிகமாக வளர்த்திக் கொண்டு போக விரும்பவில்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக இந்தச் சபையில் ஒரு மரபு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. எதிர்க் கட்சித் தலைவருக்கும் சேர்த்துச் சொல்கிறேன். பொறுக்குக் குழுவில் இடம் பெறுகிற உறுப்பினர்கள் யாரும் தற்போது நடக்கும் விவாதத்தில் கலந்துகொள்வது வழக்கம் இல்லை. அத்தகைய மரபை இப்போதும் நாம் பின்பற்றுவது நல்ல சம்பிரதாயத்தை ஏற்படுத்திக்கொள்வதாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு திரு. எஸ். ஜே. ராமசாமி அவர்கள் ஆய்வுக் குழுவில் உறுப்பினராக இருப்பதை கவனிக்கவில்லை. மன்னிக்கவேண்டும். விரிவாக அவர்கள் அங்கே ஆராய்வு செய்ய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே ஆய்வுக் குழுவில் இடம் பெருதவர்கள், தங்கள் கருத்தை எடுத்துச்சொல்ல இப்போது வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

***திரு. செ. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த மசோதாவைப்பற்றி ஒரு சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொது விவாதத்திலே முதலமைச்சர் அவர்கள் வரி விதிப்பைப் பற்றிப் பேசும்போழுது கம்பவுண்டிங் கொடுப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் கம்பவுண்டிங் கொடுப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அப்படி கம்பவுண்டிங் கொடுப்பதன் நோக்கத்தை எடுத்துவிடக்கூடிய காரியங்கள் இந்த மசோதாவில் இருக்கின்றன. முன்பு இருந்தது என்னவென்றால் $12\frac{1}{2}$ ஸ்டாண்டர்ட் எக்கருக்குக் கீழ் உள்ளவர்களுக்கு வரி கிடையாது என்று இருந்தது. ஆனால் இப்பொழுது ஐந்து ஸ்டாண்டர்ட் எக்கர் உள்ளவர்களுக்கு வரி போடப்பட்டிருக்கிறது. ஸ்டாண்டர்ட் எக்கர் என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள டெஃபனிஷனில் முன்பு இருந்ததைவிடக் குறைத்து இருக்கிறார்கள். உதாரணமாக பணப்பயிர், உணவுப் பயிர் என்று பாகுபடுத்தி இருக்கிறார்கள். பணப் பயிருக்கு எல்லாம் வரியை அதிகமாக விதிக்கக்கூடிய அளவிலே இருப்பது விஞ்ஞான ரீதிக்கும் பொருந்துவதாகத் தெரியவில்லை. இதைப்பற்றிச் சில உதாரணங்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது பாராவிலே 1-வது சப்-செக்ஷனிலே **one-fifth of an acre of land used for growing arecanut or grape vine** என்று போட்டிருக்கிறது. இதிலே திராட்சைத் தோட்டத்தைப் பொறுத்தவரையில் ஐந்தில் ஒரு பகுதியில் திராட்சை போட்டால் அது ஒரு ஸ்டாண்டர்டு எக்கர் என்று சொல்லப்படுகிறது. அந்த அடிப்படையிலே பார்த்தோமானால் ஒரு எக்கர் திராட்சை பயிர் செய்தால் ரூ. 3,600 வரும் என்ற அடிப்படையில் இருக்கிறது.

ஆனுல் வரியைப்பற்றிக் கணக்கெழுதிக் காட்டினுல் ரூ. 3,600-க்கு வரியில்லை, அதற்குமேல் வரி என்று இருக்கிறது. கம்பவுண்டிங்கில் ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு வரியில்லை என்று சொல்லிவிட்டு, ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கரில் திராட்சை பயிரிட்டால் 3,600-க்கு வருமானம் வரும் என்ற அடிப்டடையில் வரி போட்டு இருக்கிருர்கள். ஒரு ஏக்கர் பயிர்செய்து 3,600 ரூபாய் வருமானம் வரும் என்று யார் சொன்ஞர்களோ தெரியவில்லை. அதேபோல் **one-half of an acre of land used for growing turmeric** என்று போட்டிருக்கிருர்கள். மஞ்சள் விவசாயம் செய்தாலும் அப்படிப் போடப்படுகிற ஒரு ஏக்கர் நிலத்தில் பாதி ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று போட்டு இருக்கிருர்கள். $2\frac{1}{2}$ ஏக்கரில் மஞ்சள் போட்டால் நிகர வருமானம் 3,600 ரூபாய் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிருர்கள். ஒரு ஏக்கரில் பாதி ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வைத்து அந்த அடிப்படையில் $2\frac{1}{2}$ ஏக்கர் மஞ்சளுக்கு 3,600 ரூபாய் வருமானம் வரும் என்று சொல்வது தவறு. **One acre of land used for growing chillies, sugarcane, irrigated cotton or irrigated roundnut** என்று போடப்பட்டு இருக்கிறது. இது இறைவைக் கடலை, இறைவைப் பருத்தி இவற்றிற் கெல்லாம் பயிர் செய்கின்ற நேரத்திலே ஐந்து ஏக்கர் நிலத்தில் பயிர் செய்தால் 3,600 ரூபாய் வருமென்ற அடிப்படையில் போடப்பட்டிருக்கிறது. ஆனுல் அனுபவ ரீதியாகப் பார்க்கப் போனுல் 5 ஏக்கரில் இறைவைக் கடலையானுலும் சரி, இறைவைப் பருத்தியானுலும் சரி நிச்சயமாக 3,600 ரூபாய் நிகர வருமானம் வருமென்று சொல்ல முடியாது. முதலமைச்சர் அவர்கள் கம்பவுண்டிங் கொடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிருர்கள், மற்ற அதிகாரிகள் எல்லாம் அந்த நோக்கத்தை தோற்கடிக்கின்ற முறையில் $12\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கரை 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று மாற்றியிருக்கிருர்கள். ஸ்டாண்டர்டு ஏக்கர் அளவை மிகமிகக் குறைத்து விட்டார்கள். வருமானத்திற்கும் வரிபோடுவதற்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது என்பதை நான் அழுத்தம் திருத்தமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இதை செலக்ட் கமிட்டி விரிவாக ஆராய்ச்சி செய்யவேண்டும். ஒரு ஏக்கரில் திராட்சை பயிரிட்டால் 3,600 ரூபாய் வரும் என்ற அடிப்படையை யார் நிர்ணயித்தார்களோ தெரியவில்லை. ஐந்து ஏக்கரில் பருத்தி பயிரிட்டால் ரூ. 3,600 வரும் என்று யார் நிர்ணயித்தார்களோ தெரியவில்லை. **Two acres of land whether wet or dry, used for growing irrigated paddy with or without any other crop** என்று கொடுத்திருக்கிருர்கள். கிணற்றுப் பாசனம் செய்து நெல் மகசூல் வெட் ஆர் டிரையில் செய்தால்கூட இரண்டு ஏக்கர் செய்தால் அதை ஒரு ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று ஆக்கியிருக்கிருர்கள். 10 ஏக்கரில் இறைவைப் பாசனம் செய்து நெல் பயிரிட்டாலும் வரி விதிக்கப்படும். முன்பு $12\frac{1}{2}$ ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்ததால் 25 ஏக்கர் பயிர் செய்ய வரியில்லை என்ற நிலை இருந்தது. இதிலேயிருந்து ஒரு கோடி ரூபாய் வரி என்று சொல்லப்படுகிறது. இந்த வகையிலே 5 கோடி ரூபாய் வரை வரும். ஆகவே முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி அளித்திருப்பதை தோற்கடிக்கக்கூடிய வகையில் இந்த மசோதா அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொண்டு பொறுக்குக் குழு இதையெல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த விவசாய வருமான வரி மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முன்பு $12\frac{1}{2}$ ஸ்டாண்டர்ட் ஏக்கருக்கு மேல் வரி விதிக்கப்பட்டது. இப்பொழுது 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்தால் வரி விதிக்கப்படுகிறது. $12\frac{1}{2}$ ஸ்டாண்டர்ட் ஏக்கர் இருக்கும்பொழுது வரி கொடுக்க முடியாமல் கஷ்டப்படுகிருர்கள். விவசாயிகளுடைய நிலையைப் பார்த்தால் அவர்களிடம் வைக்கோல் போர்தான் பெரியதாக இருக்கிறது, வேறு ஒன்றும் கிடையாது. கணக்குப் பார்த்தால் அவர்களுக்குக் கடன்தான் இருக்கும். நிலம் கூட இருக்கிற விவசாயிகளுக்கு வருமானமே கிடையாது. இப்பொழுது கூலியாட்கள்

கிடைப்பதே இல்லை. கிடைத்தாலும் அவர்களுக்கு அதிகமாகச் சம்பளம் கொடுக்க வேண்டும். மூன்று நேரமும் சாப்பாடு போட்டு அதிகமாகக் கூலி கொடுக்க வேண்டியிருப்பதாலே அவர்களுக்கு வருமானமே கிடையாது. பெரிய விவசாயிகள் நாற்று விட்டால் அவற்றைப் பறிக்கக்கூடிய பருவத்திலே பறிக்கலாம் என்ற நம்பிக்கையே இல்லை, ஆட்கள் கிடைப்பதில்லை, எல்லா விலைகளும் ஏறிப்போய் விட்டன. ஒரு ஜோடி நல்ல மாடு வாங்க வேண்டுமென்ருல் 1,000 முதல் 1,500 ரூபாய் வரை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது. காங்கேயம் மாடுகள் வேண்டுமென்ருல் இன்னும் அதிகம், சாதாரண மாடுகள் விலை இந்த நிலையில் இருக்கிறது. ஆகவே இந்த நிலையில் விவசாயிகளுக்கு வருமான வரி விதிக்கக்கூடாது. இந்த அரசாங்கம் வந்ததும் நிலவரியெல்லாம் எடுக்கப் போகிருர்கள் என்று சொன்ஞர்கள், இப்பொழுது என்னவென்ருல் வருமான வரியைப் போடுகிருர்கள், விவசாயிகளுடைய நிலைமை மோசமாக இருக்கிறது, ஆகவே இந்த வருமான வரியை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லை என்ருல் முன்னுலே இருந்தபடியேயாவது இதை வைக்கவேண்டும். 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர்களுக்குமேல் என்று ஆக்குவது விவசாயிகளுக்கு தொந்தரவு கொடுக்கக்கூடிய நிலைமையாக இருக்கும். ஆகவே இதை நிவர்த்தி செய்ய வேண்டும். விவசாயிகள் கணக்கை மாற்ற நிலத்தை மறைப்பதற்கு எந்த விதமான வழியும் இடையாது. விவசாயிடம் இருக்கிற தானியங்களையெல்லாம் கன்ட்ரோல் வைத்து எடுத்து கொள்கிருேம். எவ்வளவு கையிருப்பு வைத்திருக்கிருர்கள் என்ற கணக்கு எல்லாம் இருக்கிறது. ஆகவே அதற்கு மேலே இப்பொழுது வருமான வரி போட வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே இதை நல்ல முறையில் பொறுக்குக் கமிட்டி ஆராய்ச்சி செய்து வருமான வரியில்லாமல் செய்தால் விவசாயிகளுடைய நிலை உயரும். வரி போட்டுக்கொண்டே போனுல் விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியாது. இந்த நாட்டிலே உள்ள உணவுப் பற்ருக்குறையை நிறைவு செய்ய வேண்டுமென்று சொன்ஞல் அவர்கள் நல்ல மனதோடு விவசாயம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்கள் நல்ல மனதோடு வேலை செய்தால்தான் பற்ருக்குறை நீங்கும். அவர்கள் நல்ல மனதோடு வேலை செய்யாவிட்டால் விவசாயம் நல்ல முறையில் நடைபெருது. ஆகவே இதையெல்லாம் நல்ல முறையிலே பொறுக்குக் குழு ஆராய்ச்சி செய்து வருமான வரியை அடியோடு ரத்துச்செய்ய வேண்டுமென்று நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வருமான வரியில்லாமல ரத்து செய்து விவசாயிகளுக்கு நிலவரியே இல்லாமல் செய்து நஞ்சை நிலங்களுக்கும் வரியே இல்லாமல் ரத்து செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு என். சங்கரய்யா :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சென்னை விவசாய வருமான வரி திருத்த மசோதாவிலே என்னுடைய கருத்து என்னவென்ருல் இந்த மசோதா கொண்டுவரப்பட்டதன் நோக்கம் இன்றைக்குக் கிடைப்பதைக் காட்டிலும் அதிகமாக அரசாங்கத்திற்கு வருமானம் கிடைப்பதற்குக் கொண்டு வரப்படுகிறது. சில மாற்றங்களைச் செய்வதற்குப் பொறுக்குக் குழுவிற்கு விடப்படுகின்ற நிலையிலே இந்த மசோதாவின் மூலம் இன்றைக்குக் கிடைப்பதைக் காட்டிலும் அதிகப்படியாகக் கிடைக்கும் வகையிலே பயனளிக்கும் என்பது ஒன்று.

இந்த வரியின் மூலம் பெரு நிலக்கிழார்கள், அதிகமாகச் சம்பாதிக்கக் கூடியவர்கள் ஆகியவர்களிடமிருந்து வசூலிப்பதில் சரியான ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு விதிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது; 20 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை கம்பவுண்டிங் செய்து கொள்ள உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் அல்லாத இதர வருமானக்காரர்களைப் பொருத்தவரை 4,000 ரூபாய் வரை விதிவிலக்கு அளிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. தமிழ்நாடு அரசாங்கம் ஆக்க பூர்வமான காரியங்களுக்கு ஏற்படக்கூடிய செலவுக்குச் சரியானபடி ஏராளமாகச் சம்பாதிக்கக்கூடிய நிலப் பிரபுக்களிடமிருந்து அதிகப்படியான விவசாய வருமான வரியைப் பெற்றுக்கொள்வது நலமாக இருக்கும். ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இணைக்கக்கூடியதிலே காப்பி, ரப்பர், ஏலம் ஆகியவற்றுக்குக்கூட ஒரு ஏக்கருக்கு மேலே ஐந்தில் ஒரு

பிற் பகல் 12-30

பங்கு ஏக்கர் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. காப் ஏலம், ரப்பர் போன்றவை நிறைய வருமானம் கிடைக்கக்கூடிய பண்டங்க இவற்றையெல்லாம் சரியாக நிர்வகித்து பெரிய நிலப் பிரபுக்களிடமிரு விவசாய வருமான வரியைப் பெற்று இந்த அரசாங்கத்தால் நடத் கூடிய சமுதாய அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவற்றைப் பயன்படுத் வகையில் பொறுக்குக் கமிட்டியில் பரிசீலனை செய்யும்போது கவனத் கொள்ளவேண்டும். பெரும் நிலக்கிழார்களுக்கு இயல்பாகவே வருமா வரி கொடுப்பதில் தயக்கம் ஏற்படுவது இயல்பு. மாநில மக்கள் ஒ மொத்தமான நலனைக் கருதி அவர்களிடமிருந்து இதனை நல்ல முறைய வசூலிப்பது பற்றிப் பொறுக்குக் கமிட்டியில் பரிசீலிக்கவேண்டுமென் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிருஷ்ணசாமி கவுண்டர் அ கள் இரண்டு அல்லது மூன்று நிமிடங்களுக்குள் இரத்தினச் சுருக்கமா பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்—காரணம், இது தனி ஆய்வுக் குழுவ ஆராயப்பட இருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, தாங் சொன்னது மாதிரி இரத்தினச் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறே ஆய்வுக் குழுவில் இது ஆராயப்படுவதாக இருந்தாலும் அதில் உள்ள களுக்கு எங்களுடைய கருத்தை எடுத்துச் சொல்லுவது இன்றியமைய தாக இருக்கிறது.

இந்த விவசாய வருமான வரி இப்போதுள்ள கணக்குப்படி 20 ஏக் வைத்திருக்கின்ற ஒரு விவசாயி ரூ. 33·75 கட்ட வேண்டியிருக்கு ஆனால் இப்போது புதிய மசோதாவின்படி ரூ. 112·50 கட்டும்படியாகிற அதிலே ஸ்டாண்டர்டு ஏக்கர் மாறுதலையும் வைத்து கணக்குப் பார்த்த ரூ. 150 ஆகும். ஆகவே, முன்பு இருந்ததைவிட ஐந்து மடங்கு அ மாக வர வாய்ப்பு இருக்கிறது என்று முதலிலே சுருக்கமாகச் சொல் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒவ்வொரு பயிருக்கும் ஒவ்வொரு விதம ஸ்டாண்டர்டு ஏக்கர் என்பதை நிர்ணயித்திருக்கிறார்கள். அதைப் பற் கருத்தை ஆய்வுக் குழுவில் இருப்பவர்களுக்குத் தெரியப்படுத்த வே மென்பதற்காக கொஞ்சம் அதிகம் பேச அனுமதிக்கவேண்டுமென்று கேட் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக் குழுவில் தங்களுடை கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் உங்களுடை கருத்துக்களை எல்லாம் அறிந்து எடுத்துச் சொல்லுவார்கள். ஆகவே தாங்கள் இரத்தினச் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று மீண்டும் கேட் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : பல பயிர்களுக்கு, இன்னின் பயிர்கள் உள்ள நிலத்திற்கு இன்னின்ன ஸ்டாண்டர்டு என்று வைத்தி கிறார்கள். கரும்பு, மிளகாய், பருத்தி முதலிய ஒவ்வொன்றுக்கும் தன தனியாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பூமியில் இவையெல்லாம் கல ரொடேஷன் போல் பயிர் செய்வது பழக்கம். கடலை, பருத்தி என் மாறி மாறி பயிர் செய்யும்போது பலவிதமான சந்தேகங்களுக்கு இ ஏற்படும். முன்னால் பேசிய நண்பர் சொன்னது போல் ஐந்தில் ஒரு பா ஏக்கர் முந்திரி சாகுபடியில் ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று வருவது விந் யாக இருக்கிறது. விவசாய இலாகாவில் சென்ற ஆண்டு உள்ள கணக்கை வைத்து பத்தாயிரம், பதினைந்தாயிரம் வரும் என்று கணக் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு விவசாயக் கல்லூரிக் கணக்குப்படி எத்த ஏக்கர் சேர்ந்தது என்று பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்பவுண்டிங் முறை 20 ஏக்கர் வரைதான் கொடுக்கப்பட்டிருக்கிறது இதை 30 ஏக்கர் வரை நீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இந்த கம்பவுண்டிங் முறை வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டதற்கு முக்கியமான காரணமே விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் கணக்குக்

கொண்டுபோய்க் கொடுத்து மெய்ப்பிக்கும் நிலையிலே விவசாயிகளால் மெய்ப்பிக்க முடியாத நிலை அவர்களையும் திருப்திப்படுத்த முடியாத நிலை—இதனால் பலவிதமான சிரமங்கள் ஏற்பட்ட காரணத்தால்தான் இந்த கம்பவுண்டிங் முறையே கொண்டு வரப்பட்டது. ஆகவே, உள்ள தெல்லாம் கம்பவுண்டிங் முறையாக இருக்கவேண்டும். ஒன்றுக்கு இரண்டு மடங்கு என்று சொல்லி இன்றைக்கு ஐந்து மடங்கு வருமானம் வரக் கூடிய நிலை நிச்சயமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

மிளகாய், பருத்தி, நிலக்கடலை, கிணற்றுப் பாசனம், அரசாங்க நெறியில் மராமத்துத் துறைமூலம் வருகிற தண்ணீர் இவை பற்றி யெல்லாம் ஒழுங்காகக் காட்டப்படவில்லை. பொறுக்குக் குழுவினர் இவை பற்றியெல்லாம் முடிவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

இப்போதுள்ள நிலைப்படி கணக்குப் பார்க்கும்போது ஐந்து மடங்குக்கு மேல் வரி மூலம் வருமானம் வரக்கூடிய நிலை இருக்கிறது.; அது பத்து மடங்கு அளவுக்குக்கூட வரலாம். இதைப் பற்றியெல்லாம் பொறுக்குக் கமிட்டி சிந்தித்துப் பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஜி கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா பொறுக்குக் கமிட்டிக்கு விடப்படுகிறது. இது பொறுக்குக் கமிட்டிக்குப் பாவதாக இருந்தாலும் பொதுவான அபிப்பிராயத்தைக் கூறுவதன்மூலம் பொது மக்களுக்கும், பொறுக்குக் கமிட்டியினருக்கும் ஆலோசனை செய்யும் படியான அளவுக்கு, அதைப் பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்கு இந்த விவாதம் தேவையாகும். இதனால் எல்லா அங்கத்தினர்களுடைய நாக்கத்தையும் தெரிந்துகொள்ள முடிவதோடு பொதுமக்களுடைய அபிப் பிராயம் பொறுக்குக் கமிட்டிக்குக் கிடைக்கவும் வாய்ப்பு ஏற்படும். பொறுக்குக் கமிட்டியில் இருப்பவர்கள் ஏன் பேச வேண்டாம் என்று அன்பு வைத்திருந்தார்கள் என்றால் அந்தக் கட்சியிலுள்ள மற்ற அங்கத் தினர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கட்டும் என்ற நிலையில்தான். அது ரு மரபுதான்.

விவசாய வருமான வரியை முன்னாலே இருந்த சர்க்கார் போட்ட பாது "உச்ச வரம்பு வந்த பிறகு விவசாய வருமான வரிச் சட்டம் டிக்கப்படாது" என்றார்கள். ஆனால் அது நீக்கப்படவில்லை. மாண்புமிகு தலமைச்சர் அவர்கள் ஒரு பக்கம் ஏதோ சலுகை கொடுப்பதாகக் காடுத்து விட்டு இன்னொரு பக்கம் நான்கு மடங்காக வருவாய் தேட ற்பாடு செய்தற்காகப் பாராட்டுகிறேன். புஞ்சை நிலத்திற்கு வரியை டுத்துவிட்டதால், ஒரு கோடி ரூபாய் வருவாய் அரசாங்கத்திற்குக் குறைகிறது ன்று சொன்னார்கள். ஆனால் அடுத்த சட்டம் என்னவென்றால், முன்பு ரு ரூபாய் கொடுத்தவர்கள் 3, 4, 5 என்று கொடுக்கும்படியான நிலைமை ல் சாமர்த்தியமாக, திறமையாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கி ர்கள். கொடுக்கப்பட்டது அவ்வளவு பெரிய சலுகை அல்ல. இதிலே ணக்கு வைத்துக் கொள்வதிலே கஷ்டங்கள் இருக்கின்றன. கம்பவுண்டிங் வத்துக் கொள்ள வழி செய்யவேண்டும் என்று கேட்டோம். நாங்கள் கட்டுக் கொண்டதற்கு அவர்கள் இணங்கி கம்பவுண்டிங் முறையை ற்றுக் கொண்டார்கள். அதற்குத் தகுந்த மாதிரியாகத் திருத்தி மைத்திருக்கிறார்கள். நன்றி. அவ்வாறு கம்பவுண்டிங்கை ஏற்றுக் காள்ளும்படியான நிலையில் அவர்கள் கொண்டுவந்துள்ள மசோதா ன்படி ஒரு கோடி ரூபாய் அல்ல, பல கோடி ரூபாய் வர வாய்ப்பு ருக்கிறது. (மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நீங்கள் த்தகைக்கு எடுத்துக் கொள்ளுங்கள்.)

12½ ஸ்டாண்டர்டு எக்கருக்கு 3,600 ரூபாய்; ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு 4000 ரூபாய் என்று முதலமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். என்னுடைய நிலத்திலிருந்து ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கரை அவர்களுக்கு கொடுத்து வைக்கிறேன். நாலாயிரம் ரூபாய் கொடுத்து விடுவதாக இருந் தால் பரம்பரை பரம்பரையாக பூமியைக் கொடுத்துவிடத் தயாராக இருக் கிறேன்.

ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கராவிற்கு 4,000 ரூபாய் என்று ஏற்றுக் கொள்ளட்டும். அமைச்சரவையில் யாராயிருந்தாலும் இதை ஏற்றுக் கொண்டால் இப்போதே அவர்களுக்கு நான் கொடுத்துவிடுகிறேன். 4,000 ரூபாய் இருக்க முடியாது. ஐந்து ஏக்கருக்கு, ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கருக்கு ரூ. 2,500 தான் இருக்கமுடியும். 12½ ஸ்டாண்டடேர்ட் ஏக்கருக்கு 3,500 ரூபாய் என்று வைக்கப்பட்டிருந்தது. இப்போது ஐந்து ஸ்டான்டேர்ட் ஏக்கருக்கே அதிகமாகிறது.

மஞ்சள், கரும்பு, பருத்தி என்று இப்படி ஒவ்வொன்றுக்காக கணக்குப் போட்டால் ஐந்து ஏக்கர் என்பது பதினைந்து அல்லது இருபது ஏக்கர் அளவிற்கு வந்து விடுகிறது. அந்த ஒரு நிலைதான் இதனால் ஏற்படப் போகிறது. பத்து ஏக்கர் நன்செய் அல்லாமலே தோட்ட பூமியை எடுத்துக் கொண்டால் கூட இப்படி ஒவ்வொன்றுக்கும் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று வரும்போது இந்தச் சட்டப்படி அது நாற்பது ஏக்கர் வரை போகும். அப்படிப்பட்ட ஒரு சிக்கல் இருக்கிறது. புன்செய்க்கு வரி எடுத்ததால் ஒரு கோடி நஷ்டம் வருகிறது என்று சொல்லுகிறார்கள். எதற்காக அதை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. ஒரு கோடி ரூபாய் வேண்டுமானாலும் கொடுத்துவிடுகிறோம், பழையபடி சட்டம் இருந்தால் போதும் என்றுதான் விவசாயிகள் நினைப்பார்கள். ஒரு ரூபாய் வரிச் சலுகை கொடுத்துவிட்டு இந்தப் பக்கத்திலிருந்து பதினைந்து ரூபாய் எடுப்பதை விட பழைய வரி இருந்தாலே போதும் என்று விவசாய மக்கள் உணருவார்கள்

இருபது ஸ்டாண்டேர்ட் ஏக்கர் வரையில் கம்பவுண்டிங், அதற்கு மேல் இல்லை என்று சொல்லுகிறார்கள். முப்பது ஸ்டாண்டேர்ட் ஏக்கர் வரையில் கம்பவுண்டிங் இருக்கவேண்டும். உச்ச வரம்புச் சட்டம் வருவதற்கு முன் நிலத்தைப் பிரித்துக் கொண்டு விட்டார்கள் என்று சொல்கிறார்கள். அவர்கள் சட்டப்படி, சௌகரியப்படி பிரித்து வைத்திருக்கிறார்கள் என்பதில் ஒளிவோ மறைவோ இல்லை. அவர்கள் சட்டப்பிரகாரம் செய்திருக்கிறார்கள். அவர்கள் " இன்ஹெரிட்டன்ஸ் " ரைட்ஸ் படி செய்து கொண்டிருக்கிறார்கள். ஃபால்ஸ் டாக்குமென்ட்ஸ செய்திருந்தால்—முன்னால் ஒரு கமிட்டி போட்டிருந்தார்கள் என்று நினைக்கிறேன். —நியாயமில்லாத பிரிவினை என்றால் சர்க்கார் விசாரணை செய்து எடுத்துக் கொள்ளலாம்.

இந்த விவசாய வருமான வரிச்சட்டத்தை இரண்டு விதமாகப் பிரிக்க வேண்டும். உணவு உற்பத்தி செய்பவர்களுக்கு அதிகச் சலுகை கொடுக்க வேண்டும். கமர்ஷியல் க்ராப்ஸ்க்கு அதிகச் செலவு தேவையில்லை. உணவுப் பிரச்னைதான் முக்கியமானது. உணவுப் பயிர் செய்யும் விவசாயிகளுக்கு 12½ ஸ்டாண்டேர்ட் ஏக்கர் அப்படியே இருக்க வேண்டும். கமர்ஷியல் க்ராப்ஸ் செய்பவர்களுக்கு எக்ஸெம்ஷன் லிமிட்டை குறைத்துக்கொள்ளலாம். பணப் பயிர்களில் வருமானம் ஓரளவிற்கு இருக்கிறது. அப்படி வருமானம் இருந்தபோதிலும் அதில் கஷ்டம் அதிகம் இருக்கிறது. கிணற்றுப் பாசனம் என்றால் கிணற்றில் நூறு அடிக்குக் கீழிருந்து தண்ணீர் இறைத்து பணப் பயிர் செய்யவேண்டியிருக்கிறது. சர்க்கார் பாசன வசதி உள்ள பணப் பயிர் இருக்கிறது. தோட்டக்கால், கிணற்றிலிருந்து செய்வது ஒரு நிலைமை. குளம் குட்டைகளில் இருந்து எடுத்துக் கொள்ளும் நிலை வேறு. ஆகவே, உணவுப் பயிர் செய்யும் எந்த விவசாயிக்கும் குறைந்தது 10 ஸ்டான்டேர்ட் ஏக்கருக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டும். கமர்ஷியல் க்ராப்ஸ் பயிர் செய்பவர்களுக்கு 7½ ஸ்டான்டேர்ட் ஏக்கராவது இருக்க வேண்டும்.

'Amendment of section 2'

'Standard acre' means—

(i) One-fifth of an acre of land used for growing..grape vine..

ஆகவே, எவ்வளவு வேளாண்மை செய்தாலும் ஏக்கர் விஸ்தீரணத்தில் இருக்க வேண்டும், ஸ்டான்டேர்டு ஏக்கரில் இருக்கவேண்டும். பயிரை வைத்துக் கொண்டு செய்தால் அதனால் தொல்லை ஏற்படும். அப்போது பத்து ஏக்கர் என்பது ஐம்பது ஏக்கர் அளவிற்குப் போய் விடும். ஆகவே உணவுப் பயிருக்கு பத்து ஸ்டான்டேர்ட் ஏக்கர்கள், கமர்ஷியல் க்ராப்ஸ்க்கு ஏழரை ஸ்டான்டேர்ட் ஏக்கர்கள் என்று வைத்து அதற்கு மேல் இருப்பதற்கு படிப்படியாக போட்டு எவ்வளவு என்று விதிக்கலாம் என்பதை பொறுக்குக் கமிட்டியில் தீர்மானம் செய்வோம். ஆகவே இது பூர்ணமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒரு இடத்தில் சலுகை கொடுத்து, ஆசை காட்டி ஆனால் அதிகமான வரியைப் போட்டிருக்கும் ஒரு அருமையான சட்டம் இது என்று கூறிக் கொண்டு நஷ்டத்தை ஈடு செய்ய முன்னால் கொடுத்த சலுகையால் எந்தவிதப் பலனுமில்லை, மக்கள் அதை அனுபவிக்கும் நிலையும் இல்லை என்று வருத்தத்தோடு கூறிக்கொண்டு பொறுக்குக் கமிட்டி நல்லமுறையில இதை ஆராய்வார்கள் என நினைத்து முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, இந்தச் சபையிலே விவசாய வருமான வரி என்ற திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டதொரு திட்டமாகும். அப்படி ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம் மட்டுமல்ல, நடைமுறையில் இருந்து வரும் திட்டமுமாகும். இப்போது செய்யப்படுவதெல்லாம் அதை நல்லமுறையில் திருத்தியமைத்து அதன் மூலமாக சமூக நீதி நிலை நாட்டப்படவேண்டும், சர்க்காருக்கு சற்று கூடுதலாய் வருவாய் வரவேண்டுமென்பதுதான். இந்த இரண்டு நோக்கத்தோடு சில திருத்தங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் மிகக் கடுமையாகக் கருதப்பட்டதை மன்றத்தில் உள்ளவர்கள், பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்கள் எடுத்துச் சொன்னதையொட்டி இதை ஒரு பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பொறுக்குக் கமிட்டியில் அங்கத்தினராக இருக்கப் போகிறவர் இப்போதும் பேசலாமா என்றால் அப்படி பேசுகிற மரபு இல்லை. ஆனால் சில வேளைகளில் பேசலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள்—பேசுவதில் அதிகமான தவறு இல்லை. பேசுவதிலிருந்து பொறுக்குக் கமிட்டியில் அவர்கள் என்னென்ன பேசப் போகிறார்கள் என்பதை அறிந்துகொள்ளக்கூட அது ஒரு வாய்ப்பாக இருக்கிறது என்று சொன்னாலும் இப்போது அவர்கள் பேசியதெல்லாம் பற்றி இன்னும் விரிவான முறையில் பொறுக்குக் கமிட்டியில் பேசலாம். ஆனால் அவர்கள் பொறுக்குக் கமிட்டி என்ற எண்ணத்தில இருப்பதாகத் தெரியவில்லை, கொண்டு வருகிற இந்தத் திருத்தத்தை நொறுக்கிப் போடுவதற்கு இதை நொறுக்குக் கமிட்டியாக இருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, அடிப்படையில் நாம் இந்த விவசாய வருமான வரியை ஒப்புக்கொண்டிருக்கிறோமென்ற உணர்வோடு பொறுக்குக் கமிட்டியில் நாம் இவைகளை எல்லாம் ஆராய வேண்டுமென்று கருதுகிறேன்.

விவசாய வருமான வரி போடுவது, புன்செய் நிலங்களுக்கு நாம் ஏதோ சலுகை காட்டியிருப்பதால் அதைக் காட்டி இதை நாம் அதிக அளவிற்குப் பறிக்க விரும்புகிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். புன்செய் நிலங்களுக்கு மட்டுமல்ல. நன்செய் நிலங்களுக்கும் அந்தச் சலுகைகளைச் செய்யவேண்டும் என்பதை அவையினர் வலியுறுத்தியிருக்கிறார்கள். அரசு தரப்பில் அது கவனிக்கப்படும் என்ற உறுதி அளிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இன்னும் பல சலுகைகள் நில உடைமையாளர்களுக்கு தேவையான முறையில், நியாயமான அளவில் தரப்பட இருக்கிறது. ஆகவே புன்செய் நிலங்களுக்கு வரி தள்ளுபடி செய்ததால் இதில் வேறு வகையில் அதிகமான வருமானத்தைத் தேடிக் கொள்கிறார்கள் என்று கருதத் தேவையில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், 25 கோடி ரூபாய் வருமென்று. அப்போதுதான் சொன்னேன் குத்தகைக்குக்கூட எடுத்துக் கொள்ளலாம் என்று. எனக்குப் பத்து கோடி கொடுத்துவிட்டு 25 கோடி வசூலித்து 15 கோடியை அவர்களே வைத்துக் கொள்ளலாம் என்றால்

சட்டம் இடம் கொடுக்காது. அந்த அளவில் இதில் வரும் என்று கருத வில்லை. சில லட்சம் ரூபாய்கள்தான் இதனால் அதிக வருவாய் வரும் என்று கருதுகிறோமே தவிர கோடிக்கணக்கில் நாங்கள் இதில் கருத்தைச் செலுத்தவில்லை. அந்த அளவிற்கு வராது.

உச்சவரம்புச் சட்டம் சரியான முறையில் நிர்வாகம் செய்யப்படுமானால் விவசாய வருமான வரி என்பது அதிகமான பேர்கள் வரி செலுத்தக் கூடிய அளவிற்கு இருக்காது. உச்சவரம்புச் சட்டத்தை சரியான முறையில் நிறைவேற்றிவிட்டால் இந்தச் சட்டத்தைப் பற்றி பயப்படத் தேவையில்லை. இதற்குப் பயப்படுகிறார்கள் என்றால் உச்சவரம்புச் சட்டத்திலிருந்து அவர்கள் ஏமாற்றியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. ஆகவே, நில உச்ச வரம்புச் சட்டத்திலுள்ள ஓட்டையை அடைக்கிற சட்டம்தான் இது. ஓட்டையின் அளவு எந்த அளவிற்கு பெருகியிருக்கிறதோ அந்த அளவிற்கு அடைப்பு பெரிதாக இருக்கவேண்டும். அப்படி அதில் ஓட்டை இல்லை என்றால் இந்தச் சட்டமே பயன் அற்றுப் போய்விடும். ஓட்டை இல்லை என்றால் விவசாய வருமான வரி கிடைக்குமா என்றால் கிடைக்காது.

ஒன்றை ஒத்துக்கொண்டார்கள். மகிழ்ச்சியடைகிறேன். காட்டப்பட வேண்டிய சலுகைகள் உணவுப் பயிர்களுக்குக் காட்டப்படவேண்டும், பணப் பயிருக்குத் தேவையில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் மிகவும் நன்றியோடு வரவேற்கிறேன். விவ்சாய வருமானம் பொதுவாக உணவுப் பயிரில் கிடைப்பதைவிட பணப் பயிரில்தான் அதிகமாகக் கிடைக்கும். பணப் பயிருக்கு அடியோடு கூடாது என்ற கொள்கை இந்த அரசுக்கு இல்லை, எந்த அரசுக்கும் இல்லை, ஆகவே அதில் அதிக வருமானம் வருகிறபோது அதிலிருந்து ஒரு பகுதியை சர்க்காருக்குச் கொடுப்பது அவர்கள் செய்யவேண்டிய ஜனநாயகக் கடமைகளில் ஒன்றாகும். ஆகையினால் அதிலே எது எதற்கு என்னென்ன வருமானம் கிடைக்கும் என்பதிலே இப்போது போட்டிருக்கிற முறையில் அதிகமான வருமானம் வரும் என்று கருதுகிறோம். உதாரணமாக, திராட்சைப் பயிரில் ஒரு ஏக்கரிலே ஐந்தில் ஒரு பாகம் பயிரிட்டாலும் அதிகமான பணம் வருகிறது என்று குறிப்பிட்டார்கள். நீங்களெல்லாம் பொறுக்குக் கமிட்டியில் உட்கார்ந்து ஆலோசிக்கும் போது அதற்கான விவசாயப் புள்ளி விவரங்களை எடுத்துக் காட்டும்போது ஐந்தில் ஒரு பகுதிக்கு இவ்வளவு வரும் என்று குறிப்பிடுகிறபோது, ஏதாவது மாற்றம் வேண்டுமென்றால் நாலில் ஒரு பகுதி என்றோ, மூன்றில் ஒரு பகுதி என்றோ மாற்றிக்கொள்ளலாம். இதனுடைய அடிப்படை நோக்கம், உறுப்பினர் திரு. சங்கரய்யா சொன்னபடி, இப்போது கிடைப்பதைவிடக் கூடுதலான வருமானம் வரவேண்டுமென்று பொறுக்குக் கமிட்டி உறுப்பினர்கள் நடந்துகொள்ளவேண்டுமென்று நான் பெரிதும் விரும்புகிறேன்.

விவசாய வருமான வரியின் தேவையையோ அல்லது நடைமுறையில் இருந்து வருவதையோ யாரும் மறுக்காமல் இருந்ததற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் க்ளாரிஃபிகேஷன், ஸார், திருவாங்கூர்-கொச்சி விவசாய் வருமான வரியிலே 3,000 ரூபாய் உச்ச வரம்பு என்று வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்திலே அதை 4,000 ரூபாயாக உயர்த்தப் போகிறார்கள். கன்னியாகுமரி ஜில்லாவில் திருவாங்கூர்-கொச்சிச் சட்டம் அமலில் இருந்து வருகிறது. அந்தச் சட்டத்தைத் திருத்த உத்தேசம் உண்டா? அல்லது இந்தச் சட்டத்தை அந்தப் பகுதிக்கு விஸ்தரிப்பதாக உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, பொதுவாக கன்னியாகுமரி பகுதி தமிழகத்தோடு சேர்ந்த நாளிலிருந்து அவர்களிடத்திலே ஒரு சாமர்த்தியமான மனப்பான்மை இருக்கிறது. எந்தெந்தச் சட்டங்கள், இங்கே இருக்கிற சட்டங்கள் தங்களுக்குச் சாதகமோ அவைகளை எங்களுக்குக் கொடுங்கள் என்று கேட்பதும், எந்தெந்தச் சட்டங்கள் அங்கே இருக்கிற சட்டங்கள் தங்களுக்குச் சாதகமோ அவைகளை

அப்படியே வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்பதும், இந்தச் சாமர்த்தியத்தை நான் பத்து வருஷங்களாகப் பார்த்து வருகிறேன். இதிலே சர்க்கார் அனுசரிக்க இருப்பது, எந்தெந்தச் சட்டங்களின் மூலமாக வருவாயைப் பெருக்கிக் கொள்ள முடியுமோ அந்தந்தச் சட்டங்கள கன்னியாகுமரிக்குக் கொண்டுவரப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், ஸார், இந்தப் பொறுக்குக் கமிட்டியில், 24 பேர்கள் கொண்ட கமிட்டியில் சுதந்திராக் கட்சியின் சார்பாக ஒரே ஒருவர் தான் போடப்பட்டிருக்கிறார். இதிலே, நன்றி மறப்பது..................................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நடைமுறைக் கேள்வி ஆகாது.

மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை : தலைவர் அவர்களே, சுதந்திராக் கட்சியின் சார்பில் ஒருவர் தான் போடப்பட்டிருக்கிறார் என்று கனம் ஆதிமூலம் வருத்தப்பட்டுக் கொண்டார். எங்களில் பாதிப் பேர்கள் கூட உங்களை ஆதரிப்பவர்கள். நாங்கள் இருப்பது கூட உங்களுக்காகத் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பேரவையின் முன் உள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமானவரி திருத்த மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 18/1967) கீழே குறிப்பிட்ட உறுப்பினர்கள் அடங்கிய இப்பேரவையின் ஆய்வுக்குழுவின் ஆராய்வுக்கு அனுப்பப்பட வேண்டும் :—

1 மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்.
2 மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி.
3 திரு. எஸ். ஜே. ராமசாமி.
4 திரு. என். கிட்டப்பா.
5 திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
6 திரு. க. ந. சிவபெருமாள்.
7 திரு. ந. தருமலிங்கம்.
8 திரு. கொளத்தூர் கோதண்டம்.
9 திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்.
10 திருமதி வி.ப. பழனியம்மாள்.
11 திரு. பெ. மலைச்சாமி.
12 திரு. மு. அலங்காரம்.
13 திரு. ஏ. வெள்ளத்துரை.
14 திரு. து. ப. அழகமுத்து.
15 திரு. பி.ஜி. கருத்திருமன்.
16 திரு. பி. ஜயராஜ்.
17 திரு. ப. மகாதேவன்.
18 திரு. இ.எம். சுப்பிரமணியம்.
19 திரு. எஸ். ராமசாமி நாயுடு.
20 திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்.
21 திருமதி கே.பி. ஜானகியம்மாள்.
22 திரு. ஏ. ஆர். மாரிமுத்து.
23 திரு. ஆ.கு. சுப்பையா.
24 திரு. க. ர. நல்லசிவன்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப் பேரவை விதிகளின் 99(1) விதிக்கு இணங்க, மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. கே.ஏ. மதியழகன் அவர்களை ஆய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

(ஏ) இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா, 1967 (சட்டப் பேரவை மசோதா எண் 13/1967).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Mr. Speaker Sir, I beg to move—

'That the Indian Stamp (Madras Amendment) Bill*, 1967 (L.A. Bill No. 13 of 1967) be taken into consideration.'

According to entry 23 of Schedule I to the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), stamp duty on conveyance is chargeable on the amount or value of the consideration for such conveyance as set forth therein. That is, the stamp duty is calculated on the basis of the consideration set forth in the instruments irrespective of the market value of the property conveyed. Parties present documents for registration specifying a lesser amount as consideration and thereby pay a lesser stamp duty and evade a large portion of the stamp duty payable to the Government. Under provisions of Section 64 read with Section 27 of the Indian Stamp Act if consideration (if any) and all other facts and circumstances effecting the chargeability of any instrument with duty or amount of the duty with which it is chargeable are not fully and truly set forth in the document, it is punishable with a fine which may extend up to Rs. 5,000. In practice, however, these provisions are found to be ineffective, because it is not possible to prove the consideration paid. There is a tendency on the part of the people to record in documents prices much lower than those for which they buy and sell with a view to pay lesser duty. This has resulted in loss of revenue to the Government. In order to check undervaluation of documents and derive what is legitimately due to the Government, this Bill is now brought before this House for levy of stamp duty on the basis of market value of the property. The same principle is proposed to be made applicable to instruments of gift and exchange.

This opportunity has also been availed of to make certain amendments to the Act which have become necessary to remove certain difficulties that have arisen in the working of the Act as explained in the statement of objects and reasons attached in the Bill.

The principle of this legislation has been accepted by the previous Government while in office. I request the House, Sir, to accept the motion.

*THIRU R. PONNAPPA NADAR: Mr. Speaker Sir, I rise to speak a few words regarding the salient points regarding the amendment to the Indian Stamp Act, 1899 in its application to the State of Madras.

The salient amendments are with regard to Section 27 of the Stamp Act. Section 27 deals with facts affecting duty to be set forth in instrument. Presently stamp duty is payable on the

* Published in the Fort St. George Gazette Extraordinary, dated 11th July 1967.

amount or value of consideration for such conveyance on the amount set forth therein. As per the new amendment, there is an addition of the words 'market value' and the amended Section 27 would read as follows :—

The consideration (if any) and the market value and all other facts and circumstances affecting the chargeability of any instrument with duty or the amount of the duty with which it is chargeable shall be fully and truly set forth therein.

The words 'market value' are not found in the original Act. Sir, in the statement of objects and reasons it has been stated that as per the existing law, stamp duty is calculated on the amount or value of consideration as set forth in the instrument irrespective of market value of the property conveyed. So, the main contention that has been raised on behalf of the Government is that the previous legislation does not make mention of the market value as a basis. But I would answer that point. The market value is an elusive thing even though there is an explanation found in Section 47 which I would just bring to this notice of the House. In Section 47 A it is stated—

'For the purpose of this Act market value of any property shall be estimated to be the price which in the opinion of the Collector of the Appellate Authority as the case may be, such property would have fetched or fetch if sold in the open market on the date of execution of the instrument of conveyance Exchange or Gift.'

According to this explanation market value is a notional concept and it would be very difficult to fix the market value. The determination of the market value is a thing which will have to be carefully thought of. In 'The Mail' paper a cartoon appeared recently and according to this cartoon, if a man wants to sell his house, first he will have to approach the Sub-Registrar who is the primary person who is to register the instrument and his valuation will have to be accepted. I am afraid, this would work as a great hardship in the hands of the unscrupulous Sub-registrars and that would be an engine of oppression. The rich people can very well afford to have their own way. But so far as the poor man is concerned, if he wants to sell a small piece of land he will be put to a great difficulty. It may be argued that there is a procedure for this. Primary valuation that has been fixed in the instrument is first of all accepted and whenever there is any dispute, that will be referred to the Collector for adjudication and then the Collector till then find out whether there is proper stamp duty. Then there is another process for appeal to the Subordinate Judge or the District Judge as the case may be. That is the legislation that is now contemplated. Such a cumbersome procedure, will not be in the interests of the poor people, because poor people cannot afford to engage a lawyer for the proceedings before the Collector or the adjudication by the Subordinate Judge or District Judge. This aspect may be consi- பி.ப. 1-00

dered by the Government. What I would urge for the consideration of the Hon. Minister is that the term ' market value ' may be defined. I searched the Indian Stamp Act and I was unable to lay my hands on the definition of the term in that Act. My submission is that market value differs from place to place. Revenue assessment is sometimes taken as the basis for determining market value. Under the Court Fees Act revenue assessment is taken as the basis. That may also cause hardship, because fertility of the soil and value of the land may differ from place to place. Effective check will have to be imposed against arbitrary determination of the market value by the Collectors and Sub-Registrars. This aspect may kindly be considered before this amendment is incorporated and rushed through.

Another point which I want to emphasis is with regard to the inclusion of gifts and exchanges within the ambit of this legislation. Market value is taken as the basis or criterion for determining the stamp duty payable on instruments relating to gifts and exchanges. Gifts are made out of love and affection. Love and affection are the only consideration and they canot be assessed in terms of market value.

With regard to exchanges also there will be difficulty. Suppose I have got a piece of land and my neighbour has got another piece of land and we want to exchange. It is only a question of mutual adjustment. Will it be wise on the part of the Government to bring gifts and exchanges with in the ambit of this legislation? This is the point that I want to bring to the notice of the Hon. Minister. It may be said that there is loss of revenue. Even under the present law, under section 64 of the Indian Stamp Act the District Registrars are clothed with the power and authority, to launch prosecutions, to initiate proceedings, call for the explanations of the parties concerned and fix the amount that is payable as Stamp Duty, if they feel that the instrument is not duly stamped. There is no necessity to bring in a fresh amendment. That is my contention.

Another point which I want to emphaise relates to the impounding of documents. A Supreme Court decision has been relied upon to show that the Collector cannot *suo moto* impound any instrument referred to him under Section 31 of the Act. If a document is insufficiently stamped and produced for registration, it could not be impounded—that is the provision found in the Indian Stamp Act now in force. Therefore it is said that the Collector should be clothed with full authority.

It will be proper and useful if 'market value' is defined in the Act itself and if gifts and exchanges are exempted from that defini tion. The provision made in clause 47-A will create difficulties These are the suggestions which I want to make.

Dr. H. V. HANDE : Mr. Speaker Sir, my good Friend Sri R. Ponnappa Nadar highlighted the legal aspects involved n this Bill. I am one with Sri Ponnappa Nadar in his contention

that this legislation is hurried through unnecessarily because, as he pointed out, there is no necessity for this legislation. This legislation is very much hurried through. Many legal experts have told me and I want to point out the feelings of the people outside. I shall not go into the legal aspect ; I shall go into the humanitarian aspect.

Wide discretionary powers are going to be vested in medium and small officers in which case there is a serious possibility of victimisation and even corruption creeping in. These discretionary powers should be removed. I will take the Madras Urban Land Tax Act for a comparative study. In that Act the Government gave to the officers fantastic powers, they divided the areas into different zones and wanted to fix the market value in each zone. The Act was published in the *Fort St. George Gazette* copies of which we also got. Then it went to the Court and the Court struck it down. The Members of the Treasury Bench know about it. The Court held that earmarking different zones and fixing the market value of land for each zone was arbitrary. That Act came in another form and in this second Act more discretionary powers were given. Even persons having small houses which will fetch a rent of twenty to fifty rupees were included and they will find it very difficult to pay the tax. I take the Urban Land Tax Act for comparison, because the same difficulties which arose in the working of that Act will arise in the working of this Act also.

I think it is too late to make any alterations in this Bill. Poor people cannot afford to secure legal aid. Friends like Mr. Ponnappa Nadar may render easy legal aid. But some advocates charge fantastic fees. Poor people will be hit hard. This is quite an arbitrary measure and it gives arbitrary powers. The idea underlying this amending Bill is that the revenue legitimately due to the Government should not be lost. The Government should not be cheated of its dues and that is a laudable object. I do not support anybody who tries to cheat the Government.

In this connection, the question of Stamp papers also come in. According to the Law Minister, even payment in cash is not acceptable in the Courts. After the coming into force of this Act. I want the Hon. Minister for Food to bestow immediate attention on obtaining adequate stamps from the Central Government and distributing them properly. Difficulties are not realised unless they are brought to notice. Poor people find it difficult to secure even stamps of the value of 25 Paise and 50 Paise. Even if they want to file a complaint, they have to affix stamps. All these things may be taken into consideration. I request the Hon. Chief Minister to give us some assurance in this matter.

The Hon. Thiru C. N. ANNADURAI : Mr. Speaker, Sir, I fully realise some of the difficulties that have arisen out of the paucity of stamp papers and the means of getting them. This Government have already intimated to the Central Government about that and they have also responded though in a very small way. We shall go on urging upon the Central Government to look into the matter.

As for the other points raised especially by my hon. Friend, Thiru Ponnappa Nadar that the new amendment to the Stamp Act will act as a harassment to the people, any law if it is miscarried will be a harassment and everybody accepts that. Because of the possibility of harassment, one cannot give up any legislation altogether. As far as this legislation is concerned, this House discussed previously and accepted one basic fact that there is large scale evasion as far as this stamp duty is concerned and the amount that is registered is not the real amount of money that they get. Somehow this loophole should be plugged and the present Government are only having that in view and even there, just to avoid harassment we have got appellate authorities for that. It is not as if the Registrar is empowered to say, this and this alone is the market value. If the amount that he settles as market value is not accepted by the Party, they have got the right to appeal to them. As far as the market value is concerned, my hon. Friend, Thiru Ponnappa Nadar has pertinently pointed out the defects noticed in some section of the Act, but he has qualified it by saying that it is very elusive. Of course, markets are elusive and therefore the market value is bound to be elusive. That is why it is to be a question of give and take. It is to be a question of one amount being declared by the Registrar and the parties saying that this is not the market value. They can discuss about it and even if they are not able to come to a conclusion, they can appeal against it. I may tell you one thing. This Government do not expect much increase of revenue directly out of this legislation. What we expect is that if there is such a prohibition through this amending Bill, people will be more sincere in their valuation because there will always be an apprehension in their mind that if they put the value of the property as Rs. 5,000 where it really is worth Rs. 50,000 they may think that if they put it at such a low value, it may not be registered, and therefore they will be a little more liberal. We expect indirect effect of this legislation rather than direct effect. If, in its working, we find some of the difficulties that have been raised by my hon. Friends, we certainly assure this House that we will look into the matter and do what is needed.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் மேல் நண்பர் கனம் பொன்னப்ப நாடார் அவர்களும், கனம் முதல் அமைச்சர் அவர்களும் குறிப்பிட்ட கருத்துக்களுக்கு நன்றி. ஆனால் ஒரு விஷயம்,, இதிலே அதிகமான ஏமாற்றுதல் இருக்கக் கூடாது, நியாயமான நிலை இருக்கவேண்டும் என்று சொல்வதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், திரு. பொன்னப்ப நாடார் குறிப்பிட்டது போல், நிலத்தின் விலை இடத்திற்கு இடம், பூமிக்குப் பூமி மாறுகிறது. ஒரே பூமி கூட, ரூ. 15,000 ரூ. 10,000 அல்லது ரூ. 7,000 என்று இருக்கிறது. ஆகவே என்னுடைய அபிப்பிராயம் இந்த மார்கெட் வால்யூ போடுவதைப் பற்றி புனராலோசனை செய்வதைவிட, 100க்கு ஏழரை ரூபாய் என்றிருப்பதை ரூ. 10 என்றுகூட உயர்த்திவிட்டால் ஒரு வரும்படியும் வரும், தொல்லைகளும் இருக்காது. இன்னொரு நிலைமையும் வரக்கூடும். இந்தத் தொந்தரவுகள் என்னத்திற்கு என்று, மக்கள் அத்தியாவசியமாக இருந்தாலொழிய விற்பனை செய்வது, வாங்குவது என்பதையே விட்டு விடலாம். அதனாலும், வருவாய் வெகுவாகக் குறையலாம். அதையும் அரசாங்கம் யோசிக்க வேண்டும். ஆகவே, நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால்,

" கிப்டுகள் ", " எக்ஸ்சேஞ்சுகள் " இவற்றிற்கு நீக்கம் கொடுப்பது நலமாக இருக்கும். மார்க்கெட் வால்யூ நிர்ணயிப்பதை சர்க்கார் ரூல்களிலே போடலாம் என்று நினைக்கிறேன். அப்படிச் செய்தால் மார்க்கெட் வால்யூ விற்குக் குறைவாகச் செய்யக் கூடாது என்கிற பயம் மக்களுக்கு உண்டாகும். அதே சமயத்திலே, சர்க்கார் விதிகளில் நிர்ணயித்துக் கொள்ளலாம் என்பதைக் குறிப்பிட்டு, முடிக்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல் அமைச்சர் பேசிய பிறகு நான் கூறுவதற்கு அதிகம் இல்லை. கனம் உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் மார்க்கெட் வால்யூ ஏதோ மாயப் பொருள் போலச் சொன்னார்கள். இந்த மசோதாவிலே இல்லையென்றாலும், ஏற்கனவே மார்கெட் வால்யூ என்பதை எப்படி நிர்ணயிக்க வேண்டும் என்பதற்கு பல கோர்ட்டு தீர்ப்புக்கள் இருக்கின்றன. அதோடு கூட, வெல்த் டாக்ஸ் ஆக்ட், கிப்ட் டாக்ஸ் ஆக்ட், இவற்றில் மார்கெட் வால்யூ என்பதற்கு இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. அதேபோல அர்பன் லாண்ட் டாக்ஸ் ஆக்டிலும் மார்க்கெட் வால்யூவிற்கு இலக்கணம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவிலும் அந்த அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது. அதோடு பல கோர்ட்டு தீர்ப்புக்களும் இருக்கின்றன. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், மார்க்கெட் வால்யூ என்பது,

'Market value is what the willing vendor and willing purchaser will agree on'

என்பதுதான் கோர்ட்டு தீர்ப்பு. சம்பிரதாயமும் அதுதான். விற்கிறவரும் வாங்குகிறவரும், இருசாராரும், ஒருமித்து சம்மதிக்கும் தொகை தான். அது கிப்ட் டாக்ஸ் ஆக்டிலும், வெல்த் டாக்ஸ் ஆக்டிலும், அதே போல நம்முடைய அர்பன்லாண்ட் டாக்ஸிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவை ஏற்கனவே இருந்த சர்க்கார் கொள்கையளவில் ஆதரித்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொண்டு, அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் தான் இன்றைக்கு எதிர்க்கட்சி நண்பர்கள். ஆகவே, அவர்களும் இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கேட்டு, இதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி—

"1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 13/1967) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு, ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" 1967-ம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் (தமிழ்நாடு திருத்த) மசோதா (சட்டப்பேரவை மசோதா எண் 13/1967) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்.

என்று முன்மொழிகிறேன். பிற்பகல் 1-22

மசோதா சட்டமாக ஆக்கப்படவேண்டுமென்ற தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(ஐஐ) இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதா, 1967.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1967-ஆம் ஆண்டு, இந்து திருமண (தமிழ்நாடு திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த நான் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இந்த மசோதாவை அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

இத்துடன் இன்றைய அலுவல்கள் முடிவடைகின்றன. நாளைக் காலை 9 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports, Notifications and other Papers.

*112. Notification issued with G.O. Ms. No. 2195, R.D.& L.A., dated the 16th September 1966, making an amendment to the Madras Town Planning Rules, 1933, published at pages 111 and 112 of Part I-A of the *Fort St. George Gazette*, dated the 8th March 1933, as subsequently amended under the Madras Town Planning Act, 1920 (Madras Act VII of 1920.)

*113. Annexure to the Indian Stamp (Madras Amendment) Bill, 1967 (L.A. Bill No. 13 of 1967).

† 114. The Madras Appropriation (No. 2) Bill, 1967.

* Laid on the table of the House on 15th July 1967.

† Despatched to all Members on 14th July 1967.

இணைப்பு I.

504-ம் பக்கத்தில் உடுக் குறியிட்ட வினா எண் 372-க்கான விடையைக் காண்க.)

1966–67-ம் ஆண்டில் சினிமா காட்சிகள் மூலம் வாணிக வரி மாவட்டவாரியாகக் கிடைத்த வருமானம் பற்றிய விவரங்கள்.

வாணிகவரி மாவட்டம்.	1939-ம் ஆண்டின் தமிழக கேளிக்கை வரிச் சட்டத்தின் கீழ்.		1961-ம் ஆண்டின் தமிழக உள்ளாட்சி நிறுவன நிதிச் சட்டத்தின் கீழ்.	
(1)	(2)		(3)	
	ரூ.	பை.	ரூ.	பை.
1 சென்னை I	10,04,320	06	10,48,320	02
2 சென்னை II	98,382	19	1,05,857	19
3 சென்னை III	3,63,581	87	3,80,241	40
4 சென்னை IV	17,00,505	92	17,73,395	42
5 சென்னை V	21,42,699	05	22,06,896	51
6 சென்னை VI	10,67,751	87	11,27,625	19
7 செங்கற்பட்டு	17,52,470	99	16,96,509	30
8 திருச்சிராப்பள்ளி (நகர்) ..	13,69,868	30	11,61,491	25
9 திருச்சிராப்பள்ளி (கிராமம்).	8,57,990	35	8,92,014	99
10 தஞ்சாவூர்	10,19,167	51	9,14,356	25
11 கும்பகோணம்	9,24,347	66	8,90,657	76
12 தென்னாற்காடு	14,94,319	61	13,59,112	49
13 வட ஆற்காடு	16,85,191	86	17,88,674	47
14 மதுரை	17,16,956	46	17,76,175	46
15 இராமநாதபுரம்	11,01,723	99	11,26,617	30
16 திண்டுக்கல்	12,09,005	18	12,17,679	83
17 திருநெல்வேலி	9,13,831	34	9,49,652	04
18 தூத்துக்குடி	7,74,528	29	8,03,441	08
19 கோயம்புத்தூர்	16,79,713	09	17,70,469	48
20 ஈரோடு	10,13,242	04	11,31,378	29
21 பொள்ளாச்சி	11,56,526	56	11,38,285	09
22 சேலம்	21,48,859	91	22,22,751	75
23 நீலகிரி	13,43,046	12	12,98,765	00
	2,85,38,030	22	2,87,80,367	56

Districtwise particulars of entertainments tax collected during the year 1966–67.

Commercial Tax Districts.	Under Madras Entertainment Tax Act, 1939.		Under Madras Local Authorities Finance Act, 1961.	
(1)	(2)		(3)	
	RS.	P.	RS.	P.
1 Madras I	10,04,320	06	10,48,320	02
2 Madras II	98,382	19	1,05,857	19
3 Madras III	3,63,581	87	3,80,241	40
4 Madras IV	17,00,505	92	17,73,395	42
5 Madras V	21,42,699	05	22,06,896	51
6 Madras VI	10,67,751	87	11,27,625	19
7 Chingleput	17,52,470	99	16,96,509	30
8 Tiruchirappalli (T)	13,69,868	30	11,61,491	25
9 Tiruchirappalli (R)	8,57,990	35	8,92,014	99
10 Thanjavur	10,19,167	51	9,14,356	25
11 Kumbakonam	9,24,347	66	8,90,657	76
12 South Arcot	14,94,319	61	13,59,112	49
13 North Arcot	16,85,191	86	17,88,674	47
14 Madurai	17,16,956	46	17,76,175	46
15 Ramanathapuram	11,01,723	99	11,26,617	30
16 Dindigul	12,09,005	18	12,17,679	83
17 Tirunelveli	9,13,831	34	9,49,652	04
18 Tuticorin	7,74,528	29	8,03,441	08
19 Coimbatore	16,79,713	09	17,70,469	48
20 Erode	10,13,242	04	11,31,378	29
21 Pollachi	11,56,526	56	11,38,285	09
22 Salem	21,48,859	91	22,22,751	75
23 The Nilgiris	13,43,046	12	12,98,765	00
	2,85,38,030	22	2,87,80,367	56

இணைப்பு II.

(508-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 376-க்கான விடையைக் காண்க.)

(அ) (இ) தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி (டன்களில்).—

ஆண்டு.	அரிசித்தவிடு.	வேர்கடலைப் பிண்ணாக்கு.
(1)	(2)	(3)
1957–58	111·77	இல்லை.
1958–59	294·65	4,345·65
1959–60	69·09	8708·56
1960–61	இல்லை.	704.12
1961–62	இல்லை.	224
1962–63	1,180	7,832
1963–64	1,122	853
1964–65	5,781	இல்லை.
1965–66	இல்லை.	இல்லை.

(உ) தமிழகத்திலிருந்து இந்தியாவிலுள்ள ஏனைய மாநிலங்களுக்கு ஏற்றுமதி (டன்களில்).—

ஆண்டு.	அரிசித்தவிடு.		வேர்கடலைப் பிண்ணாக்கு.	
	ரயில் வழி.	நீர் வழி.	ரயில் வழி.	நீர் வழி.
(1)	(2)	(3)	(4)	(5)
1957–58	புள்ளி விவரம் கிடைக்கவில்லை.	புள்ளி விவரம் கிடைக்கவில்லை.	108·82	0·15
1958–59	,,	,,	*883·15	0·41
1959–60	,,	,,	*588·95	0·51
1960–61	,,	,,	19,210·00	புள்ளி விவரம் கிடைக்கவில்லை.
1961–62	,,	ரூ. 25 (மதிப்பு)	*19,433·50	22·00
1962–63	,,	இல்லை.	*28,377·00	1·00
1963–64	,,	,,	*32,604·20	85·00
1964–65	,,	புள்ளி விவரம் கிடைக்கவில்லை.	1,52,420·50	புள்ளி விவரம் கிடைக்கவில்லை.
1965–66	,,	,,	23,585·70	,,

*எல்லா வகையான பிண்ணாக்குகள் புள்ளி விவரங்களில் அடங்கும்.

(*a*) and (*b*) Export from Madras State to Foreign Countries (in tonnes)—

Year.	*Rice bran.*	*Groundnut oil cake.*
(1)	(2)	(3)
1957–58	111·77	Nil.
1958–59	294·65	4,345·65
1959–60	69·09	8,708·56
1960–61	Nil.	704·12
1961–62	Nil.	224
1962–63	1,180	7,832
1963–64	1,122	853
1964–65	5,781	Nil.
1965–66	Nil.	Nil.

(*c*) Export from Madras State to other States in India (in tonnes)—

Year.	*Rice bran.*		*Groundnut oil cake.*	
	Railborne.	*Coasting.*	*Railborne.*	*Coasting.*
(1)	(2)	(3)	(4)	(5)
1957–58	Not available.	Not available.	108·82	0·15
1958–59	Do.	Do.	* 883·15	0·41
1959–60	Do.	Do.	* 588·95	0·51
1960–61	Do.	Do.	* 19,210·00	Not available.
1961–62	Do.	Rs. 25 (value)	* 19,438·50	22·00
1962–63	Do.	Nil.	* 28,377·00	1·00
1963–64	Do.	Nil.	* 32,604·20	85·00
1964–65	Do.	Not available.	1,52,420·50	Not available.
1965–66	Do.	Do.	23,585·70	Do.

* *Figures include all kinds of oil cakes.*

இணைப்பு III.

[511-ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 378-க்கான விடையைக் காண்க.]

1967-ம் ஆண்டு மே திங்கள் வரையில் இம் மாநிலத்தில் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளினால் சரும்புத்தீர்வையாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையும் தொழிற் சாலைப் பகுதி ஒவ்வொன்றிலும் சாலை வேலைகளுக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையும்.

சர்க்கரை ஆலையின் பெயர்.	ஆலை துவக்கப்பட்ட தேதி.	ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும் 1960–61 முதல் 1967 வரை கரும்புத் தீர்வையாக வசூலிக்கப்பட்ட தொகை.		1967 மே வரை ஒவ்வொரு தொழிற்சாலைப் பகுதியிலும் சாலை வேலைக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை.
(2)	(3)	(4)		(5)
		ரூ.	பை.	(ரூபாய் லட்சத்தில்.)
அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், A. K. புத்தூர், கோயம்புத்தூர் மாவட்டம்.	22—6—1960	6,60,112	59	3·49
வடஆர்க்காடு மாவட்டக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், ஆம்பூர்.	25—11—1960	29,81,260	48	5·83
மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட் படாளம், செங்கற்பட்டு மாவட்டம்.	22—3—1961	12,31,594	61	11·68
சேலம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மோகனூர்.	6—4—1964	10,40,861	88	4·18
தேசியக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், அலங்காநல்லூர்.	23—12—1966	..		3·83
கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை லிமிடெட், மூங்கில்துரைப்பட்டு.	12—2—1967	..		..

Total amount of sugarcane cess paid by the co-operative sugar factories in the State up to May 1967 and the amount sanctioned for road works in each factory area.

Serial number and name of the sugar factory.	*Date of starting of the factory.*	*Amount collected as cane cess from 1960-61 up to 1967 from each factory.*		*Amount sanctioned for road work in each factory area up to May 1967.*
(1)	(2)	(3)		(4)
		RS.	P.	(RUPEES IN LAKHS.)
1 Amaravathi Co-operative Sugar Mills, Ltd., A. K. Puthur, Coimbatore district.	22nd June 1960.	6,60,112	59	3·49
2 North Arcot District Co-operative Sugar Mills, Ltd., Ambur.	25th November 1960.	29,81.260	48	5·83
3 Madurantakam Co-operative Sugar Mills, Ltd., Padalam, Chingleput district.	22nd March 1961.	12,31,594	61	11·68
4 Salem Co-operative Sugar Mills, Ltd., Mohanur.	6th April 1964.	10,40,861	88	4·18
5 The National Co-operative Sugar Mills, Ltd., Alanganallur.	23rd December 1966.	..		3·83
6 The Kallakurichi Co-operative Sugar Mills, Ltd., Mongilthuraipatti.	12th February 1967.	..		..

65026

V2ll, 31 N67
D L

N67.5.5

LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, Egmore, Madras-8.
THE CITY BOOK Co., Mylapore, Madras-4.
Messrs HIGGINBOTHAMS, PRIVATE LIMITED Madras-2.
Messrs NEW CENTURY BOOK HOUSE (PRIVATE) LIMITED, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, Madras-5.
Sri S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
THE EDUCATIONAL AGENCIES, BOOK-SELLERS, Madras-1.
THE UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET, Madras-3.
Messrs. RUKMANI CORPORATION, Vepery, Madras-7.
Messrs. MOHAN PATHIPAGAM AND BOOK DEPOT, Madras-5.
Messrs. BOOK CORNER, BOOK-SELLERS, No. 2/4, Mount Road, Madras-2.

IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs. VIVEKANANDA PRESS, PRINTERS, PUBLISHERS AND BOOK-SELLERS, Madurai.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. KRISHNASWAMY & Co., Tiruchirappalli.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs. NELLAI PUTHAGA NILAYAM, BOOK-SELLERS, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. JAGANNATHAN, BOOK-SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukkottai.
Messrs. K. V NARAYANA IYER & SONS, Dindigul, Madurai district.
Messrs. BALAJI BOOK HOUSE, Vellore, North Arcot district.
Messrs. JAYAKUMARI STORES, Nagercoil, Kanyakumari district.
Messrs. BABY STORES, BOOK-SELLERS, Villupuram, South Arcot district.
Messrs. DINAMANI STORES, Coimbatore-18.
Messrs. BHARATHI PUTHAGA NILAYAM, PUBLISHERS AND BOOK-SELLERS, 1-B, Town Hall Road, Madurai-1.

IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK-SELLERS, Gudur.
Messrs. JAIN BOOK AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. FIRMA K. L. MUKHOPADHYAY, Calcutta-12.
Messrs. BOOK LINKS CORPORATION, Narayanaguda, Hyderabad-29.
Messrs. THE BOOKS SYNDICATE, Hyderabad-1.
Messrs. LABOUR LAW PUBLICATIONS, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.

(1)	(2)	(1)	(2)